Registered as a News paper in Sri Lanka    பக்கங்கள்: 12    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி    THE EELANAATHAM    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஹூ சித்திரை மீ 28 ஆம் உ    வெள்ளிக்கிழமை    (11 - 05 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா 15    ஓசை 82

## ஜப்பான் கச்சானுக்கு உதவி

(முல்லைத்தீவு)

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் ஜப்பான் நிறுவன நிதி உதவியுடன் கூட்டுறவு முறையில் கோடைப்போகக் கச்சான் செய்கையில் ஈடுபடவுள்ளனர். இப்பயிர்ச் செய்கையில் ஐம்பது பேர்கொண்ட குழுக்கள் பங்குபெறவுள்ளனர்.

இப்பயிர்ச் செய்கையில் ஆரம்ப காலந்தொட்டு அறுவடைக் காலம்வரை வேலை செய்பவர்களுக்கு நாளாந்தச் சம்பளம் வழங்கப்படும். அத்துடன் இப்பயிர்ச் செய்கையில் வரும் இலாபமும் பகிர்ந்தளிக்கப்படும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென நூறு ஏக்கர் நிலமும், பெரும்போகச் செய்கைக்கென ஐந்நூறு ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு இலவசமாக விதைக் கடலைகள் கிடைக்க இருப்பதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரையோரப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரகு அவர்கள் கூறியுள்ளார். (58)

# புலிகளின் வரி விதிப்பில் வர்த்தகர் மோசடியா?

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு ரூபா 50 லட்சம் ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்திலிருந்து 1990ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கு 50 லட்சம் ரூபா வழங்க ஈழவர் ஜனநாயக முன்னணியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் முன்வந்துள்ளன.

இப் பணத்தில் இதுவரை 27 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றுஅப்பணத்திற்கான வேலைகளை துரித கெதியில் செய்து முடிக்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், உதவி திட்டமிடல் பணிப்பா

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் கொழும்பு புகையிரதம் ஓடஆரம்பித்து விட்டபோதிலும் யாழ் வைத்தியசாலையில்முக்கியமான சில மருந்துவகைகள் தட்டுப்பாடு நிலவுவது குறித்து யாழ் வைத்தியசாலை மருந்தக காப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்

மேலும் அவர்கள் மருந்து தட்டுப்பாடுநிலைமை பற்றி கருத்து தெரிவிக்கையில் எமக்கு தற்போது விசர்நாய்க்கடி மருந்து உட்பட தோலை விறைக்கவைக்கப் பயன்படுத்தும் மருந்தும் சத்திர சிகிச்சையின் போது அளிக்கப் படும் மயக்க மருந்தும் துப்பரவாகத் தீர்ந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர் (லோ)

## வாக்காளர் பட்டியலில் தனிச் சிங்களம்!

(கம்பளை)

கம்பளைப் பிரதேசத்தில் தேர்தல் திணைக்களத்தினால் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள 1989 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளன,

இதனால் இப்பிரதேச மக்கள் தம் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம்பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள தொழிற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாவனையாளர்கள் மீது பழுவை சுமத்துவதைத் தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மக்களின் அத்தியாவசியப் பொருட்களான மா, சீனி, அரிசி போன்றவற்றில் நாங்கள் வரி விதிக்கவில்லை. குடிவகைகளுக்கும், ஆடம்பரப் பொருட்களுக்குமே நாம் வரிகளை விதிக்கின்றோம். நாங்கள் வரி பெறும்போது குறைந்த வருமானத்தில் வாழும் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றோம் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

இலங்கையின் தென் பகுதியில் பொருட்களின் விலைகளுக்கும், வடக்கு கிழக்குப் பகுதியில் பொருட்களின் விலைகளும் இடையில் பெருமளவில் விலை வித்தியாசம் நிலவுவது தொடர்பாகவும் குறிப்பிட்டபோது விடுதலைப் புலிகளின் வரி என்ற போர்வையில் மக்கள்மீது வியாபாரிகள் பெரும் சுமைகளைச் சுமத்துகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் மக்களைச் சுரண்டி லாபம் பெறுபவர்களிடம் இருந்து குறிப்பிடக்கூடிய வரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் காமினி

(லண்டன்)

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா லண்டன் வந்து சேர்ந்திருக்கிறார். இவர் தமது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்யக் கூடுமென்றும் இப்போதைக்கு நாடு திரும்ப மாட்டாரென்றும் கூறப்படுகிறது.

## கம்பித் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். தொலை பேசித் தொடர்பு அலுவலகத்துக்கு அண்மையில் நேற்றுமாலை ஒன்பது மணியளவில் செப்புக் கம்பிகளை திருடர் வெட்டியெடுத்துள்ளார்கள். சுமார் 65 யார் நீளமுள்ள தொலைபேசித் தொடர்புக் கம்பி வெட்டப்பட்டுள்ளதாம். இதனால் நேற்றுமாலை முதல் தொலை பேசித் தொடர்புகள் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளன.

இத் தொலை பேசிக் கம்பித் திருட்டு தொடர்ந்து பல தடவைகள் இடம்பெற்றுள்ளதும், கடந்த முறை திருடியோர் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## நினைவஞ்சலிக் கூட்டம்.

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னைநாள் தலைவர் அமரர் டி.எஸ் கே. வணசிங்கா அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## வவுனியா ரயில் நிலையத்தில் பிரயாணிகளுக்கு நெருக்கடிகள்

(வவுனியா)

வவுனியா ரயில் நிலையத்தில் ஆட்பதிவு செய்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் நாளாந்தம் பிரயாணிகள் சிரமப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் மேற்படி ரயில் ... என்றும் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சிக்கு

## இந்தியப் படையினால் 3 கோடி 20 லட்சம் நட்டம்

(கிளிநொச்சி)

இந்திய அமைதிப்படையினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 3 கோடி 20 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி கச்சேரியினால் மதிப்பீடுசெய்யப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கட்டிடங்களை இந்திய அமைதிப்படை உடைத்துச்

(4ஆம் பக்கம் பார்க்க)

சிற்றூழியர் நியமனம்

## அமைச்சு நேரடியாக வழங்குவதால் பற்றாக்குறையைத் தீர்க்க முடியாது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வைத்திய சாலை சிற்றூழியர்கள் தேவை காரணமாக மீண்டும் இப்பதி னைந்து சிற்றூழியர்களையும் தேர்ந்தெடுப்பதற்கோ தமக்கு

யாழ். போதனா வைத்தியசாலையில்

## நவீனவசதிகள் கொண்ட புதிய

## தனிச் சிங்களம்!

(கம்பளை)
கம்பளைப் பிரதேசத்தில் தேர்தல் திணைக்களத்தினால் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள 1989 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளன,

இதனால் இப்பிரதேச மக்கள் தம் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம்பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள தொழிற்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

இருக்கின்றோம் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

இலங்கையின் தென் பகுதியில் பொருட்களின் விலைகளுக்கும், வடக்கு கிழக்குப் பகுதியில் பொருட்களின் விலைகளும் இடையில் பெருமளவில் விலை வித்தியாசம் நிலவுவது தொடர்பாகவும் குறிப்பிட்டபோது விடுதலைப் புலிகளின் வரி என்ற போர்வையில் மக்கள்மீது வியாபாரிகள் பெரும் சுமைகளைச் சுமத்துகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் மக்களைச் சுரண்டி லாபம் பெறுபவர்களிடம் இருந்து குறிப்பிடக்கூடிய வரி

(4ஆம் பக்கம் பார்க்க)

---

...க்கு நாடு திரும்ப மாட்டாரென்றும் கூறப்படுகிறது.

---

...சிங்கா அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

---

சிற்றூழியர் நியமனம்

# அமைச்சு நேரடியாக வழங்குவதால் பற்றாக்குறையைத் தீர்க்க முடியாது

(யாழ்ப்பாணம்)
அண்மையில் வைத்தியசாலை ஊழியர் நியமன அதிகாரங்களைசுகாதார அமைச்சு தனதுகையில் எடுத்துக்கொண்டமையால் யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்காலிக சேவையில் நியமிக்கப்பட்டிருந்த பதினைந்து சிற்றூழியர்கள் அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதுடன் இவர்களுக்குப் பதிலாகப் பயிற்சிக்குச் சென்று திரும்பியவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மேலும் வைத்தியசாலை சிற்றூழியர்கள் தேவை காரணமாக மீண்டும் இப்பதினைந்து சிற்றூழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கோ அன்றி உடன் நேர்முகப்பரீட்சையை வைத்து அனுபவத்துடன் இருக்கும் இந்தப் பதினைந்து சிற்றூழியர்களையும் தேர்ந்தெடுப்பதற்கோ தமக்கு அதிகாரம் தற்போது பறிக்கப்பட்டிருப்பதால் தாம் எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

---

## சாம் இறுதிக் கிரியைக்கு கலாவும் கொண்டுவரப்பட்டார்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. சாம். தம்பிமுத்துவின் இறுதிச் சடங்குகள் நேற்றுமாலை கனத்தை மயானத்தில் நடைபெற்ற போது படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி கலா மாணிக்கம் ஆஸ்பத்திரி ஸ்ரெச்சரில் மயானத்துக்குக் கொண்டுவரப்பட்டார். கணவரின் பூதவுடலை சில விநாடிகள் பார்த்தபடி படுத்திருந்த திருமதி கலா பின்னர் ஆஸ்பத்திரிக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

---

## வவுனியா ரயில் நிலையத்தில் பிரயாணிகளுக்கு நெருக்கடிகள்

(வவுனியா)
வவுனியா ரயில் நிலையத்தில் ஆட்பதிவு செய்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் நாளாந்தம் பிரயாணிகள் சிரமப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் மேற்படி ரயில் நிலையப் பகுதியில், கிணற்றில் தண்ணீர் இருந்தும், குழாய் மூலம் பிரயாணிகளுக்குத் தண்ணீர் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த நான்கு வருடங்களாக இந்நிலை நீடித்து வருவதாகவும் இதற்குப் பொறுப்பான கட்டட முகாமி இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

---

கிளிநொச்சிக்கு

## இந்தியப் படையினால் 3 கோடி 20 லட்சம் நட்டம்

(கிளிநொச்சி)
இந்திய அமைதிப்படையினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 3 கோடி 20 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி கச்சேரியினால் மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கட்டிடங்களை இந்திய அமைதிப்படை உடைத்துச்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

யாழ். போதனா வைத்தியசாலையில்

# நவீனவசதிகள் கொண்ட புதிய பகுதி அமைப்பதில் சிக்கல்

(யாழ்ப்பாணம்)
யாழ்க்குடா நாட்டில் மேலும் ஒரு அதிநவீன வசதிகள் கொண்ட 1200 படுக்கை வசதிகளுடன் ஓர் புதிய வைத்தியசாலையை திருநெல்வேலியில் அமைத்துத்தர சௌக்கியதானத்திணைக்கள செயலாளர் உறுதி கூறியுள்ளார்.

இவ் வைத்தியசாலை ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் அமைக்கப்பட உள்ளது ஆனால் யாழ் போதனாவைத்தியசாலையுடன் புதிய வைத்திய வசதிகளுடன் 500 படுக்கைவசதிகள் கொண்ட ஓர் வைத்தியசாலை அமைப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக யாழ். வைத்தியசாலை உயர்மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனா ஆனாலும் மருத்துவ பீடத்துடன் அதிக வசதிகள் கொண்ட ஒரு வைத்தியசாலை அமைப்பதால்அங்கு ஆராய்ச்சிகள் செய்வதற்கும், வைத்தியசாலைப் பரிசோதனைகள் செய்வதற்கும் அது பேருநவியாய் இருக்கும் எனவும் இவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (லோ)

---

### சார்க் மகாநாடு தொடர்ந்தும் இழுபறி

சார்க்மாநாடு இலங்கையில் நடைபெறுமா என்பது பற்றி இன்னமும் ஒரு முடிவும் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கையில் நடாத்துவது சம்பந்தமாக பாகிஸ்தானுக்கு இலங்கை எழுதிய கடிதத்துக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லையாம். மாலைதீவில் நடாத்த வேண்டுமென்று மாலைதீவுவற்புறுத்திவருவது தெரிந்ததே! இன்னமும் சார்க் மாநாடு இழுபறி நிலையிலேயே இருந்து வருகிறது.

---

### மின் கட்டணம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)
இலங்கை மின்சாரசபையினால் புதிய மின்கட்டண அதிகரிப்பு விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

01 - 50 அலகுகள் 65சதம் 75சதமாக அதிகரிப்பு.

51 – 100 வரையிலான அலகுகள் 1ரூபா 25சதம் 2ரூபா 20சதமாக அதிகரிப்பு.

101 – 450 வரையிலான அலகுகள் 3 ரூபா 20 சதம் 4ரூபா 20சதமாக அதிகரிப்பு. (37)

---

## ஆண்டு ஒன்பதில் தொழில், தொழில் நுட்பப் பாடங்கள்

(கொழும்பு)
அரசாங்கம் சகல பாடசாலைகளிலும் ஆண்டு 9முதல் தொழில் பாடத்தையும், தொழில் நுட்பப் பாடத்தையும் அறிமுகப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முதல் மாணவர் தொழில் பாடத்தில் அல்லது தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடைய வேண்டும்.

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது;

இது விடயமாக நான் ஒரு பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. விசேடமாக உயர்கல்விக்கு முக்கியத்துவம்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

பருத்தித்துறை

## மெதடிஸ்த கல்லூரியைத் தரமுயர்த்த கோரிக்கை

(பருத்தித்துறை)
வடமராட்சிப் பகுதியில் முன்னணியில் திகழும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியை அபிவிருத்திக் கல்லூரியாகத் தரமுயர்த்துமாறு கல்லூரியின் அபிவிருத்திச் சபை கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியைக் கேட்டுள்ளது.

அமைச்சர் திரு. அத்துலத் முதலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை ஆண்களுக்கான அபிவிருத்திக் கல்லூரியாகத் தரமுயர்த்தியது போன்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியைப் பெண்களுக்கான அபிவிருத்திக் கல்லூரியாகத் தரமுயர்த்த வேண்டும்.

இம் மகஜரின் பிரதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

### முல்லை மாவட்டத்தில்

## 11 உப-தபால் நிலையங்கள் அமைக்கப்படும்

(முல்லைத்தீவு)
பிரதம இலிகிதர் நடராசா அவர்கள் உதவியால் தபால் அலுவலக உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு இன்றாவது கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் உபதபால் அலுவலகங்களைத் திறக்கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு நேற்று முன்தினம் முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் கொக்கிளாய் உபதபால் நிலையத் திறப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

உதவி அரசாங்க அதிபர் கந்தசாமி, கமநல சேவைகள் உதவி ஆணையாளர் செ. பஞ்சலிங்கம், மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

# மட்டக்களப்பு பாடசாலைகளும் இரு நேரப் பாடசாலை

(மட்டக்களப்பு)
யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளைப்போல மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளும் இரு நேரமாக இயங்கவுள்ளன.

இம்மாதம் 14ஆம் திகதிமுதல் இரு நேர வகுப்புக்களை நடாத்தக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இங்கு இதற்கு முன்னரும் ஒரு நேரமாக இயங்கிய சில பாடசாலைகளும் இரு நேர வகுப்புக்களை நடாத்த ஏற்பாடாகியுள்ளது. (37)

---

# "பிரச்சினைகளை நகைச்சுவை மூலம் எடுத்துக்காட்டியவர் சுந்தர்"

## சித்திரக்கொத்து வெளியீட்டில் உரை

(யாழ்ப்பாணம்)
ஈழத்து சஞ்சிகைத்துறையில் முக்கிய இடம் வகித்த நகைச்சுவைச் சஞ்சிகை சிரித்திரனாகும். யாழ்ப்பாணக் கலாசாரங்களை தெளிவாக எடுத்துக்காட்டும் ஒரேயொரு சஞ்சிகைகளில் சிரித்திரனில் நகைச்சுவைமூலம் எங்களை நாமே பார்க்கக்கூடியதாக இருந்தது. ஜனநாயக சித்தாந்தங்களின் தவறுகளை தங்களில் பார்த்து அறிதலே இதன் சிறப்பாகும். நகைச்சுவையுடன் வாழ்க்கையின் உண்மை நிலைபுலப்பட இலகு முறையில் புரிந்துகொள்ள சிரித்திரன் வழிவகுத்தது இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பலமட்டங்களில் உள்ளவர்களின் பிரச்சினைகளை நகைச்சுவை மூலம் வெளிக்கொணரமுடியும் என்பதற்கு சிரித்திரன் எடுத்துக்காட்டா

(4ஆம் பக்கம் பார்க் )

---

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இவ்வாண்டு இறுதிக்குள்

(வவுனியா)
மாநகரசபைகள், நகரசபைகள். பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை இவ்வாண்டு நடாத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவை சம்பந்தமான சுற்று

(4-ஆம் பக்கம் பார்க்க)

# புதிய சோனக தெரு சுகாதாரவிருத்தி கருத்தரங்கு

(முஸ்லிம் வட்டாரம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். புதிய சோனகதெரு சிற்றூர்அவையினால் இக்கிராமத்தின் சுகாதரா அபிவிருத்தி சம்பந்தமாக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கில் புதிய சோனகதெருப் பகுதியில் தண்ணீர், மலசலகூடம், வடிகால் சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இக்கிராமத்தின் சாக்கடை நீர்த்தேக்கநிலையினை அகற்றுவதற்கும், மலசல கூடங்கள் அமைப்பதற்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மூலம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் புதிய சோனகதெரு மக்கள் முன்னணி சிற்றூர் அவை உறுப்பினர்களும், சனசமூக நிர்வாகிகளும் ஜனசக்தி குழுக்களும் கலந்து கொண்டனர். (52)

## நிவாரணம் வழங்கவில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களுக்கு இன்னமும் வழங்கப்படாதிருக்கும் மீளக் குடியமர்தல் நிவாரணத்தை வழங்கவேண்டுமென நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மூலம் மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதனை வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த முயற்சி மேற்கொள்வார்கள் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (62

# புனாணையில் இன்னும் இராணுவத்தினர் சோதனை

மட்டக்களப்பு - பொலன்னறுவ வீதியில் புனாணை என்ற இடத்தில் இராணுவத்தினரின் சோதனைகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

இந்திய இராணுவம் இங்கிருந்து சென்றபின்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இலங்கை இராணுவ பொலிஸ் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கே ஆனையிறவு தடை முகாமிலும் தற்போது எதுவித சோதனைகளும் நடைபெறுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் புனாணையில் பஸ்கள், வாகனங்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் இறக்கி சோதனைகள் நடைபெறுகிறது.


# கொம்பியூட்டர் கல்வி

**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

**4 - MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்; **20 - 5 - 1990**

**Fees — மாதம் 300/- மட்டுமே**

- Lectures by Members of the Institute of Data Proccessing Management (London)
- Practicals on I. B. M. (Compatibles)
- More Hours of Practicals
- தமிழிலும் விளக்கங்கள்
- Valuable Certificate on Completion of Course.

d BASE III+, LOTUS 1,2,3, WORD-PROCESSING C. I. M. A., I. A. B., SHORTHAND& TYPING நடைபெறுகின்றன.

For further details;

School of Business Administration

(LEADERS IN COMPUTER EDUCATION)

**16, 3rd Cross Street.**

(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)

யாழ்ப்பாணம்.

B-658



பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கான

கட்டிட வேலைகளுக்கான

## கேள்விப் பத்திர அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை (1990. 5. 24) காலை 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும்வேலைகளுக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கும் அல்லது அதனிலும் கூடிய தொகைக்கும் கட்டிட வேலை செய்வதற்கென அரச திணைக்களம் ஏதாவதொன்றில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி (1990. 5. 18) பிற்பகல் 2 மணி வரை மீளளிக்கப்படும் / மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணங்களைச் செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியன கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி (1990. 5. 24) காலை 11. 30 மணிக்கு கிளிநொச்சி பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். இச் சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவுகள் இரத்துச் செய்யப்படும். இக்கட்டிட வேலைகளுக்கான கொடுப்பனவுகள் யாவும் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளரினால் (அரசாங்க அதிபரினால்) மேற்கொள்ளப்படுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

மேலதிக விபரங்களைக் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைகள் கட்டிட வேலைப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்
கிளிநொச்சி. 1990. 5. 7

சி. வேலாயுதம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி,

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. கிளி. வட்டக்கச்சி ம. வி | 80' / 20' புதிய பாடசாலைக் கட்டிடம் அமைத்தல் | ரூபா. 350,000/- |
| 2. கிளி. முருகானந்தம் ம. வி. | மேற்படி | மேற்படி |
| 3. கிளி. பரந்தன் இ. ம. வி | மேற்படி | மேற்படி |
| 4. கிளி. குஞ்சுக்குளம் கணேச வித் | மேற்படி | மேற்படி |
| 5. கிளி. ஜெயபுரம் அ த. க. பா | 60' / 20' புதிய பாடசாலை கட்டடம் அமைத்தல் | ரூபா 300000/- |
| 6. கிளி. பிரமந்தனாறு அ. த. க. பா | மேற்படி | மேற்படி |
| 7. கிளி. ஊற்றுப்புலம் அ. த. க. பா | 50' / 20' புதிய பாடசாலைக் கட்டடம் அமைத்தல் | ரூபா 250000/- |
| 8. கிளி. ஆனையிறவு அ. சி. த. க பா | 40'/ 20' புதிய பாடசாலைக் கட்டடம் அமைத்தல் | ரூபா 250000/- |
| 9. கிளி. இயக்கச்சி அ. த. க. பா | மேற்படி | ரூபா 300000/- |
| 10. கிளி. பூநகரி ம. வி. ததி | பிரார்த்தனை மண்டபம் அமைத்தல் | ரூபா 750000/- |
| 11. கிளி. கிளிநொச்சி ம. ம. வி | 70' / 25' மேல்மாடிக் கட்டடம் கீழ்மாடி அமைத்தல் | ரூபா 600000/- |

(B 657)

சி. வேலாயுதம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.



யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45, 700 & 945
**BRUCELEE IN BRUCELEE THELEGEND**
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
**16 வயதினிலே**
(B/860)

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
**"நாயகன்"**
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 887

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50

❋ Practicals on I. B. M. (Compatibles)
❋ More Hours of Practicals
❋ தமிழிலும் விளக்கங்கள்
❋ Valuable Certificate on Completion of Course.

**d BASE III+, LOTUS 1,2,3, WORD-PROCESSING**
**C. I. M. A., I. A. B., SHORTHAND& TYPING**
நடைபெறுகின்றன.

For further details;

**School of Business Administration**
**(LEADERS IN COMPUTER EDUCATION)**
**16, 3rd Cross Street,**
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

B-658



| | | |
|---|---|---|
| | அமைத்தல் | |
| 2. கிளி. முருகானந்தம் ம. வி. | மேற்படி | மேற்படி |
| 3. கிளி. பரந்தன் இ. ம. வி | மேற்படி | மேற்படி |
| 4. கிளி. குஞ்சுக்குளம் கணேச வித் | மேற்படி | மேற்படி |
| 5. கிளி. ஜெயபுரம் அ த. க. பா | 60' / 20' புதிய பாடசாலை கட்டடம் அமைத்தல் | ரூபா 300000/- |
| 6. கிளி. பிரமந்தனாறு அ. த. க. பா | மேற்படி | மேற்படி |
| 7. கிளி. ஊற்றுப்புலம் அ. த. க. பா | 50' / 20' புதிய பாடசாலைக் கட்டடம் அமைத்தல் | ரூபா 250000/- |
| 8. கிளி. ஆனையிறவு அ. சி. த. க பா | 40'/ 20' புதிய பாடசாலைக் கட்டடம் அமைத்தல் | ரூபா 250000/- |
| 9. கிளி. இயக்கச்சி அ. த. க. பா | மேற்படி | ரூபா 300000/- |
| 10. கிளி. பூநகரி ம. வி. ததி | பிரார்த்தனை மண்டபம் அமைத்தல் | ரூபா 750000/- |
| 11. கிளி. கிளிநொச்சி ம. ம. வி | 70' / 25' மேல்மாடிக் கட்டடம் கீழ்மாடி அமைத்தல் | ரூபா 600000/- |

சி. வேலாயுதம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

(B 657)



7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2 30,6.30,10.30
ரஜனி ஸ்ரீதேவி நடித்த
**மூன்றுமுடிச்சு**
அடுத்த வெளியீடு
மௌனராகம்



# வின்ரோ மகேந்திராவின் "பாடுநிலா"

இசைக்கலைஞர்கள்



அமுதகான இசைநிகழ்ச்சி சென்ற 4-ஆம் திகதி திரு. வின்சென் டி போல், முல்லைக்கவி ஆகியோரின் ஆசியுடன் அவரது "இல்லத்தில்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
முத்துக்கு முத்தான கலைஞர்கள் கலந்து கொண்டு தரமான பாடல்களை அளிக்கவிருக்கிறார்கள். அழைத்து மகிழுங்கள்.

தொடர்பு:

இல 6, நவீன சந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

இல 17, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/464)


## உணவு நிலத்தில் வீசப்பட்டது தொடர்பாக விசாரணை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் நோயாளருக்கு வழங்கப்பட்ட உணவு நிலத்தில் நோயாளர்களால் வீசப்பட்டது தொடர்பாக விசாரணைகள் நடைபெறவுள்ளது.

ஆனால் இச்சம்பவம் தவறானவை என்றும் பொய்யானவை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஆஸ்பத்திரி சமையற்காரர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (62)

## புனர்வாழ்வு வேலைகளுக்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி

அகதிகள் புனர்வாழ்வு நிவாரணத்திற்காக உலகச் செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து இலங்கைக்கு நிதியுதவி கிடைத்துள்ளது. இந்த நிதி மாவட்டங்கள் தோறும் அவற்றின் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப் படவுள்ளது.

இத்தகவல், கொழும்பில் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கப் பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களின் செஞ்சிலுவைச் சங்கக் கிளைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

உலகச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி கொக்கோவா கலந்து கொண்ட இக்கூட்டத்திற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. அபயசிங்கா தலைமை தாங்கினார்.

'மனிதநேயம்' ஆண்டாக இந்த ஆண்டைக் கொண்டாடுவதாக அங்கு தெரிவிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் இலாபம் ஈட்டக்கூடிய வகையில் சிறு கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இன, மத, அரசியல், வர்க்க வேறுபாடுகள் அற்று, சேலையாற்ற வேண்டுமென்று தலைவரினால் பணிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு வவுனியாவிலிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைத் தலைவர் திரு, வீ. கே. நாகராஜாவும், செயலாளர் திரு. யோகநாதனும் கலந்து கொண்டனர்


**அனித்தா பயிற்சி நிலையம்**
**K. K. S.** றோட், பூநாறி மரத்தடி,
கொக்குவில்.

ஆடைகள் தயாரிப்பு, சிகையலங்காரம்,
உணவு தயாரிப்பு

'டிப்ளோமா-ஹோம் எகனமிக்ஸ்'

❋ ஆடை தயாரிப்பு
❋ பற்றிக் துணி வர்ண சாயமிடல்
❋ சிகையலங்காரம்
❋ விதவிதமான கேக் தயாரிப்பு
❋ உணவு தயாரிப்பு
❋ கை வேலைகள்
❋ பூ வேலைப்பாடுகள்

ஆகியவற்றுடன் திருமணப் பெண்களின் மேக் - அப் வகுப்புகள் மாதந்தோறும் 2 நாட்களில் நடைபெறும். விபரங்களுக்கு மேற் கூறிய விலாசத்திற்குத் தொடர்பு கொள்க.

திருமதி பவளம் சுப்பிரமணியம்
(B.662)

# ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயத்தம்

# எதிர்க்கட்சிகளுக்குள் குத்து வெட்டு!

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு

ரூபன்



ஜனாதிபதி பிரேமதாஸவின் ஒழுக்க நெறிகளுக்கு அமையவே அமைச்சர்கள், எம். பிக்கள் இனிமேல் நடந்து கொள்ள வேண்டும் அல்லது பதவி விலகவேண்டும். கடந்த சில நாட்களாக இதனை அவர் மந்திரிகள் சபைக் கூட்டத்திலும் பொது இடத்திலும் கூறி வருகிறார்.

அதுவும் வெளிநாடுகளுக்குச் செல்லும் இவர்களை சுங்கப் பகுதி சோதனையிட வேண்டும் எனவும் சுங்கப்பகுதியினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் சுங்கப்பகுதியில் மோசடி ஊழல் இடம்பெறுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். லஞ்ச ஊழலைத் தடுக்க லஞ்சத் திணைக்களம் என்று ஒன்று உள்ளது. ஆனால் லஞ்ச வலையில் சிறியவர்களே அகப்படுகின்றனர்.

உதாரணமாக நீதிமன்றப் பியோன் ஒருவர் வழக்குக் கொப்பியை மேசையில் முன்னுக்கு வைப்பதற்கு ஐந்து ரூபா வாங்கினால் லஞ்சம். அண்மையில்கூட ஒரு பொலிஸ்காரர் நீதிமன்ற விசாரணை தொடர்பாக ஐம்பது ரூபா லஞ்சம் வாங்கிப்பிடிபட்டார். இப்படியாக சிறிய மட்டத்தில் மோசடி, ஊழல் நடைபெறுவது பிடிக்கப்படுகின்றன.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின் போது லஞ்ச விசாரணை நீதிமன்றம் என்ற ஒன்று இருந்தது. அதன் நீதிபதியாக திரு. சீ. மனோகரா இருந்ததும் விசாரணைகள் எப்படி நடைபெற்றன என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

இந்த சுங்கப் பகுதியினர் ஒரு லஞ்ச வலையிலும் விழுவதில்லை. ஒரு சில சுங்க அதிகாரிகள்மீது சில காலத்துக்கு முன்னர் வேறு குற்றச்சாட்டில் விசாரணை நடைபெற்றது. அதாவது அவர்கள் 'டாம்பீகமாக' இப்படி இருப்பது எப்படி என்ற தோரணையில் விசாரணை நடைபெற்றது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்புத் துறைமுகத்தில் அரசால் தடுத்து வைக்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான கறுப்புச்சீனி மூடைகள் சுங்கச் சோதனையுடன் (Customs Clearance) வெளியே போயுள்ளது. இது எப்படி நடந்தது என விசாரணை நடக்கிறது.

அரசாங்கத்துக்கு அதிக வருமானம் தரும் திணைக்களங்களில் சுங்கப் பகுதியே முதலிடம் வகிக்கிறது. உலகநாடுகளில் கம்பியூட்டர் மயமாகி சுங்கச் சோதனையும் வந்துகொண்டு இருக்கிறதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சுங்கப் பகுதியினர் ஒருகடத்தல் பொருளைப் பிடித்தால் ஒரு பங்கு அவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. தினமும் பத்திரிகைகளில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபடும் கடத்தல் பொருள்கள் குறித்து செய்திகளும் வருகின்றன. இவற்றில் பிடிபடாமல் வெளியே வருவது எத்தனையோ!

நமது பகுதியில்கூட சுங்கப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் ஒருநாள் திருவிழாவுக்கு செலவு செய்வதாக ஆலய உற்சவ விளம்பரத்திலும் அச்சிடப்பட்டுள்ளது. அந்த ஒரு நாள் செலவு அன்று பத்தாயிரம் ரூபா வரை இருக்கும்.

1983 க்கு முன்னர் யாழ்ப்பாணப் பகுதியில் சுங்கப் பகுதிகளில் பணிபுரிந்தவர்கள் ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்தில் இடமாற்றம் செய்யப்படுவார்கள். இப்படியாக சுங்கப்பகுதியின் என்ன மாதிரி உழைக்கிறார்கள் என்பது ஜனாதிபதிக்கு இன்றுதான் தெரிகிறதா!

கொழும்பில் இவர்கள் இருக்கும் வீடுகள், வாழ்க்கையை நேரில் கண்டு கொள்ளலாம். அவர்கள் லஞ்சம்



வாங்குவதில்லை. ஆனால் செல்வந்த வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதைக் கண்டே ஜனாதிபதி இன்று இப்படி அவர்களைச் சாடியுள்ளார்.

### எதிர்க்கட்சிகளுள் குத்து வெட்டு!

எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சியை கவிழ்க்கவேண்டும் என்று கங்கணம் கட்டி வருகின்ற இவ்வேளையில் அவர்களுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதை அண்மையில் நடைபெற்ற மேதினக் கூட்டம் எடுத்துக்காட்டுகிறது.

ஜனாதிபதி பொதுத் தேர்தலுக்கும் உள்ளூராட்சி தேர்தலுக்கும் ஆயத்தம் செய்ய இவர்கள் இப்படி நடக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் ஐந்து எம். பிக்களை நீக்கி புதியவர்களை நியமிக்க கட்சியின் தலைமைப் பீடம் ஆலோசித்துள்ளது. அதில் ஒருவர் தமிழராவர். முன்னாள் நிதியரசர் ரீ. டபிள்யூ. ராஜரத்தினமே அந்த எம். பி. தமிழருக்கும் சுதந்திரக்கட்சியில் இடம் என்று கூறியவர்கள் அவரை நீக்கவுள்ளனர்.

இந்த ஐந்துபேரும் தமது நிலைமை குறித்து அதிருப்தி தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்காது போல. முன்னர் என்றால் கட்சி மாறி ஆளும் கட்சிக்கு றொனி டீ மெல் சீ.பி. டீ. சில்வா போல போகலாம். ஆனால் தற்போதுள்ள அரசியல் சட்டப்படி கட்சியே எம். பியை நியமிக்கலாம்.

இதே போலவே ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா, ஒஸி தலைமையில் பிளவு கண்டுள்ளது. ஒஸி அரசுக்கு ஆதரவாக இருப்பதாகவும், திருமதி சந்திரிகா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாக இருப்பதாகவும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்துகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலை நடாத்தலாம் என வெளியான செய்திகளால் இவர்கள் இப்போதே தமக்குள் சண்டையிட்டுவருகின்றனர். திருமதி சந்திரிகா லண்டன் சென்றமையும் ஒரு புதிய திருப்பத்தை இவர்களிடம் ஏற்படுத்தலாம்.

சில எதிர்க் ட்சி எம். பிக்கள் ஆளும் கட்சி வைபவங்கள் முதலானவற்றில் சமுகம் கொடுத்து அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருகின்றனர்.

### தோட்டத் தொழிலாளர் நாடு திரும்பல்

1964இல் இலங்கைப் பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இந்தியப் பிரதமராக இருந்த ஸ்ரீலால்பகதூர் சாஸ்திரியும் செய்து கொண்ட ஒப்பந்தப்படியுள்ள இந்திய வம்சாவளியினரை நாடுகடத்த இலங்கை அரசு தற்போது எண்ணியுள்ளது. அதற்கு இந்தியமத்திய அரசும் தமிழ் நாடு மாநில அரசும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி ஐம்பதினாயிரம் பேரினதும் அவர்களின் புதியசந்ததியினரதும் தலைவிதியை நிர்ணயிக்காமல் விடப்பட்டிருந்தது. ஆனால் 1974 ஜனவரியில் திருமதி இந்திரா காந்திக்கும் திருமதி ஸ்ரீமாவுக்கும் இடையேயிடம்பெற்ற ஓர் ஒப்பந்த மூலம் இது தீர்க்கப்பட்டது.

அதாவது இலங்கை அரசு எழுபத்தையாயிரம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையும் இந்திய அரசு எழுபத்தையாயிரம் பேருக்கு இந்திய பிரஜாவுரிமையும் வழங்க வேண்டும் என்பதே.

1976 நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரை 1,90,000 பேர் இந்தியாவுக்குச் சென்றனர். அதே வருடம் செப்டம்பர் மாதம் 2,80,616 பேருக்கு கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இந்திய பிரஜாவுரிமை வழங்கியது. 75,000 பேருக்கு மேல் இலங்கையில் கூடுதலாக தங்கியிருந்தனர்.

இவ்வாறு 1976 நவம்பர் 21ஆம் திகதி சண்டே ஒப்சேர்வர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அதே ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையில் செப்டம்பர் இறுதி வரை 1,04,574 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இலங்கை அரசால் வழங்கப்பட்டதாக செய்தி வெளியிட்டது.

திரு. ஜே. ஆர் ஜனாதிபதியாக இருந்த போது வாக்குரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து மலையகத் தொழிலாளருக்கு ஐ. தே. கட்சி எல்லாம்செய்துவிட்டதாக அமைச்சர் தொண்டமான் கோஷ்டி பேசி வந்தது.

ஆனால் தற்போது அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா கூறியுள்ள நாடு கடத்தல் விடயமாக எதிர்க்கட்சிகளோ இடதுசாரிக் கட்சிகளோ எதுவித கருத்தும் வெளியிடவில்லை. அவர்களும் அதனை ஆதரிப்பதாகவே தெரிகின்றது.

தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு 'நீங்கள் எமது சகோதரர்' இந்த நாட்டு பிரஜைகள். முதுகெலும்புகள் என்று இவர்கள் தேர்தல் காலங்களில் பேசி வருவார்கள்.

ஆனால் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா தெரிவித்ததுக்கு என்ன செய்யவேண்டும் அல்லது எப்படி அனுப்ப வேண்டும் என்று கூட ஒரு வார்த்தையும் இவர்கள்பேசவில்லை. இனிமேலாவது ஏதும் சொல்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்! தமக்குள்ளே குத்து வெட்டுப்படும் எதிர்க்கட்சிகள் இதில் என்னத்தைத் தான் சொல்லப் போகிறார்கள்?

# எதிர்காலத்திலும் புதிய நமீபிய அரசு அந்நிய நெருக்கடியை எதிர்நோக்குமா?

இன ஒதுக்கல் கொள்கையைக் கடுமையாகக் கடைப்பிடித்துவந்த தென்னாபிரிக்க அரசின் சிறைகளில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த ''கறுப்பு மலர்'' என்று பூஜிக்கப்படும் நெல்சன் மண்டேலா உட்பட உலகின் முன்னணி நாடுகளின் தலைவர்கள் பலர் கடந்த மார்ச் மாதம் இருபதாம் திகதி நள்ளிரவு நடைபெற்ற சுதந்திர நமீபியாவின் கொடியேற்ற வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் கலந்துகொண்டமுக்கிய தலைவர்கள் தன. இதில் நமீபிய சுதந்திரத்திற்காக முப்பது வருடங்களுக்கு மேலாக போராடி வரும் '' சுவாப்போ '' இயக்கம் (தென்மேற்கு ஆபிரிக்க விடுதலை ஸ்தாபனம்) ஒரு முக்கிய காரணமாகும். இந்த இயக்கம் 19ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1960ஆம் ஆண்டுஸ்தாபிக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் தலைவராக ஆரம்ப காலம் தொட்டே சாம் நுஜோமா என்பவர் இருந்து வந்தார். நமீபிய விடுதலைப் போராட்டத்தில் சுவாப்போ இயக்கம் பெரும் பங்கு வகித்தாலும் அதன் இராணுவப் குழுக்கள் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தது. இந்த எதிர்க்கிளர்ச்சிகளை சட்டுப்படுத்தவென ஆங்கோலா அரசு கரிபியன் நாடான கியூபா துருப்புக்களை தனது நாட்டில் தரையிறக்கி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நமீபியா சுதந்திர நாடாக இருக்குமானால் நமீபியாவிலிருந்து தென் ஆபிரிக்கப் படைகளை அகற்றுவதன் மூலம் தனக்கு இருக்கும் நெருக்குதல்களைக் குறைக்கலாம் என்ற நோக்குடன் அங்கோலா அரசு ''சுவா



மாக 'யுனிட்டா' கெரில்லா படைகளிடம் இருந்து அங்கோலா நாட்டை பாதுகாக்கவென தரையிறக்கப்பட்டிருந்த கியூபா துருப்புக்களை

டன் பரிமாறிக்கொண்டபோதிலும் வெளியுலகிற்கு காட்டும் நோக்குடன் தமது நாட்டு ஒரு சில கடல் கடந்த சம்பனிகளை மூடிக்கொள்ள வேண்



தடுக்க லஞ்சத் திணைக்களம் என்று ஒன்று உள்ளது. ஆனால் லஞ்ச வலையில் சிறியவர்களே

கள் சுங்கச் சோதனை யுடன் (Customs Clearance) வெளியே போயுள்ளது. இது

இருக்கும் வீடுகள், வாழ்க் கையை நேரில் கண்டு கொள் ளலாம். அவர்கள் லஞ்சம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யில் ஐந்து எம். பிக்களை நீக்கி புதியவர்களை நியமிக்க

ராக இருந்த திருமதி ஸ்ரீமா வோ பண்டாரநாயக்காவுக்கும் இந்தியப் பிரதமராக இருந்த

வர் பத்திரிகை செய்தி வெளி யிட்டிருந்தது.

அதே ஆண்டு நவம்பர் 8ஆம்

தான் சொல்லப் போகிறார் கள்?

---

# எதிர்காலத்திலும் புதிய நமீபிய அரசு அந்நிய நெருக்கடியை எதிர்நோக்குமா?

**உலக அரசியல் நோக்கு**

**லோகன்**

இன ஒதுக்கல் கொள்கையைக் கடுமையாகக் கடைப்பிடித்துவந்த தென்னாபிரிக்க அரசின் சிறைகளில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த ''கறுப்பு மலர்'' என்று பூஜிக்கப்படும் நெல்சன் மண்டேலா உட்பட உலகின் முன்னணி நாடுகளின் தலைவர்கள் பலர் கடந்த மார்ச் மாதம் இருபதாம் திகதி நள்ளிரவு நடைபெற்ற சுதந்திர நமீபியாவின் கொடியேற்ற வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் கலந்துகொண்டமுக்கிய தலைவர்கள் தென்னாபிரிக்காவுக்குத் தொடர்ந்து நெருக்குதல்கள் கொடுப்பது பற்றியே பேசியமை கவனிக்கக்கூடியதாகும். இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் பங்கு என்றென்றும் உண்டு என பிரதமர் வி.பி.சிங்கும், தென்னாபிரிக்க அரசுக்கெதிராக மேலும்தடைகள் விதிக்கவேண்டுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் கூறினர். இவர்களுடன் அன்றையதினம் உரையாற்றிய ஏனைய தலைவர்களும் இதனையே முக்கியமாக கருத்துப்பட தெரிவித்திருந்தனர்.

## நமீபியா

தென்மேற்கு ஆபிரிக்கா எனும் மறுபெயர் கொண்ட இந்நாடு கிழக்கு அத்திலாந்திக் கரையோரத்தில் இறுதியாக சுதந்திரம் அடையும் ஒரே ஒரு ஆபிரிக்க நாடாகும். இங்கு தங்கம், வைரம், செம்பு, யுரேனியம் என ஏராளமான விலை உயர்ந்த கனிவளங்கள் உள்ளது. ஆனால் இவ் வளங்களில் ஏராளமானவற்றை தென்னாபிரிக்க அரசின் ஊடாக மேலைநாடுகள் சுரண்டிச் சென்றுவிட்டன. ஆரம்பத்தில் ஜேர்மனியின் குடியேற்ற நாடாகவிருந்த நமீபியா 1910ஆம் ஆண்டளவில் தென்னாபிரிக்காவின் கைக்கு மாறியது. தொடர்ந்து இது தென்னாபிரிக்காவின் காலணி ஆட்சியாகவே இருந்தது. 73 ஆண்டுகள் இவ்வாறு இருந்த பின்னர் தற்போது நமீபியா விடுதலை அடைந்துள்ளது.

இந்நாடு சுதந்திர நிலையை அடைவதற்கு பல முக்கிய காரணங்கள் ஏதுவாக அமைந்தன. இதில் நமீபிய சுதந்திரத்திற்காக முப்பது வருடங்களுக்கு மேலாக போராடிவரும் ''சுவாப்போ'' இயக்கம் (தென்மேற்கு ஆபிரிக்க விடுதலை ஸ்தாபனம்) ஒரு முக்கிய காரணமாகும். இந்த இயக்கம் 19ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1960ஆம் ஆண்டுஸ்தாபிக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் தலைவராக ஆரம்பகாலம் தொட்டே சாம் நுஜோமா என்பவர் இருந்து வந்தார். நமீபிய விடுதலைப் போராட்டத்தில் சுவாப்போ இயக்கம் பெரும் பங்கு வகித்தாலும் அதன் இராணுவப் பிரிவான நமீபிய மக்கள் விடுதலைப் படை (PLAN) யின் நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. இந்த இராணுவப் பிரிவு தென்னாபிரிக்க இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதிகளில் மிகக்குறைந்த தாக்குதல்களையே செய்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருந்தும் சுவாப்போ ஸ்தாபனத்தின் இவ் வெற்றிக்கு சர்வதேச ரீதியில் இருந்த ஆதரவும் இவ்வாதரவுக்கு ஏதுவாய் இருந்த தென்னாபிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கையுமே காரணமாகும்.

## சர்வதேச ஆதரவு

இஸ்ரவேல் அரசுக்கெதிராக அதனைச் சூழ எவ்வாறு அரபு அரசுகள் அமைந்துள்ளனவோ அதே போல் தென்னாபிரிக்கா அரசுக்கெதிராக கறுப்பு இனத்தவர்கள் ஆட்சி செய்யும் ஆபிரிக்கா நாடுகள் அமைந்துள்ளன. மொசாம்பிக் சிம்பாப்வே, பொட்சுவானா அங்கோலோ என வரிசையாக அவை அமைந்துள்ளன. இவை அனைத்தினதும் சுதந்திரத்திற்கும் தென்னாபிரிக்க அரசு எந்நேரமும் அச்சுறுத்தலாய் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அங்கோலாவில் ஆட்சியிலிருக்கும் ''ஜோஸ் எட்வாடோ டோஸ் சண்டோஸ்'' என்பவரின் கம்யூனிச அரசுக்கெதிராக தென்னாபிரிக்கா ''யுனிட்டா'' என்ற கிளர்ச்சிக் குழுக்கள் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தது. இந்த எதிர்க் கிளர்ச்சிகளை சட்டுப்படுத்தவென ஆங்கோலா அரசு கரிபியன் நாடான கியூபா துருப்புக்களை தனது நாட்டில் தரையிறக்கி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நமீபியா சுதந்திர நாடாக இருக்குமானால் நமீபியாவிலிருந்து தென் ஆபிரிக்கப் படைகளை அகற்றுவதன் மூலம் தனக்கு இருக்கும் நெருக்குதல்களைக் குறைக்கலாம் என்ற நோக்குடன் அங்கோலா அரசு ''சுவாப்போ'' இயக்கத்திற்கு தனது நாட்டில் அனைத்து வசதிகளும் செய்து கொடுத்தது. இதே போல ஏனைய ஆபிரிக்க முன்னணி நாடுகளும் ஒன்று சேர்ந்து தென்னாபிரிக்க அரசின் மீது சர்வதேச ரீதியாக சில அழுத்தங்களை ஏற்படுத்தும் நோக்குடன் 1985-ம் ஆண்டளவில் தென்னாபிரிக்க அரசின் மீது பொருளாதார உறவுகளை அனைத்து நாடுகளும் குறித்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தன. நமீபிய ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுடன் இவ் வேண்டுகோளை உலக நாடுகள் கவனத்தில் எடுக்க வேண்டிய நிலைக்குள்ளானது. தென்னாபிரிக்க அரசு உள்நாட்டில் கடைப்பிடித்த நிறவேற்றுமை, இன ஒதுக்கல், கொள்கையுமேயாகும்.

இக் கொள்கைக் கெதிராக ஐக்கியநாடுகள் சபையிலிருந்து சகல நாடுகளும் கண்டனங்களைத் தெரிவித்து வந்தன. அத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நமீபியாவுக்கு ஆதரவாக 1978-ம் ஆண்டே 435-ம் இலக்க தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இருந்தும் தென்னாபிரிக்க அரசு நமீபியாவுக்கு சுதந்திரம் என்பது கிடையாது என வலியுறுத்தி வந்தது. ஏனெனில் நமீபியாவில் காணப்படும் கனிய வளங்களை இழந்துவிட அது எந்நேரத்திலும் தயாரில்லை. இக் கனிய வளங்களை போதுமான பணம் செலுத்தி மேலை நாடுகள் வரிசையில் நின்று பெற்றுக்கொள்ளும் அளவுக்கு இருக்கும்போது இந்த நிலத்தை விட்டுக் கொடுக்க தென்னாபிரிக்கா மறுத்ததில் எதுவித வியப்பும் இல்லை.



சாம் நுஜோமா

தென்னாபிரிக்க அரசு நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என மேலும் அழுத்தத்தை பிரயோகிப்பதில் பங்கு கொண்டவையான, உலகின் தேசிய விடுதலைப் போராட்டங்களின் நண்பர்கள் என என்றும் தம்மைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் இந்தியா, சோவியத் ரஷ்சியா, ஈரான், கியூபா, சுவீடன் ஆஜன்டீனா போன்ற முப்பத்தொரு நாடுகளின் ஆதரவும் சுவாப்போ இயக்கத்திற்கு இருந்தமையுமாகும். இதில் இந்தியாவும் ஈரானும் சுவாப்போ இயக்கத்திற்கு இராஜதந்திர அந்தஸ்தும் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு இவ்விரு நாடுகளும் நடந்து கொண்டமைக்கு காரணம் தாம் வெளித்தோற்றத்திற்கு ஒரு சாதுவான அரசாக தோற்றவேண்டும் என்பதற்காகவேயாகும். ஆனால் இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடந்து கொண்ட விதம் ஈரான் ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் நடந்து கொள்ளும் விதமும் முற்று முழுதாக தமது நலனைக் கொண்டதாகவே அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துடன் பலவருடகாலமாக 'யுனிட்டா' கெரில்லா படைகளிடம் இருந்து அங்கோலா நாட்டை பாதுகாக்கவென தரையிறக்கப்பட்டிருந்த கியூபா துருப்புக்களை திருப்பி எடுத்துக்கொள்ள கியூபாவும் அங்கோலாவும் இணங்கியமையும் தொடர்ந்து அங்கோலா எல்லைகளில் தென்னாபிரிக்கப் படைகளை நிறுத்தி வைத்திருக்க முடியாத நிலையும் நமீபியாவிலிருந்து வெளியேற வேண்டிய நிலையும் தென்னாபிரிக்காவுக்கு ஏற்பட்டது.

மேலும் கடந்த சில வருடங்களாக சோவியத் ரஷ்யாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்ட பிராந்திய முரண்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கான இணக்கப்பாடுகளால் வெளியுலகுக்கு சில தளர்வுகளைக் காட்ட விரும்பியதனால் தென்னாபிரிக்கா மீது புதிய அணுகு முறைகளை இரு பெரும் வல்லரசுகளும் பகி



போத்தா

தாகக் கொண்டிருந்தமையும் ஐக்கிய நாடுகள் சபையால் தென்னாபிரிக்க அரசுக்கெதிராக பொருளாதாரத்தடைத் தீர்மானங்கள் இயற்றப்பட்டதைத்தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகள் இரகசியமாக தமக்குத்தேவையானவற்றை தென்னாபிரிக்காவுடன் பரிமாறிக்கொண்டபோதிலும் வெளியுலகிற்கு காட்டும் நோக்குடன் தமது நாட்டு ஒரு சில கடல் கடந்த சம்பனிகளை மூடிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாயின. அத்துடன் பி. டபிள்யூ. போத்தாவின் அரசுக்கு சில எச்சரிக்கைகளை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டியும் ஏற்பட்டது.

இதனால் காலாகாலமாக தன்மீதிருக்கும் இன ஒதுக்கல் சுரண்டல் களங்கத்தைப்போக்குவதோடு பொருளாதார அழுத்தல்களை சற்றாவது குறைத்துக் கொள்ளலாம் என்ற நோக்குடன் நமீபியா சம்பந்தமாக ஐ. நா. சபையுடன் பேச்சுக்கள் நடத்த முன் வந்தது. இப் பேச்சுக்களின்போதுபுத்தாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட இல 435 ஆவது தீர்மானம்முன் வைக்கப்பட்டது இத்தீர்மானம்படி எவ்வித தாமதமும் இன்றி நமீபியாவுக்கு சுதந்திரம்வழங்கப்படவேண்டும் சுதந்திரம் வழங்கி ஒருவருடகாலத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பனவும் அடங்குவதால் நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கி சுதந்திர தினமும் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 435 ஆம் இலக்க தீர்மானப்படிதேர்தலும்நடத்தப்பட்டது.

## தேர்தல்வெற்றி

ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட நமீபிய சட்ட சபைக்கான தேர்தலில் சுவாப்போ இயக்கம் எல்லோரும்எதிர்பார்த்தது போலவே வெற்றியைக்கண்டது. இருப்பினும் புதிய நாட்டின் எதிர்கால அரசியல்அமைப்பைநிர்ணயிப்பதற்கு ஏற்றவாறு ஓர் அறுதிப் பெரும் பான்மைக் கட்சியாக இது ஸ்திரம் பெறும் என எல்லோராலும்எதிர்பார்த்ததிற்கு மாறாகவே அதுஇத்தேர்தலில் வாக்குகளைப் பெற்றுள்ளது இதனால் ''சுவாப்போ'' எதிர்க் கட்சிகளுடன் இணைந்தே தனது நாட்டின் அரசியல்அமைப்பைஉருவாக்க வேண்டிய நிலைக்குள்ளாகி



மண்டேலா

இருக்கிறது. இந்நிலை எதனை குறித்து நிற்கின்றது என்றால் சுவாப்போ இயக்கம் வெளிநாட்டு அரசுகளில் பெற்றுக் கொண்ட ஆதரவினால்தான் சுதந்திர நமீபிய அரசை ஸ்தாபித்ததே தவிர உள்நாட்டில் தனதுஅரசியல் இராணுவநடவடிக்கைகளில் அது குறைந்த கவனமே செலுத்தி உள்ளது என்பதேயாகும்.

எதிர்க்கட்சிகளும் அரசு அமைப்பதில் சரிநிகராக பங்களிப்பை செலுத்தி உள்ளதால் நமீபியாவின் எதிர்காலத்தில் அவற்றின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். இவ்வெதிர்க்கட்சிகள் சுவாப்போ அரசைப் போல் அல்லாது அவை மேலைத்தேய சார்பு கொண்டவையாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே கடந்த காலத்தில் தென்னாபிரிக்கா ஊடாக நமீபியாவை ருசிபார்த்த மேலைநாடுகள் மீண்டும் பழைய ருசியை இவ்வெதிர்க்கட்சிகளூடாக பார்ப்பதற்கு முயற்சிகளை மெற்கொள்ள நிச்சயம் முயற்சிக்கும். இதிலிருந்து சுதந்திர நமீபியாவை பாதுகாப்பது சுவாப்போ அரசின் கடமையேயாகும்.

ஈழநாதம்

# கடும் புயல் மழை, வெள்ளம் ஆந்திராவில் பெரும் பாதிப்பு

## 57பேர் பலி; லட்சக்கணக்கானோர் வீடிழந்தனர் கலைஞர் ரூ. 25 லட்சம் ஆந்திராவுக்கு உதவி

### தமிழ்நாட்டில் காற்று மழைக்கு ஏழுபேர் மரணம்

(சென்னை)

தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இந்தியப் பிரதமர் வி.பி. சிங் இன்று வெள்ளிக்கிழமை பார்வையிடுகிறார்.

ஆந்திரா மாநிலத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு முகமாக இருபத்தைந்து இலட்சரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுமென தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

மணிக்கு இருநூற்றி ஐம்பது மைல் வேகத்தில் வீசிய புயல் ஆந்திரா மாநிலத்தின் கரையோரப் பகுதிகளைக் கடுமையாகத் தாக்கியது. புயலிலும் வெள்ளத்திலும் ஆந்திராவில் ஐம்பத்தேழுபேர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் வீடுகள் இழந்துள்ளனர். புயல் வெள்ளத்தினால் தமிழ் நாடு பெரிதாசப் பாதிக்கப்படவில்லையானாலும் கடும் காற்றினாலும் வெள்ளத்தினாலும் ஏழுபேர் உயிரிழந்துள்ளனர். ஏழு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

உயிரிழந்த ஆறுபேர்களின் குடும்பத்துக்கும் தலா இரண்டாயிரம் ரூபாய்உடனடிஉதவியாக இன்றே வழங்குவதற்கு முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டிருக்கிறார்.

புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆந்திரமாநிலத்துக்குத்தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்கு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருப்பதாக அமைச்சர் பி. உபேந்திரா தெரிவித்திருக்கிறார்.

**கோபாலசாமி கோரிக்கை**

தமிழ் நாட்டின் கரையோரப்பகுதிகளையும் சென்னைக் கரையோரப் பகுதிகளையும் புயல் மோசமாகப் பாதித்திருப்பதாகவும்உடனடியாகதமிழ் நாட்டுக்கு உதவிகளை விரைந்து அனுப்பவேண்டும்என்றும் மக்களவையில் தி. மு. கழக உறுப்பினர் வை. கோபாலசாமி சேட்டுக் கொண்டார்.



மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலை கடந்த இரண்டு வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. விடுதலைப்புலிகள் சமீபத்தில் சிரமதானம்மூலம் துப்புரவுசெய்த போது எடுத்தபடம்.

## விண்வெளி ஆராய்ச்சியில் இஸ்ரேலுக்கு ரஷ்யா உதவி

(டெல் அவிவ்)

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இஸ்ரேல் நாடு சோவியத் ரஷ்யாவின் உதவியைப் பெறவுள்ளது.

இஸ்ரேல் நாட்டு மாணவர்களுக்கு சோவியத் ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி பற்றிய கல்வியினையும் பயிற்சியினையும் வழங்குவதற்கு அனுமதித்துள்ளது. இத[illegible]பிரதியீடாக சோவியத் நாட்டு மாணவர்களுக்கு இஸ்ரேல் தொழில் நுட்பக்கல்வியை வழங்கத்

## வீடு கட்ட முதலாவது கொடுப்பனவு

(வவுனியா)

வவுனியா இராஜேந்திரன் குளம் கிராமத்தில் பாதிப் படைந்த மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான முதலாவது

### புதிய தபாலதிபர்

(தீவுப்பகுதி)

அனலைதீவு தபால் கந்தோருக்கு புதிய தபாலதிபராக வேலணை பிரதம தபால் கந்தோரில் உதவித் தபாலதிபராக கடமையாற்றிய வேலணையைச் சேர்ந்த திரு. க நவரத்தினம் பதவி உயர்வுடன் நியமனம் பெற்றுள்ளார்.

### 11 உபதபால்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வ, பொன்னம்பலம் சம்பிரதாய பூர்வமாகத் தபால் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில்,

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் உப தபால் நிலையங்களை புனரமைக்க ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 1989ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்படி ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, முல்லைத்தீவு அஞ்சலகங்கள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்:

நடப்பு வருட நிதி ஒதுக்கீட்டின்கீழ் செம்மலை, முள்ளியவளை, பாண்டியன்குளம் உட்பட மேலும் 11 தபால் நிலையங்களை அமைக்க விருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் கொக்குத்தொடுவாய்க் கரையோரப் பிரதேசப் பொறுப்பாளர் ரகுவும் கலந்து கொண்டார், (58)

### வவுனியா

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ரயிலில் தாகத்துடன் பிரயாணம் செய்துவரும் பயணிகள், நம்பிக்கையில் தண்ணீர் அருந்த இறங்கி, ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் கவனிக்க முடிகிறது என்று வவுனியா ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் ரயில் நிலையப் பகுதி வேலிகள் சீராக அடைக்காத காரணத்தினால் இவற்றின் மூலம் பயணச்சீட்டு இல்லாமல் வரும் பயணிகள் தப்பிச் செல்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது,

(தி)

### மெதடிஸ்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கல்விச்சேவைகள் அமைச்சர் திருமதி சுனித்திரா ரணசிங்க, கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச்செயலாளரும், மதிய போசனம், தமிழ்மொழி அமுலாக்கலுக்குப் பொறுப்பான கல்வி அமைச்சுப் பணிப்பாளருமான திரு. வி. சபாநாயகம், வடக்கு,கிழக்கு மாகாண கல்வி அமைச்சு

கிளிநொச்சி மாவட்டத்தில்

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 30000 நிவாரணம் 20000 குடும்பங்களுக்கு

(கிளிநொச்சி)

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்ற வன்செயல்களினால் 30ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 22 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவை சேர்ந்த கிராம சேவகர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறுகூறினார்

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் மேற்படி பணிமனையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்து கொண்டார்.

அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

முன்பு எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி இம்மாவட்டத்தில் 27 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாக அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் நிவாரணம் வழங்க முற்பட்டபோது 30 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் நிவாரணம் கேட்டு வந்துள்ளன. அரசாங்கமோ 22 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்க அனுமதித்துள்ளது.

கிராம மட்டத்தில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துபவர்கள் கிராம சேவகர்களே அவர்களின் தகவல்களைக் கொண்டே உதவி அரசாங்க அதிபர் சகல கொடுப்பனவுகளையும் செய்கிறார் கிராம சேவகர்கள் செய்யும் சிறு தவறு கூட உயர் அதிகாரிகளை சங்கடத்தில் மாட்டிவிடும்.

கடந்த காலங்களில் நிவாரணம் வழங்குவதில் தவறுகள் இடம் பெற்றுள்ளன. சரியான முறையில் செயல்பட்டிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது இனிமேலாவது சரியான தகவல்களைச் சேகரித்து அனுப்புங்கள் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் தவறவிடப்பட்டிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றார். 49

### உள்ளூராட்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிருபம் பொதுநிர்வாக மாகாண அமைச்சினால் சகல அரச திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் அத்தனைக்குமான தேர்தல்கள் நடாத்தப்பட இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேவையில் உள்ள அரச வாகனங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் நோக்குடன் அவற்கான படிவங்களும் மேற்படி சுற்றறிக்கையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 04-05-90 திகதியிடப்பட்ட இவை சம்பந்தமான சுற்றறிக்கை வவுனியா கச்சேரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தி)

### ஆண்டு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டிருக்கும் நாடுகளில் தமது பிள்ளைகள்தான் கல்வியில்சிறந்தவர்கள் என்று எல்லாப்பெற்றோர்களும் நம்புகின்றார்கள். க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 80 வீதம் தானும் மேற்கொண்டு படிப்பைத்தொடர்வதில்லை. பெற்றோரின் அபிலாசைகளைக் குழப்பாமல் நாம் ஒருபடிமேல் சென்று தொழில் பாடத்தையும், தொழில் நுட்பப் பாடத்தையும் அறிமுகப் படுத்தவுள்ளோம். ஒரு மாணவன் ஜீ.சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தால்தான் ஏ. எல். படிக்க முடியும். ஜீ. சி. ஈ (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடையாத மாணவன் தொழில் அல்லது தொழில் நுட்பப்பாடத்தில் சித்தியடைந்தால் படிப்பைத் தொடர

### இந்தியப்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சேதமாக்கியதாலேயே இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது (49)

### புலிகளின்

(1ஆம் பக்க தொடர்ச்சி

களைப் பெறுகின்றோம். ஆனால் வியாபாரிகளிடம் நாம் பெறும் வரியை மக்களிடம் சுமத்துவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. மிக விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தற்பொழுது சீமெந்து, பெற்றோல், சாராயம், குளிர்பாணம், சிகரெட் ஆகியவற்றிற்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் வரி விதிப்பைக் காரணம் காட்டி மக்கள்மீது கூடுதலான நெருக்கடிகளைத் தோற்றிவிப்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

## ஐந்தாவது சர்வதேச இஸ்லாமிய தமிழ் மகாநாடு

(கொழும்பு)

ஐந்தாவது சர்வதேச இஸ்லாமிய தமிழ் மகாநாடு தென்னிந்தியாவில் பிடத்தளையில் டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த மகாநாடு தொடர்பாக இலங்கை ஒழுங்கமைப்பின் குழுவின் தலைவர் டாக்டர் எம். எம். உவைஸ், முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சருடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தினார். இந்த மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு அமைச்சு சகல ஒழுங்குகளையும் செய்யவுள்ளது.

பிடத்தளையில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில்கலந்து கொள்வதற்கென முஸ்லிம் கல்விமான்கள், இஸ்லாமிய அறிஞர்கள் ஆகியோர் பயணம் செய்வது தொடர்பான ஒழுங்குகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும்,
நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும்

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலை கடந்த இரண்டு வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. விடுதலைப்புலிகள் சமீபத்தில் சிரமதானம்மூலம் துப்புரவுசெய்த போது எடுத்தபடம்.

# விண்வெளி ஆராய்ச்சியில் இஸ்ரேலுக்கு ரஷ்யா உதவி

(டெல் அவிவ்)

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இஸ்ரேல் நாடு சோவியத் ரஷ்யாவின் உதவியைப் பெறவுள்ளது.

இஸ்ரேல் நாட்டு மாணவர்களுக்கு சோவியத் ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி பற்றிய கல்வியினையும் பயிற்சியினையும் வழங்குவதற்கு அனுமதித்துள்ளது. இத[illegible]பிரதியீடாக சோவியத் நாட்டு மாணவர்களுக்கு இஸ்ரேல் தொழில் நுட்பக்கல்வியை வழங்கத் தயாராகவுள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வரும் இஸ்ரேல் ஆயுத உற்பத்தியில் முக்கிய நாடாகவும் பிளாஸ்டிக் கைத்தொழிலில் உலகின் முன்னணி நாடாகவும் விளங்கி வருகின்றது. (52)

## வீடு கட்ட முதலாவது கொடுப்பனவு

(வவுனியா)

வவுனியா இராஜேந்திரன் குளம் கிராமத்தில் பாதிப்படைந்த மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான முதலாவது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன,

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் உள்ள இக் கிராமத்தில் 50 குடும்பங்களுக்கு இந்த நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்சப்பட்டன.

இதோடு வீடு கட்டுவதற்கான சிமெந்தும் வழங்கப்பட்டுள்ளது, (தி)

# கிணற்றில் இருந்து யானை மீட்கப்பட்டது

(வவுனியா)

ஓமந்தை நாவற்குளம் பகுதி கிணற்றுக்குள் தவறி விழுந்த யானை உயிருடன் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் கிணற்றின் ஒரு பகுதியை இடித்து. யானை மீட்டெடுக்கப்பட்டது.

இந்த யானை தற்போது ஓமந்தை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அலுவலக வளவிற்குள் கட்டிவைக்கப்பட்டுள்ளது.

யானையைப் பொறுப்பேற்றுக் கொண்ட விடுதலைப் புலிகள் தாம் அதை வளர்க்க இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (தி)


## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

09.05.1990 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த இச்சீட்டிழுப்பு எதிர்வரும் 15.05.90 (செவ்வாய்க்கிழமை) மாலை 4.30 மணிக்கு நாயன்மார்கட்டு ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறும்.

**Europe China Hotel,**
**Jaffna.**

(B 920)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


உத்தரவிட்டிருக்கிறார்.

புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆந்திரமாநிலத்துக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்கு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருப்பதாக அமைச்சர் பி. உபேந்திரா தெரிவித்திருக்கிறார்.

**கோபாலசாமி கோரிக்கை**

தமிழ் நாட்டின் கரையோரப்பகுதிகளையும் சென்னைக் கரையோரப் பகுதிகளையும் புயல் மோசமாகப் பாதித்திருப்பதாகவும்உடனடியாகதமிழ் நாட்டுக்கு உதவிகளை விரைந்து அனுப்பவேண்டும்என்றும் மக்களவையில் தி.மு. கழக உறுப்பினர் வை. கோபாலசாமி சேட்டுக் கொண்டார்.

ஆந்திராவில்கிருஷ்ணா மாவட்டத்தில் இருபத்திநான்கு பேரும் விசாகப் பட்டினத்தில் பதினான்கு பேரும்கோதாவரி மேற்கு கோதாவரி, குண்டூர் ஆகிய மாவட்டங்களில் ஆறு பேர் வீதம் பதினெட்டுப் பேரும் நெல்லூரில் ஒருவரும் கடும் புயல், மழை, வெள்ளம் காரணமாக மாண்டனர்.

கிருஷ்ணா மாவடடத்தில் தொண்ணூ[illegible] கிராமங்கள் கடல் நீரில் மூழ்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கடும்மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. போக்குவரத்து, மின்சாரவிநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் நாட்டில் பாதிப்பு**

தமிழ் நாட்டில் புயல் மழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள்பற்றிய விபரம்அந்தந்த மாவட்டங்களில் திரட்டப் பட்டு வருவதாகவும், இவை கிடைத்ததும் ஏற்பட்டஇழப்புக்கு ஏற்ப நிவாரணம் வழங்கப்படுமென்று முதலமைச்சர் மு. கருணாநிதி சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

கோடிக்கரைக்கு அருகே மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்களைத் தேடும் பணியில் எல்லைக் காவல் துறையினருமஈடுபட்டுள்ளனர் விமானமும் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.இலங்கைத் தூதருக்கும் இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டுள்ளது

**62 பேருடன் கப்பல் தப்பியது**

அறுபத்திரெண்டு பேருடன் நேற்று முன்தினம் புயலில் சிக்கிக் கொண்ட இந்தியக் கூட்டுத்தாபனக் கப்பல் புயலிலிருந்து தப்பி சென்னைத் துறைமுகத்தைப் போய்ச் சேர்ந்தது.

பகுதி வேலிகள் சீராக அடைக்காத காரணத்தினால் இவற்றின் மூலம் பயணச்சீட்டு இல்லாமல் வரும் பயணிகள் தப்பிச் செல்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது, (தி)

## மெதடிஸ்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கல்விச்சேவைகள் அமைச்சர் திருமதி சுனித்திரா ரணசிங்க, கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச்செயலாளரும், மதிய போசனம், தமிழ்மொழி அமுலாக்கலுக்குப் பொறுப்பான கல்வி அமைச்சுப் பணிப்பாளருமான திரு. வி. சபாநாயகம், வடக்கு,கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் திரு ஜெ.சற்குணராஜா, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம். வடமராட்சி கோட்டக் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பீ. வீரபத்திரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (25)

## கிளிநொச்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மிகுதிப் பணம் ஜூலை மாதத்தில் கிடைக்கவுள்ளதால் அப்பணத்திற்கான வேலைகளையும் மாரி காலத்திற்குமுன் செய்து முடிக்க தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. (49)

## வாக்காளர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புகள் கூட தனிச்சிங்களத்திலேயே வழங்கப்பட்டுள்ளன.

எனவே இது தொடர்பாக தேர்தல் திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுத்து தமிழ் மொழியிலான வாக்காளர் இடாப்புக்களை தயாரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## சாம் இறுதிக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டார்.

இறுதிக் கிரியைகளில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் மற்றும் சில அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி, அநுரா பண்டாரநாயக்கா, தினேஷ்குணவர்த்தனா, புளட் கரவைக் கந்தசாமி ரெலோ ஸ்ரீக்காந்தா, ஈ. பி. ஆர். எல். எவ். பிரேமச்சந்திரன் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

வழங்கப்பட்டிருக்கும் நாடுகளில் தமது பிள்ளைகள்தான் கல்வியில்சிறந்தவர்கள் என்று எல்லாப்பெற்றோர்களும் நம்புகின்றார்கள். க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 80 வீதம் தானும் மேற்கொண்டு படிப்பைத்தொடர்வதில்லை. பெற்றோரின் அபிலாசைகளைக் குழப்பாமல் நாம் ஒருபடிமேல் சென்று தொழில் பாடத்தையும், தொழில் நுட்பப் பாடத்தையும் அறிமுகப் படுத்தவுள்ளோம். ஒரு மாணவன் ஜீ.சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தால்தான் ஏ. எல். படிக்க முடியும். ஜீ. சி. ஈ (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடையாத மாணவன் தொழில் அல்லது தொழில் நுட்பப்பாடத்தில் சித்தியடைந்தால் படிப்பைத் தொடரலாம். பல்கலைக் கழகங்களில் இக்கற்கை நெறிகளைக் கற்கலாம். இதனால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிக் கரிசனை கொள்ளும் பெற்றோர் குழம்புவதற்கு அவசிய மேற்படாது.

அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தொழில், தொழில் நுட்பக் கல்வி பற்றிய பெற்றோரின் மனப்பாங்கு மாறவேண்டும் என்றும், அறிமுகப்படுத்தவிருக்கும் இக் கற்கை நெறியானது மாணவர் தமது இலக்கையடைவதற்கு உதவும் என்றார்.

## பிரச்சினைகளை. . .

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் என்றார்.

செங்கைஆழியான் பேசுகையில். வசைபாடாத இலக்கிய சஞ்சிகை சிரித்திரனாகும். பாரம்பரிய விழுமியங்களைக் கைவிடுதலே கலாசார சீரழிவாகும் தமிழருக்கேயுரித்தான கலாசார விழுமியங்கள் இன்று சீரழிந்து வருகின்றன இந்தச் சீரழிவை நகைச்சுவை மூலம் இலகுநடையில் மக்களுக்கு உணர்த்தியவர் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் ஆவார் என்று குறிப்பிட்டார்.

சிரித்திரன் சித்திரக்கொத்து நூல்வெளியீட்டு விழா நேற்று மாலை 3-30 மணியளவில் பொன் பூலோகசிங்கம் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி), சி. தர்மகுலசிங்கம், அகளங்கன் இன்னும் பலர் உரையாற்றினர்.

நூலின் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் இ. முத்துத்தம்பி வாங்கினார். தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், திருமதி பாலசிங்கமும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். (மு)

ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. மிக விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தற்பொழுது சிமெந்து, பெற்றோல், சாராயம், குளிர்பாணம், சிகரெட் ஆகியவற்றிற்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் வரி விதிப்பைக் காரணம் காட்டி மக்கள்மீது கூடுதலான நெருக்கடிகளைத் தோற்றிவிப்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்சப்படும் என புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

பாக இலங்கை ஒழுங்கமைப்பின் குழுவின் தலைவர் டாக்டர் எம். எம். உவைஸ், முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சருடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தினார். இந்த மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு அமைச்சு சகல ஒழுங்குகளையும் செய்யவுள்ளது.

பிடத்தளையில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில்கலந்து கொள்வதற்கென முஸ்லிம் கல்விமான்கள், இஸ்லாமிய அறிஞர்கள் ஆகியோர் பயணம் செய்வது தொடர்பான ஒழுங்குகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.


விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும்,
நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும்
இணைந்து நடாத்தும்

## வினா விடைப் போட்டி

நிபந்தனைகள்

(1) யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும்.
(2) இப்போட்டியில் க. பொ. த. சாதாரண, உயர்தர மாணவர்கள் பங்குபற்றலாம்.
(3) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாணவர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றலாம்.
(4) வினாக்கள் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு, பொது அறிவு சம்பந்தமானதாக அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி 20 – 5 - 90
வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக்கேடயமும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

(B 678)



## மரண அறிவித்தல்

### திருமதி பர்வதபத்தினி அம்மா கணேசக்குருக்கள்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்னாள் பிரதமகுரு காலஞ்சென்ற அ. கணேசக்குருக்கள் அவர்களின் மனைவி பர்வதபத்தினி அம்மா நேற்று (10-05-90) அதிகாலை சிவபதமடைந்தார். இவர் ஜெகதாம்பாளின் அன்புத் தாயாரும், ஜெயமோகன், சந்திரமோகன், ராஜமோகன், சந்தானலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (10.05.90) மாலை தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி,
கொக்குவில்.

தகவல்.
மு. சந்திரமோகன்

R.468

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

ஜாதி மதங்களைப் பாரோம்-
உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின
ராயின்
வேதிய ராயினு மொன்றே-
அன்றி
வேறு குலத் தின யிராயினு
மொன்றே
ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு-
நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்
கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்
டும்- இந்த
ஞான வந் தாற்பின் நமக்
கெது வேண்டும்.

**மகாகவி பாரதி**





## சிறுநிலவே, புதுமலரே...

*மண்ணில் புரண்டெழுந்து*
*மகிழ்வோடு விளையாடி*
*கண்ணில் ஒளிபெருக*
*கவிதையென முறுவலிக்கும்*
*மின்னற் சுடர்க்கொழுந்தே*
*மேதினியில் உன் காலம்*
*இன்னும் புலரவில்லை*
*இருள் இன்னும் தீரவில்லை*
*இன்னல் உறங்குகின்ற*
*இடைக்கால நேரமிது*
*சின்னஞ்சிறு மழலை*
*சேயிழையே... சிறுநிலவே...*
*அன்னை மடிமீது*
*அலர்கின்ற மலரானாய்*
*கன்னல் தமிழ் காக்க...*
*கால் பதிக்கும் நிலம்காக்க...*
*இன்னுயிரைக் கொடுத்தேனும்*
*எதிர்காலம் தனை உயர்த்தும்*
*உன் மாமன் மாரிங்கே*
*உரிமையுடன் இருக்கின்றார்...*
*கண்மணியே நீ சிரிப்பாய்..*
*கவலைகளை தான் மறப்பாய்.*

- செந்தூரன்

இழப்பு ஏற்பட்டது. காயத்துடன் தப்பிய ஒரு சில சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் முகாமுக்குள் ஓடினார்கள். வெற்றி வீரராக முகாமுக்குத் திரும்பிய கோணேசுக்கும் நேருவுக்கும் ஒரே குதூகலம். முகாமில் பலத்த வரவேற்பு.

**பண்ணைப் பொலிஸ் நிலையத் தாக்குதல்**

1987ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு முகாமின் பொறுப்பாளனாக நேரு நியமிக்கப்பட்டான். இதன்பின் 1987 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23ஆம் திகதி விடுதலைப் புலிகள் பண்ணை பொலிஸ் விடுதி மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். அந்த ஆண்டு இடம்பெற்ற முதலாவது மினி முகாம் தாக்குதல்இதுவாகும்.

1985ஆம் ஆண்டு சித்திரை மாதம் விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டபின் அமைக்கப்பட்ட இந்த பண்ணை இராணுவ பொலிஸ் அதிரடிக் கூட்டு முகாம் அமைக்கப்பட்டிருந்த இடம் புவியியல் ரீதியாக போராளிகள் ஒரு தாக்குதலை நிறைவேற்றி முடிக்க அனுகூலமான அமைவிடத்தைக் கொண்டதல்ல என்பதோடு இராணுவ ரீதியாக எதிரிகளுக்குச் சாதகமான இராணுவ கேந்திர முக்கியத்துவமுடையஇடத்தில் அமைக்கப்பட்டதாகவும் இருந்தது.

இத்தாக்குதல் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

மறைந்த மேஜர் முரளி (இரத்தினசிங்கம் — ஆவரங்கால்) இத்தாக்குதலின்போது காயமுற்ற விடுதலைப் புலிகளில் ஒருவராகும்.

**ஒப்றேசன் லிபறேசன்**

இலங்கை அரசு வடமராட்சி மீது மேற்கொண்ட இந்த இராணுவ நடவடிக்கைக்கு எதிரான யுத்தத்தில் நேருவும் பங்கெடுத்தான். அச்சுவேலிப்பகுதியில் நின்றபோராளிகளோடு இணைந்து போரிட்டான். இந்தத் தாக்குதலின் போது இவன் தனது நண்பர்களான பவான், நீதவான் முதலான நண்பர்களை இழந்து வேதனையுற்றான்.

இதன்பின் 1987 ஜுலையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவான போது வீட்டின் பொருளாதாரக் கஷ்டங்களைக் கருத்தில் கொண்டு போராட்ட நடவடிக்கைகளிலிருந்து சற்று ஒதுங்கிக்கொள்ளவிரும்பினான். இதனை அறிந்த இவனது தந்தையார் எல்லோரும் நாட்டுக்காகப் போராடுகிறார்கள். நீ மட்டும் ஏன் ஒதுங்கப்பார்க்கிறாய் என்று கேட்டு இயக்கத்தைவிட்டு விலகினால் வீட்டிற்கு வரவேண்டாம் என்று கூறி இயக்கத்திற்கு அனுப்பி வைத்தார். மீண்டும் நேரு போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினான்.

''போராடுவதற்காக இயக்கத்திற்கு வருகின்ற ஒரு இளைஞனை அவனது பெற்றோர்களது அல்லது சகோதரர்களது வேண்டுகோளுக்காக அவனைத் திருப்பி வீட்டுக்கு அனுப்பி வைப்பது என்பது அவனுக்குப் போராடுவதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய நியாய பூர்வமான சந்தர்ப்பத்தை மறுப்பதற்கு ஒப்பானதாகும். இது எம்மைப் பொறுத்தவரை எமக்கு நாமே செய்து கொள்ளும் துரோகமுமாகும்''

இவ்வாறான ஒரு சரியான கருத்தை முன்வைத்து கடந்த வாரம் விடுதலைப் போராளி சண் (பைப் அண்ணை) பிள்ளைகளைத் தேடிவந்த பெற்றோர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது நேருவை உற்சகாக மூட்டி மீண்டும் களத்திற்கு அனுப்பி வைத்த நேருவின் பெற்றோர்களது சுதந்திர வேட்கைதான் நினைவுக்கு வந்தது.

**இந்திய இராணுவத்துடன் மோதல்கள்**

1987 ஒக்டோபரில் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளோடு மோதலைத் தொடங்கிய போது நேரு குடாநாட்டின் பல பாகங்களிலும் தாக்குதல்களில் ஈடுபட்டான். கப்டன் லோலோ, கப்டன் றங்கன், கப்டன் அக்காச்சி, லெப். குட்டி, கோட்டை சுக்ளா,

உங்கள் சுவடுகள்
வரலாற்றின் சுவடிகள்
உங்கள் தாகம்
விடுதலை தாகம்
நீங்கள் சிந்திய ரத்தம்
தாயகத்தின் மீது
நீங்கள் பதித்த முத்தம்
உங்கள் தியாகம்
சுதந்திர யாகம்
விடுதலைப் போரில்
விடியலின் கீதம்.

தும். ரஷ்யாவில் சார் மன்னருக்கு எதிராகலெனின் நடாத்திய யுத்தமும் சீனாவில் மாவோவின் புரட்சியும் கியூபாவில் பாடிஸ்டா ஆட்சிக்கு எதிரான பிடலின் போர்க்குரலும் ஈரானில் ஷாவுக்கும் பிலிப்பைன்சில் மார்க்கோவுக்கும் ருமேனியாவில் செசன் கோவுக்கும் எதிரான மக்களின் போராட்டமும் இங்குப்

''நீங்கள் பாடசாலை மாணவர்கள்-வயதில் குறைந்தவர்கள்-படிப்பை முடித்த பின் விடுதலை ஸ்தாபனத்தில் இணைத்துக் கொள்கிறேன்' என்று அல்பேர்ட் இருவருக்கும் சொன்னார், ஆனால் 'நீங்கள் எம்மை இணைத்துக் கொண்டு பயிற்சி தந்தால் நாம் உங்களைப் போல் எதிர் காலத்தில் விளங்குவோம்' என

விமானி செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

**காவல் அரண் பொறுப்பாளன்**

1985-ஆம்ஆண்டு நடுப்பகுதி தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதன்பின் யாழ்ப்பாணக் குடா நாட்டைவிட்டு

எரிகுண்டுகளை வீசினர். ஒரு பெற்றோல் செற்றும் மூன்று வீடுகளும் சேதமாயின. காலை ஏழு மணி தொடக்கம் பிற்பகல் ஐந்து மணிவரை இடம்பெற்ற இம் மோதலில் இலங்கை இராணுவம் வசாவிளான் சென்றல் கல்லூரிக்குள் நுழைந்து முகாமிட முயற்சிகளை மேற்கொண்டது. இத்தாக்குதலில் நேரு





எதிர்காலம் தனை உயர்த்தும்
உன் மாமன் மாரிங்கே
உரிமையுடன் இருக்கின்றார்...
கண்மணியே நீ சிரிப்பாய் ..
கவலைகளை தான் மறப்பாய்.

- செந்தூரன்

உங்கள் சுவடுகள்
வரலாற்றின் சுவடிகள்
உங்கள் தாகம்
விடுதலை தாகம்
நீங்கள் சிந்திய ரத்தம்
தாயகத்தின் மீது
நீங்கள் பதித்த முத்தம்
உங்கள் தியாகம்
சுதந்திர யாகம்
விடுதலைப் போரில்
விடியலின் கீதம்.

தாயகம் செங்கோல் சாய்ந்த மண்ணில் சங்கீதம் இனிமை தராது. தாயகம் எரிகின்றபோது பிடில் வாசிக்க நீரோ மன்னர்களும் கிடையாது அராஜகம் தாண்டவமாடும் மண்ணில் வாத்தியக் கருவிகளும் போர்க்கருவிகளாகும். ஆலயங்கள் அத்தாணி மண்டபங்களாகி அடுத்த தயாரிப்புகளைப் பற்றிய ஆலோசனைக் கூடங்களாகும். பாடசாலைகள் பாசறைகளாகும். பல்கலைக் கழகம் தோறும் பட்டறைகள் உருவாகும். கல்லறைகள் கூட கருத்தரிக்கும்.

இது வரலாற்று நியதி மட்டுமல்ல காலத்தின் தேவையுமாகும். அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்டவன் நடைப்பிணமாவான். எதிர்த்துநின்று வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவனின் வெற்றுடலும் புதைக்கப்படும் போது வெடிமருந்துப் பொதியாகிப் பரிணமிக்கும். அதன் அதிர்வுகள் ஆயிரம் ஆயிரம் வீரர்களின் அணி வகுப்புக்களுக்கு சங்கநாதமாக ஒலிக்கும். புரட்சி கீதங்களுக்கு உதடுகள் சுருதி கூட்டும். அங்கொரு பிரளயம் உருவாகும் அது அடுத்த தலைமுறையை ஆற்றுப்படுத்தும். ரஷ்யாவில் சார் மன்னருக்கு எதிராகலெனின் நடாத்திய யுத்தமும் சீனாவில் மாவோவின் புரட்சியும் கியூபாவில் பாடிஸ்டா ஆட்சிக்கு எதிரான பிடலின் போர்க்குரலும் ஈரானில் ஷாவுக்கும் பிலிப்பைன்சில் மார்க்கோவுக்கும் ரூமேனியாவில் செசன் கோவுக்கும் எதிரான மக்களின் போராட்டமும் இந்தப் பின்னணியில் புரட்சிகர மாற்றங்களே யாகும். இந் மகத்தான சாதனைகள் விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ் இளைஞர்களுக்குச் சமிக்ஞை விளக்காயினமையால் பல நெளிவு சுழிவுகளையும் அரசியல் சூறாவளியையும் எதிர்கொண்டு எங்கள் போர் தொடர்கின்றது. பிராந்திய வல்லரசு வாதம் தனது அதளபாதாள வாயை அகலப் பிளந்தும் அகப்படாமல் போராட்டத்தை நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தமது உயிர்த்தியாகத்தால் கட்டிக் காத்தனர். தியாகத்தின் வடிவமாக விளங்கும் வீர வேங்கைகளில் கப்டன் நேருவினதும் (ஜீவகுமார்-கதிரிப்பாய்) லெப். குட்டியினதும் (சிவநேசன் – நவக்கிரி) களநிகழ்வுகள் நெஞ்சம் நிறைந்தவையாகும்.

> போராடுவதற்காக இயக்கத்திற்கு வருகின்ற ஓர் இளைஞனை அவனது பெற்றோர்களது அல்லது சகோதரர்களது வேண்டுகோளுக்காக அவனைத் திருப்பி வீட்டுக்கு அனுப்பி வைப்பது என்பது அவனுக்குப்போராடுவதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய நியாயபூர்வமான சந்தர்ப்பத்தை மறுப்பதற்கு ஒப்பானதாகும். இது எம்மைப் பொறுத்தவரை எமக்கு நாமே செய்துகொள்ளும் துரோகமுமாகும்.
>
> ஒரு போராளியின் கருத்து.

### இயக்கத்தில் நேரு

பாடசாலை மாணவனாக இருந்த காலகட்டத்திலேயே நேரு விடுதலை ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டான். 1983ஆம் ஆண்டுகால கட்டத்தில் அச்சுவேலி பகுதி பொறுப்பாளராகவிருந்த மேஜர் அல்பேர்ட்டுடன் இவனும் இன்னுமொரு போராளியும் தொடர்பு கொண்டனர்.

''நீங்கள் பாடசாலை மாணவர்கள்-வயதில் குறைந்தவர்கள்–படிப்பை முடித்த பின் விடுதலை ஸ்தாபனத்தில் இணைத்துக் கொள்கிறேன்' என்று அல்பேர்ட் இருவருக்கும் சொன்னார், ஆனால் 'நீங்கள் எம்மை இணைத்துக் கொண்டு பயிற்சி தந்தால் நாம் உங்களைப் போல் எதிர் காலத்தில் விளங்குவோம்' என நேரு இதற்குப் பதில் சொன்னான். நேருவின் பதிலில் ஒரு உறுதியைக் கண்ட அல்பேர்ட் இருவரையும் ஸ்தாபனத்துக்குள் உள்வாங்க ஏற்பாடுகளை செய்தார்.

1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இயக்கத்தில் சேர்ந்து கொண்ட நேரு, அல்பேர்ட் கொடுத்த பொறுப்புகளைச் சிறப்பாகச் செய்தமையால் 1984ல் நடுப்பகுதியில் பயிற்சிக்காக அனுப்பட்டான். பயிற்சிக்களத்தில் சிறப்பாகப் பயிற்சியைப் பலரும் பாராட்டும் வகையில் முடித்துக் கொண்ட நேரு, அல்பேர்ட் குறாப்பில் சேர்க்கப்பட்டான். லெப். கோணேஸ் போன்றோருடன் இணைந்து களத்தில் குதித்தான்.

### சுதுமலை மோதல்

இலங்கை அரசினால் 1985 நடுப்பகுதியில் கொண்டுவரப்பட்ட யுத்த நிறுத்தம் 1985 டிசம்பரில் முற்றுப் பெற்றது. இதைத் தொடர்ந்து 1985 டிசம்பர் 20ஆம் திகதி அரியாலையிலும் 1985 டிசம்பர் 21-ம் திகதி சுதுமலையிலும் ஹெலி மூலம் இறங்க முயற்சி செய்த இலங்கை இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் பலமாக மோதினர். அரியாலையில் கார்த்திக் (உதயன்-கோண்டாவில்) வீரமரணமுற்றான். மறுநாள் சுதுமலையில இடம் பெற்ற மோதலில் மேஜர் அல்பேர்ட் தலைமையில் சென்ற குழுவில் கப்டன் நேருவும் இடம் பெற்றான் கப்டன் பாரூக் யாழ்நகரிலிருந்து ஒரு துப்பாக்கியுடன் சுதுமலைக்கு விரைந்து சென்று இலங்கை இராணுவத்துடன் மோதினான். பலத்த மோதல் இடம் பெற்றது, மோதலின் போது மேஜர் அல்பேர்ட் வீரமரணமுற்றான். தரையிலிறங்க முயற்சி செய்த இலங்கை இராணுவம் தாம் வந்த ஹெலியிலேயே தப்பியோடியது. ஒரு ஹெலியை இஸ்ரவேலிய மொசாட் உளவுப் படையைச் சேர்ந்த ஒரு விமானி செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### காவல் அரண் பொறுப்பாளன்

1985-ஆம்ஆண்டு நடுப்பகுதி தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதன்பின் யாழ்ப்பாணக் குடா நாட்டைவிட்டு இராணுவம் வெளியேறாதபடி ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களைச் சுற்றி விடுதலைப்புலிகளால் சென்றிகள் போடப்பட்டன. இவ்வாறு வலிகாமம் கிழக்கில் போடப்பட்ட ஒரு காவல் அரணுக்கு நேரு பொறுப்பாளனாக விருந்தான். இதன் பின் பலாலி




இராணுவ விமானப்படை கூட்டு முகாம் தொண்டமானாறு இராணுவ முகாம் என்பவற்றிலிருந்து இலங்கைஇராணுவம் வெளியேற முயன்ற போதெல்லாம் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறான ஒரு பெரிய மோதல் 1987ஆம் ஆண்டு மாசி மாதம் ஆறாம் திகதி வசாவிளான். பலாலி, புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில்ஏற்பட்டது, தற்காப்புக்கான இந்தயுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினர் எரிகுண்டுகளை வீசினர். ஒரு பெற்றோல் செற்றும் மூன்று வீடுகளும் சேதமாயின. காலை ஏழு மணி தொடக்கம் பிற்பகல் ஐந்து மணிவரை இடம் பெற்ற இம் மோதலில் இலங்கை இராணுவம் வசாவிளான் சென்றல் கல்லூரிக்குள் நுழைந்து முகாமிட முயற்சிகளை மேற்கொண்டது. இத்தாக்குதலில் நேரு காலில் காயப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டான்

### வளலாய் தாக்குதல்

தொண்டமானாறுக்கும் - வசாவிளானுக்கும் இடைப்பட்ட பகுதியில் வளலாய்பாம் பீச் ஹொட்டல் அருகாமையில் இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இத்தாக்குதலுக்கு லெப்ரினன் கோணேஸ் (இரத்தினம் தங்கராசா அச்சுவேலி) தலைமை தாங்கினான். இத்தாக்குதலில் கோணேசுக்கு உதவியாக இளம் புலியாகவிருந்த நேரு பங்கேற்றான். இப்பகுதி குடிசன அடர்த்தி குறைந்த பகுதியாக விருந்தபடியால் அடிக்கடி வெளியேறி பலாலிக்குச் செல்லும் இராணுவத்தினர் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதுண்டு, இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்பது கோணேசின் விருப்பம். ஒரு பரிபூரணமான வெற்றியைத் தரக்கூடியவகையில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள விரும்பிய இவர்கள் இருவரும் அதற்கான முழு முயற்சியில் மூன்று தடவைகள் ஈடுபட்டனர். மூன்று முறையும் அது கைகூடவில்லை. றொபர்ட் பூரூஸ் என்பவன் தனது முயற்சியில் எட்டுத்தடவை தோல்வியைச் சந்தித்துக்கொண்டாலும் ஒன்பதாவது தடவை அம் முயற்சியில் வெற்றி பெற்றதுபோல மூன்று தடவைகள் முயன்று தோல் யுற்றபோதிலும் மனம் தளராது தொடர்ந்து முயற்சி செய்த இவர்கள்இருவரும் நாலாவது தடவை முயன்றபோது பூரணமான வெற்றியைப் பெற்றனர். கண்ணி வெடிக்கு மேலாக இலங்கை இராணுவ கவசவாகனம் வந்தபோது கோணேஸ் எக்ஸ்புளோரை அழுத்தினான். கவசவாகனம் தூக்கி வீசப்பட்டது. இலங்கை இராணுவத்திற்குப் பலத்த

யாக போராளிகள் ஒரு தாக்குதலை நிறைவேற்றி முடிக்க அனுகூலமான அமைவிடத்தைக் கொண்டதல்ல என்பதோடு இராணுவ ரீதியாக எதிரிகளுக்குச் சாதகமான இராணுவ கேந்திர முக்கியத்துவமுடைய இடத்தில் அமைக்கப்பட்டதாகவும் இருந்தது.

இத்தாக்குதல் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.



நேரு

அதாவது அப்போதைய ஜனாதிபதியாக விருந்த ஜே. ஆர். கடைசிப் பயங்கரவாதி இருக்கும்வரை இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்பட மாட்டாது எனக் கூறிக் கொண்டிருந்தார். அவரின் அமைச்சரவையில் தேசியபந்தோபஸ்து அமைச்சராகவிருந்த லலித் அத்துலத் முதலியோ தனது படைகள் தீவிரவாதிகளைத் தேடிக் கண்டு பிடித்து அழிக்கத் தயங்காது என்று பத்திரிகையாளர் மாநாட்டைக்கூட்டிக்கொண்டிருந்த வேளையில் இத்தாக்குதல் இடம் பெற்றது.

இத்தாக்குதலில் அல்பேர்ட் வீட்டிலிருந்து இரண்டுபோராளிகள் பங்குபற்றினார்கள். ஒருவர் லெப்ரினன்ட் கோணேஸ் மற்றவர் நேரு. கோணேஸ் ஒரு ஆர். பி. ஜியையும் நேரு அதனைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வெடி மருந்து பொருட்களுடன் கோணேசுக்கு உதவியாகவும் இத் தாக்குதலில் பங்கு பற்றினார்கள்.

கிட்டண்ணாவும் லெப்ரினன்ட் கேணல் ராதாவும்கூட்டாக இணைந்து தலைமை தாங்கிய இத்தாக்குதலில் பன்னிரண்டு சிப்பாய்கள் இறந்து போனார்கள். 14 பேர் படுகாயமடைந்தார்கள். எட்டு சிப்பாய்கள் சிறைப்பிடிக்கப் பட்டார்கள். இறந்தவர்களுள் பம்பலப்பிட்டியைச் சேர்ந்த சார்ஜன்ட் சொய்சாவும் ஒருவர். பலத்த காயமடைந்தவர்களில் இரண்டாம் லெப்ரினன் L. D. ஜெயசிங்காவும் ஒருவராகும். ஐந்து விடுதலைப் புலிகள் வீரமரணமுற்றனர்,

ளும் துரோகமுமாகும்''

இவ்வாறான ஒரு சரியான கருத்தை முன்வைத்து கடந்த வாரம் விடுதலைப் போராளி சண் (பைப் அண்ணை) பிள்ளைகளைத் தேடிவந்த பெற்றோர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது நேருவை உற்சகாக மூட்டி மீண்டும் களத்திற்கு அனுப்பி வைத்த நேருவின் பெற்றோர்களது சுதந்திர வேட்கைதான் நினைவுக்கு வந்தது.

### இந்திய இராணுவத்துடன் மோதல்கள்

1987 ஒக்டோபரில் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளோடு மோதலைத் தொடங்கிய போது நேரு குடாநாட்டின் பல பாகங்களிலும் தாக்குதல்களில் ஈடுபட்டான். கப்டன் லோலோ, கப்டன் றங்கன், கப்டன் அக்காச்சி, லெப். குட்டி, கோட்டை சுக்ளா, லெப். சிறைவாசன் இப்படியாகப் பலரும் வலிகாமம் வடக்கிலும் வலிகாமம் கிழக்கிலும் பல இடங்களில் போரில் ஈடுபட்டார்கள். இவர்களோடு கப்டன் நேருவும் பங்கு பற்றினான். இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் முழுமையான கெரில்லா வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர். இக்கால கட்டத்தில் மிகவும் சாதாரண பொதுமக்களின் குடிசைகளில் தனது நண்பர்களோடுதங்கியிருந்த நேரு அம் மக்களின் உதவியுடன் பல தாக்குதல்களையும் மேற்கொண்டான்.

## நேதாஜி

### பிரதேச பொறுப்பாளன்

1988 ஆம் ஆண்டு ஆரம்ப காலகட்டத்தில் நேரு அச்சுவேலி பகுதி பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் பல அரசியல் வேலைத் திட்டங்களைச் செயல்படுத்திய நேரு சமூகப் பணிகளையும் செய்து வந்தான்.

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அன்னை பூபதி அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்து மட்டக்களப்பில் உண்ணா விரதத்தை மேற்கொண்டார். ஒன்று நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் மற்றது நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை; அன்னை பூபதி போராட்ட மையத்தை மக்கள் மத்தியில் வைத்து சாத்வீக வழியில் மேற்கொண்ட போது இந்தியா அதனை முறியடிக்க பல வழிகளையும் மேற்கொண்டது. அன்னை பூபதியின் கோரிக்கைகளைத் தாம் ஏற்றுக்கொள்வதாயின் அக்கோரிக்கைகளை விடுதலைப் போராளிகளும் ஏற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## விண்வெளி விஞ்ஞானம்

வெள்ளியின் தரைப் பரப்பு உஷ்ணம், வரட்சி என்பன மிக அதிகம் என்பதனால் அங்கே உயிர்ப்பிராணிகள் எதுவும் இருக்க முடியாது. அதனுடைய துருவப் பிரதேசங்களில் சிறிதளவு நீர் திரவ ரூபமாக இருந்தாலும் கூட அத்திரவத்தின் உஷ்ணம், உயிர்கள் தோன்றுவதற்கு இன்றியமையாத புரதம், நியூக்கிளிக் அமிலங்கள் ஆகியவற்றை அழித்து விடக்கூடிய அளவு அதிகமாக இருக்கும். பூமியில் உள்ள உயிர்களுக்கு இரசாயன அத்திபாரமாக விளங்குபவை புரதங்களும் நியூக்ளிக் அமிலங்களும் ஆகும். இந்தப் பிரபஞ்சத்திலே வேறு இடங்களிலே வித்தியாசமான உயிரினங்கள் இருப்பது சாத்தியமானாலும் கூட, வெள்ளியில் உள்ள உஷ்ணத்தின் அளவு எந்தவிதமான உயிரினங்களுக்கும் எதிரியானதாகவே இருக்கும்.

மிகப் பழைய காலத்திலே, வெள்ளி இப்போது இருப்பதிலும் பார்க்க உஷ்ணம் குறைந்ததாக திரவ ரூபத்தில் உள்ள நீரையும், அந்த நீரில் உற்பத்தியான உயிரினங்களையும் கொண்டதாக இருந்திருக்கக் கூடும். பழைய காலத்திலே வெள்ளியில் உயிரினங்கள் தோன்றியிருக்குமானல், அவைவிரைவிலேயே பரிணாம வளர்ச்சி பெற்று, -பயங்கரமான விரோதச் சூழலுக்கு ஏற்பவிருத்தியடைந்திருக்கக் கூடும். அப்படியான உயிரினங்கள் மேலே உள்ள அடர்ந்த முகிற் கூட்டங்களிலே, பாதுகாப்பைத் தேடிச் சென்று அந்த முகிற் கூட்டங்களிலேயே உயிருடன் வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால் இது சாத்தியமானதாகத் தோன்றவில்லை.

உஷ்ணத்தைத் தாங்கக் கூடிய கவசம் உடைய விண்கலத்தை, உஷ்ணமான வெள்ளிக்கு அனுப்பி வைத்து ஆராய்ந்தால் அங்கே இப்போதும் சரி முன்னெப்போதும் சரி உயிர்கள் இருந்ததே இல்லை என்ற முடிவுக்கு வர நேரிடலாம். இன்று, வெள்ளி இறந்து போனதோர் கிரகமாகத் தோன்றிய போதிலும், வாழ்வதற்கு உதவாத, உபயோகம் எதுவுமற்ற, ஒரு கிரகம் அது என்று முடிவு செய்து விட முடியாது. அது செழிப்பான வளம் உள்ளது. நீர் உண்டு! நிறையக்




கரியமில வாயுவும் உண்டு, வெளிச்சமும் உண்டு. உயிரினங்களுக்குத் தேவையான நைதரசன் வெள்ளியின் சூழலிலே அதிக அளவில உண்டு. உயிருக்குத் தேவையான சாதாரண மூலகங்களான பொஸ்பரஸ், மக்னீசியம், போன்ற மூலகங்களும், வெள்ளியின் துல்லியமான தூசு நிறைந்த தரையிலே உண்டு என நம்பப்படுகிறது. ஆகவே, தாமாகவே வெள்ளியில் உயிர்கள் தோன்ற முடியாது போனாலும், பூமியில் இருந்து அங்கே உயிர்கள் கொண்டு செல்லப்பட்டு, குடியேற்றுவதற்கான உதவிச் சாத்தியங்கள் வெள்ளியில் உண்டு. பூமியிலே உள்ள உயிர்கள் பலவிதமான சூழ்நிலைகளில் வாழ்வதற்கு ஏற்றதாக, தம்மைத் தாமே தயார்ப்படுத்திக் கொள்கின்றன. வெந்நீர் ஊற்றுக்களில், பனிப்படலங்களில், உப்புக்கழிகளில், இருட்டும் அதிககுளிருள்ள சமுத்திரத்தின் அடித்தளங்களில் - இப்படிப் பல்வேறு வகைப்பட்ட சூழ்நிலைகளிலே உயிரினங்கள் பூமியிலே வாழ்ந்து வருகின்றன.

வெள்ளியிலும் இது சாத்தியமாகலாம்!

பூமியில் பல்வேறு வகைப்பட்ட சூழல்களிலும் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. வெள்ளிக் கிரகத்திலும் உயிர்வாழக் கூடிய உயிரினங்களைக் கண்டு பிடிப்பதோ அல்லது அப்படிப்பட்ட உயிரினங்களை அபிவிருத்தி செய்வதோ முடியாத காரியமல்ல என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். முதலிலே, இது போன்ற உயிரினங்களைக் குடியேற்றி, காலப் போக்கிலே, உயர்ந்த ரக - பரிணாம வளர்ச்சியுற்ற - உயிரினங்கள் வாழக் கூடிய இடமாக வெள்ளியை மாற்றக் கூடியதாக இருக்கும் என நம்புகிறார்கள்.

வெள்ளிக் கிரகத்திலே, முதல் முதலாக ஜீவராசிகளைக் குடியேற்றுவதற்கு ஏற்ற ஒரே ஒரு இடம், அங்கே உள்ள முகிற் கூட்டங்களாகும். வெள்ளியின் முகிற் கூட்டங்களின் அடிப்பகுதியிலே காணப்படும். நீர்த்துளிகள் 15°F உஷ்ண அளவில் இருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. இந்தப் பிரதேசத்திலே ஜீவராசிகள் வசிப்பதற்கான வசதிகள் இருப்பதாக ஆராய்ச்சி மூலம் விஞ்ஞானிகள் அறிந்திருக்கிறார்கள். இந்த இடத்திலே வாழ நேரிடும் கிருமிகள் ஜீவராசிகள் - ஆகாயத்தில் - அந்தரத்திலேயே முற்றாக வாழ வேண்டும். முகிற் கூட்டத்தில் இருந்து நீரைப் பிரித்து எடுக்கக் கூடியவையாகவும் நைதரசன் வாயுவை உணவாக உபயோகிக்கக் கூடியனவாகவும் - அதற்கேற்ற உடலமைப்பை உடையனவாகவும் இவை இருக்க வேண்டும். புற ஊதா வெளிச்சத்தினால் பாதிக்கப்படாத தன்மை உடையனவாகவும், இன விருத்தி செய்வதற்கு சௌகரியமான சூழல்களை அடையும் போது விரைவிலே இனவிருத்தி செய்யக் கூடியனவாகவும் இந்த ஜீவராசிகள் இருக்க வேண்டும்.

இவை எல்லாம் மிகவும் சிரமமான செயல்கள் என்று நினைக்கத் தோன்றலாம். பூமியிலே சாதகமற்ற சூழ்நிலையில், இந்நிலைக்கு ஏற்றவாறு கிருமிகள் தம்மை மாற்றிக் கொள்ளும் சக்தி உடையவை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது ஜெற் விமானங்களில் உள்ள எரிபொருள் நிரப்பும் தாங்கிகளில் சில கிருமிகள், சீவித்து, வன்முறையில் மாறும் உஷ்ணநிலை, அமுக்கநிலை என்பனவற்றால் பாதிக்கப்படாமல் வாழ்கின்றன. இன்றும் சில கிருமிகள், அணு இயந்திரங்களில், குளிரூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தாங்கிகள், நீர்க்குழாய்களில் வசிக்கின்றன. இந்த அணு இயந்திரங்களில் உள்ள கதிர்வீச்சு மனிதனை உடனே கொல்லக் கூடிய சக்திவாய்ந்தது என்பதை மறந்து விடக் கூடாது. பூமியிலே சில கிருமிகள், இவ்வாறு, மிகக் கஷ்டமான சூழ்நிலைகளிலே கூட வாழ்வதற்குத் தம்மைத் தயாராக்கிக் கொண்டிருப்பதை அவதானித்த விஞ்ஞானிகள், கிரகங்களிலே கிருமிகளைக் குடியேற்றுவதை பெரியதோர் கஷ்டமான விஷயமாகக் கருதவில்லை.

ஆரம்பத்திலே, கிரகங்களில் குடியேற்றுவதற்கு உபயோகிக்கக்கூடிய கிருமி-நீலப் பச்சை நிறமுள்ள 'அல்கே' என்பதாகும். தேவைப்படும் தகைமைகளில் பெரும்பாலான தகைமைகள் நீலப்பச்சைப்பாசிக்கு-அல்கேக்கு-உண்டு. பரிசோதனைக்கூடத்தில் பலவருடங்களுக்குப் பயிற்சி அளித்து, வெள்ளியின் முகிற் கூட்டங்களில் வாழ்வதற்கேற்ற தன்மையை இவற்றிலே அதிகரித்துக் கொள்ள முடியும். இப்போதுள்ள விண்வெளி வாகனங்களை உபயோகித்து இந்த நீலப்பச்சைப் பாசிக் கிருமிகளை வெள்ளியிலே சேர்க்க முடியும். ☐

**உடுவில் வியன் நமசிவாயம்**




**--- பாப்பாணன்**

(9)

அக்கினி மூண்டெழுந்தேதமிழ் மாந்தர்
ஆஸ்திகள் தீய்ந்தனவே
திக்குகள் எங்கும் தீப்பிழம்பாகி
தீய்ந்துபொ சுங்கினவே
பிக்குகள்கூட பேரினவாதம்
பேசித்திரிந்தனரே
தக்கது தமது செயலெனக் கொலைகள்
தருக்கர் புரிந்தனரே.

புத்தனின் வேதப் போதனையாவும்
பொய்த்தது இம் மண்ணில்
குத்திடல் குதறல் கொலை கற்பழித்தல்
கொடுமைகள் மலிந்தனவே
வித்தக ரானதமிழா் அறிவில்
வைத்திட வேகொள்ளி
எத்தர்கள் யாழூர் புத்தக நிலையம்
எரித்தனர் தீவைத்தே

பற்றிய தீயாழ் பட்டணம்மற்றும்
பரந்துள தமிழ் மண்ணில்
சுற்றியெ ரிந்தது சொத்துகள்யாவும்
சாம்பெரென் றாகியதே
கற்றிடு சிறுவர் காளையர் கிழவர்
கண்ணிற் பட்டவரை
பற்றியி ழுத்து பாதையில்வைத்து
'பட பட' வெனச் சுட்டார்

ஐம்பத்தாறில தமிழர்க் கெதிராய்
ஆலம் கக்கியவன்
வெம்போர்க்கிழவன் ஜே. ஆர். ஆட்சி
வெறியர்க் கிடமளிக்க
அம்பை எய்த ஆரியவேடன்
அத்துலத் முதலியின் கீழ்
வம்பர் கூட்டம் வளமார்தமிழர்
வாழ்வில் குழி பறித்தார்

''போரென்றால் போர்'' பொருதிடும் என்றான்
பொறுப்பில்லாத் தலைவன்
யாரென்றாலும் கொன்றிடில் தமிழரை
''ஜயவேவா''! என்றான்
சீர் கொன்றார்கள் சிறப்பிழந்தார்கள்
சிறீலங்கா மண்ணில்
நேர் நின்றாட நெஞ்சுரமில்லா
நீசர் குண்டெறிந்தார்.

எண்பத்தி மூன் றாடிக்கலவரம்
இறுதிக் கலவரமே




முகத்திலோ, உடலிலோ வெண்மையான புள்ளிகள் உள்ள ஒரு சிலரையாவது நீங்கள் நிச்சயம் சந்தித்திருப்பீர்கள். 'வெண் குஷ்டம்' எனப் பயந்து நீங்கள் ஒதுங்கியிருக்கக் கூடும். உண்மையில் இந் நோய்ச்கும் குஷ்டரோகத்திற்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. தொற்றிவிடக் கூடும் எனப் பயப்படவும் தேவையில்லை, இழிவான நோய் என எண்ணி [illegible]

பாலும் உடைகளுக்குள் மறைந்திருக்கும் தொடைப் பகுதிகளும், மார்புப் பகுதிகளும், உடலின் ஏனைய பகுதிகளை விட வெண்மையாக இருக்கிறன.

இது தொற்றும் நோயல்ல என்பதாலும், இதற்கும் குஷ்டரோகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததாலும், இதனை 'வெண்குஷ்டம்' என

மொத்த சனத் தொகையில் ஒரு சத விகிதத்தினரைப் (1%) பீடிக்கிறது. சில வேளைகளில் தைரோயிட் சுரப்பி நோய்கள், நீரிழிவு நோய், ஒரு வகைச் சோகை நோய் (Pernicious anaemia) ஆகியவற்றுடன் இணைந்தும் தோன்றலாம்.

வெண் தோல் கோளாறை ஒரு பரம்பரை நோய் என்று நிச்சயம் சொல்ல முடியாது. ஆயினும் இக் கோளாறு உள்ளவர்களில் முப்பது விகிதத்தினருக்கு (30%), அவர்களது நெருங்கிய உறவினர் ஒருவருக்காவது இது இருந்திருக்கும். எனவே உங்களுக்கோ, உங்கள் துணைவருக்கோ, இக் கோளாறு இருந்தால் உங்கள்

### வெண்தோல் கோளாறு

### கொழும்புக்குப் போன கிராமவாசி

தென்னிலங்கைக் கிராமவாசி ஒருவன் கொழும்பு நகரை சுற்றிப் பார்க்கவென்று ரயிலில் பயணமானான். இயற்கையின் வேண்டுதலை நிறைவேற்ற அவன் முதலாம் வகுப்புப் பெட்டியில் இருக்கும் கழிவறையில் நுளைந்தான். அங்கே 'கொமோட்' இருந்தது. அதனைப் போன்ற ஒன்றை முன்பொரு நாள் தன் ஊரில், நீதிமன்றத்திற்குப் போன போது கண்டிருக்கிறான். தொங்கும் சங்கிலியை இழுத்து தண்ணீர் அடித்து கடமையை முடித்திருக்கிறான்.

யார் இறந்ததாக லீவு எடுத்திருக்கிறாய், மகனுக்கு ஞானஸ்நானம் என்று லீவு எடுத்திருக்கிறாய் இப்போது என்ன காரணத்திற்காக லீவு கேட்கிறாய்? என்று கேட்டார்.

தடுமாறும் குரலில் எழுதுவினைஞர் சொன்னார்.

''சார்...ர் ர் நான் கலியாணம் செய்துகொள்ள!'' ☐

### தொழில் தரணி

ஒரு இறைச்சிக் கடைக்குச் சென்ற சட்டத்தரணியொருவர் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

ஒரு நாய் தினமும் வந்து இறைச்சியைக் களவாடிக் கொண்டு போகிறது ஐயா.... நீங்கள் என்றால் என்ன செய்வீங்கள்....? என்று கேட்டார் முதலாளி.

# மருத்துவபீடம்

# வெண்தோல் கோளாறு தொற்றும் நோயல்ல

□ டொக்டர் எம். கே. முருகானந்தன்

முகத்திலோ, உடலிலோ வெண்மையான புள்ளிகள் உள்ள ஒரு சிலரையாவது நீங்கள் நிச்சயம் சந்தித்திருப்பீர்கள். 'வெண் குஷ்டம்' எனப் பயந்து நீங்கள் ஒதுங்கியிருக்கக் கூடும். உண்மையில் இந் நோய்க்கும் குஷ்டரோகத்திற்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. தொற்றிவிடக் கூடும் எனப் பயப்படவும் தேவையில்லை, இழிவான நோய் என எண்ணி அருவருப்படையவும் தேவையில்லை.

இதை நோய் என்று கூடக் கூறமுடியாது. தோலின் நிறம் சம்பந்தமான கோளாறு என்று தான் சொல்ல வேண்டும். தோலுக்கான நிறத்தைக் கொடுப்பது மெலனின் (Melanin) என்ற பொருளே. இது உடலின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே அளவில் இருப்பதில்லை. இதனால் தான் ஒரே மனிதனுடைய வெவ்வேறு பகுதிகள் கூட நிறத்தில் மாறுபடுகின்றன.

சூரிய வெளிச்சத்தில் உள்ள அல்ரா வயலட் கதிர்கள் (Ultra violet rays), மெலனின் உற்பத்திக்கு தேவைப் படுகின்றன. இதனால் தான் பெரும்பாலும் உடைகளுக்குள் மறைந்திருக்கும் தொடைப் பகுதிகளும், மார்புப் பகுதிகளும், உடலின் ஏனைய பகுதிகளை விட வெண்மையாக இருக்கிறன.

இது தொற்றும் நோயல்ல என்பதாலும், இதற்கும் குஷ்டரோகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததாலும், இதனை 'வெண்குஷ்டம்' என அழைப்பது தவறு. இதனை 'வெண் தோல் கோளாறு' என்று அழைப்பதே பொருத்தமானது. ஆங்கிலத்தில் விட்டிலிகோ (Vitiligo) என்றும் லியூகோடேமா (Leucoderma) என்றும் சொல்லுவார்கள்.

வெண் தோல் கோளாறு எதனால் தோன்றுகிறது. என்று இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் ... பிடிக்கிறது. சில வேளைகளில் தைரோயிட் சுரப்பி நோய்கள், நீரிழிவு நோய், ஒரு வகைச் சோகை நோய் (Pernicious anaemia) ஆகியவற்றுடன் இணைந்தும் தோன்றலாம்.

வெண் தோல் கோளாறை ஒரு பரம்பரை நோய் என்று நிச்சயம் சொல்ல முடியாது. ஆயினும் இக் கோளாறு உள்ளவர்களில் முப்பது விகிதத்தினருக்கு (30%), அவர்களது நெருங்கிய உறவினர் ஒருவருக்காவது இது இருந்திருக்கும். எனவே உங்களுக்கோ, உங்கள் துணைவருக்கோ, இக் கோளாறு இருந்தால் உங்கள் குழந்தைக்கும் கட்டாயம் வரும் என எண்ணிக் கலங்க வேண்டியதில்லை.

பெரும்பாலும் இக் கோளாறு இள வயதிலேயே ஆரம்பித்துவிடுகிறது. அரைவாசிக்கு (50%) அதிகமானோருக்கு இருபது வயதிற்கு முன்னரேயே ஆரம்பித்துவிடுகிறது. புருவம், உதடுகள், கண், மூக்கு, முலை, புறங்கை, புறங்கால், முதுகு போன்ற இடங்களில் சிறு புள்ளிகளாகத் தோன்றி, பின் பெரிதாகலாம். சிலருக்கு மிக விரைவில் பரவி உடலின் பெரும்பகுதியைப் பாதிக்கலாம். சிலருக்கு குறிக்கப்பட்ட சில இடங்களில் மாத்திரம் இருக்கக் கூடும்.

எலி கடிப்பதால் தான் இக் கோளாறு ஏற்படுகிறது என எமது மக்கள் பரவலாக நம்புகிறார்கள். இதற்கு எந்த விதமான விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களும் கிடையாது எனது மருத்துவ சேவையின் போது, இதுவரை எலி கடியினால் இந்நோய் தோன்றிய எவரையும் நான் சந்திக்கவில்லை.

இருபது வீதமானவர்களில் (20 வீதம்) இக் கோளாறு எந்தவித வைத்தியமும் இல்லாமல் தானே மறைந்து விடும். ஏனையோருக்கு வைத்தியம் தேவைப்படும். சில காரமான மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. அல்ரா வையலட் லைட்ம் உதவக் கூடும். தற்பொழுது அக்யூபங்சர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வள்ளுவ வாக்கியம்

இனிது !

எது, இனிது? உயரிய கொள்கையே உள்ளத்திற்கினிது. வலிமையும் இதுவே! விறல் உடையோனுக்கு வாழ்வும் இதுவே! திடமுடையோன் வாழ்விலும் தாழ்விலும் நிமிர்ந்தே நிற்பான். எனவே நிலைபெயராத் தீரன் ஆகிறான். இலட்சிய வீறு அவனது உயிர்மூச்சாகிறது. அவன் குறுகுவதில்லை. கீழ் செல்வதில்லை! சிறியதை அவனது உள்ளம் அறியாது!

காட்டினுள் வேடன் அம்பு வில்லுடன் சென்றான் அரை நாளிகையுள் அடிபட்ட முயலுடன் அவன் திரும்பினான். வேடனுக்கு அது வெற்றி! ஆனால் வீர மறவன் இதை அறியான்! சிறு முயலைக் கொல்வதில் அவன் பெருமிதம் அடையான்! நேற்று ஊரை அழித்த களிறையே அவன் தேடி நின்றான். எதிர் கொண்ட யானைமேல் இவனது கைவேல் பாய்ந்தது! ஆயினும் குறி சிறிது தவறியதால் யானை சிறு காயத்துடன் உயிர் தப்பி ஓடி மறைந்து விட்டது. யானை மறைந்த காட்டையே மறவன் இன்று மீண்டும் தேடுகிறான். கையினில் அதே வேல். நெஞ்சத்தில் இன்னும் கூடிய உறுதி. இதுவே அவனுக்கு இனிது! (குறள் 772)

நாக. பத்மநாதன்

தென்னிலங்கைக் கிராம வாசி ஒருவன் கொழும்பு நகரை சுற்றிப் பார்க்கவென்று ரயிலில் பயணமானான். இயற்கையின் வேண்டுதலை நிறைவேற்ற அவன் முதலாம் வகுப்புப் பெட்டியில் இருக்கும் கழிவறையில் நுழைந்தான். அங்கே 'கொமொட்' இருந்தது. அதனைப் போன்ற ஒன்றை முன்பொரு நாள் தன் ஊரில், நீதிமன்றத்திற்குப் போன போது கண்டிருக்கிறான். தொங்கும் சங்கிலியை இழுத்து தண்ணீர் அடித்து கடமையை முடித்திருக்கிறான்.



ஆனால் இங்கே நீர் அடிக்க ஒரு கைப்பிடி இருந்ததனால் அதனை இயக்கும் வழி தெரியவில்லை.

அலுவலை முடித்துக் கொண்டு சங்கிலியைத் தேடி அங்குமிங்கும் பார்த்தான்.

அபாயச் சங்கிலி தென்பட்டது.

அதைப் பிடித்து இழுத்தான்.

டனார்.... என்ற பெரும் சத்தத்துடன் ரயில் நின்றது.

அதிகாரிகள் ஆளைப் பிடித்துக் கொண்டனர். அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

தண்டனையாக ஐம்பது ரூபா செலுத்தி விட்டு ரயிலை விட்டிறங்கி தலை குனிந்தபடி நடந்தான்.

□

### ஏன் விடுமுறை

விடுமுறை கேட்டு விண்ணப்பித்த எழுதுவினைஞரை சற்று சினத்துடன் பார்த்த மேலதிகாரி, இங்கே பாரப்பா, கடந்த ஆறு மாத காலத்தில் மனைவியைப் பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்க்கவென்று லீவு எடுத்திருக்கிறாய், மாமி ... நானஸ்நானம் என்று லீவு எடுத்திருக்கிறாய் இப்போது என்ன காரணத்திற்காக லீவு கேட்கிறாய்? என்று கேட்டார்.

தடுமாறும் குரலில் எழுதுவினைஞர் சொன்னார்.

''சார்...ர் ர் நான் கலியாணம் செய்துகொள்ள!''

□

### தொழில் தரணி

ஒரு இறைச்சிக் கடைக்குச் சென்ற சட்டத்தரணியொருவர் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

ஒரு நாய் தினமும் வந்து இறைச்சியைக் களவாடிக் கொண்டு போகிறது ஐயா.... நீங்கள் என்றால் என்ன செய்வீங்கள்....? என்று கேட்டார் முதலாளி.

அதன் உரிமையாளரிடமிருந்து இறைச்சியின் பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுப்பேன் என்றார் சட்டத்தரணி.

அப்படியென்றால்... நீங்கள் எனக்கு முப்பது ரூபா தரவேண்டும், அது உங்களுடைய நாய்... என்றார் முதலாளி.

சட்டத்தரணி சிரித்துவிட்டுச் சொன்னார் -

''நல்லது ஏற்றுக்கொள்ளுகிறேன், என் ஆலோசனைக்கு நீ தரவேண்டிய ஐம்பது ரூபாவில் முப்பதை கழித்துக் கொண்டு மீதியைத் தா.''

□

வேட்பாளர்: குட் மோர்னிங் நான் தமிழர் உரிமைக்காகப் பாடுபடுவேன்...

வாக்காளர்: வணக்கம் என்று சொல்லுங்க, ஐயா.... இது தெரியாத நீங்களா தமிழர் உரிமைக்காக....?

தொகுப்பு :

**எஸ். பி. கே.**

□

வீட்டுக்காரர்: பயப்படாமல் வாங்க குரைக்கிற நாய் கடிக்காது என்பது தெரியாதா?

விருந்தாளி: எனக்குத் தெரியும்.... அந்தப் பழமொழி நாய்க்குத் தெரியாதே....!

□

டொக்ரர்: பயப்பட வேண்டாம் இந்த வருத்தம் எனக்கும் வந்தது. சுகமாயிட்டேன்....

நோயாளி: உங்களுக்கு வேறு டொக்ரர் வைத்தியம் செய்திருப்பார்...

□

### பலகை

ஒரு தமிழறிஞர் பகல் உணவுக்கு அமர்ந்திருக்க மனைவி இலையிட்டு சோற்றைவைத்து பற்பல கறிவகைகளை அடுக்கடுக்காகப் பரிமாறினாள்.

ஒவ்வொன்றும் சுவையாக இருந்தது. எல்லாவற்றையும் உண்ண நாக்குத் துடித்தது. அவ்வளவிற்கு ஒவ்வொன்றும் சுவையாக இருந்தது.

இவ்வளவையும் எடுத்துண்ண பலகை இல்லையே என்றார் புலவர்.

அமர்வதற்கு பலகை கேட்கிறார் என எண்ணிய மனைவி உள்ளே போய் ஒரு பலகை எடுத்து வந்து இதில் இருந்து உண்ணுங்கள் என்றார்.

அமர்ந்துண்ணவா பலகை கேட்டேன். இவ்வளவு சுவையான பண்டங்களையும் எடுத்து உண்ண இரு கைகள் போதா.... பல கை இல்லையே என்றல்லவா சொன்னேன், என்றார் புலவர்.

சுவை விருந்தூட்டிய நங்கை கணவரின் சொல் விருந்தில் சொக்கி நின்றாள்.

□

ஒரு நாய்: காரணமில்லாமல் ஏன் குரைத்தாய்? என் தூக்கத்தை கலைக்கவா?

மறுநாய்; இந்திய ஜவான்கள் போவதுபோல கனவுகண்டேன்...

ஒருநாய்: ஓ:.பழையநினைவு..

□

ஆலம் கக்கியவன்
வெம்போர்க்கிழவன் ஜே. ஆர். ஆட்சி
வெறியர்க் கிடமளிக்க
அம்பை எய்த ஆரியவேடன்
அத்துலத் முதலியின் கீழ்
வம்பர் கூட்டம் வளமார்தமிழர்
வாழ்வில் குழி பறித்தார்

''போரென்றால் போர்'' பொருதிடும் என்றான்
பொறுப்பில்லாத் தலைவன்
யாரென்றாலும் கொன்றிடில் தமிழரை
''ஜயவேவா''! என்றான்
சீர் கொன்றார்கள் சிறப்பிழந்தார்கள்
சிறீலங்கா மண்ணில்
நேர் நின்றாட நெஞ்சுரமில்லா
நீசர் குண்டெறிந்தார்.

எண்பத்தி மூன் றாடிக்கலவரம்
இறுதிக் கலவரமே
எண்ணிக் கையில் லாத்தமிழ்மாந்தர்
இறந்த கலவரமே
புண்பட்டோரும், புலம்விட்டோரும்
புறம்பாய் இருந்தவரும்
மண்பற்றில்லா தமிழரும் மனது
மாறிய கலவரமே

வடக்கும் கிழக்கும் வேண்டாமென்று
வாழ்ந்தவர் பொருளிழந்தார்
அடக்கும் முறைக்கும் அடிக்கும் உதைக்கும்
ஆளாய் இடம் பெயர்ந்தார்
நடக்கும் பெலமும் இழந்தோராகி
நரபலிக் கிலக்கானார்
கிடக்கும் நிலையில் கப்பல் ஏறி
கிழக்கு வடக்கடைந்தார்

ஒன்றும்இல்லா ஏழைகளாகி
ஒருகுலம் இனமாக
சென்றே உயிரைக் காத்திடவென்று
சேர்ந்தார் பொதுவிடங்கள்
நின்றே ஆங்கு நாட்கள் சிலதாய்
நினைத்தார் தமிழீழம்
வென்றே வாழ்வம் வேறுஇல்லை
வழியெமக் கினியென்றார்

— தொடரும்

# சிறைப்பட்ட சிந்தனைகள்




28-11-89

இன்று ஒரு இளைஞன் ஆஸ்த்மாவின் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தான். ஆஸ்த்மா என்பது ராஜீவ் காந்திக்குக் கூட வரக்கூடாத வியாதி. இந்த காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையின் சுற்றாடல் தூசிகள் நிறைந்தது. தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் தூசிகள் எங்கள் அனைவரது உடல் நலத்துக்கும் தீங்கானவை. இந்தச் சூழ்நிலை இந்தத் தடுப்பு முகாமில் இருக்கும் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட கடுமையான ஆஸ்த்மா நோயாளிகளை சிறை வாழ்வின் கோரத்தனத்தை இன்னும் அதிகமாக உணர்த்திக் கொண்டேயிருக்கிறது.

இரவிரவாக சுமார் பதினைந்து பேர் விழித்துக் கொண்டே இருந்தோம். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க கண்களைப் புரட்டியபடி படுக்கவோ இருக்கவோ முடியாதபடி இவன் பட்டபாடு இதை எப்படி எழுத்தில் வடிப்பது? இவனைப் பற்றி விசாரித்தேன். திருமணமாகி ஒரு பெண் குழந்தைக்குத் தந்தை இவன் குழந்தை பிறக்கும்போதே இவன் சிறையில் தான். ஆரம்பத்திலேயே பிடிபட்டவர்களில்இவனும் ஒருவன். இரண்டு வருடங்களுக்கு மேல் சிறையின் கொடுமையை அனுபவித்துவிட்டான். எவ்வளவு காலமாக இந்தவியாதி உமக்கு இருக்கிறது? என்றுகேட்டேன். ''பிடிபடுவதற்கு முன்னால் எனக்கு எந்தவியாதியும் இல்லை. இவர்கள் செய்த சித்திரவதைகளின் போக்குக்கு ஏற்ப ஒவ்வொருக்கு ஒவ்வொரு வகையான வியாதி. எனக்கு ஆஸ்த்மா பிடித்துக் கொண்டது'' என்று இளைத்தபடியே துண்டுதுண்டாகப் பதில் வந்தது. உளவியல் ரீதியான தாக்கங்கள் ஆஸ்த்மாவின் வேகத்தை அதிகரிக்கின்றது என்று எங்கேயோ நான் படித்த ஞாபகம் எனவே'ஒன்றைப்பற்றியும் கவலைப்படாதேயும், எல்லாம் சரியாகி விடும்'' என்று கூறிவிட்டு நான் ஆஸ்த்மாவைப்பற்றிப் படிந்த குறிப்புக்களைச் சொன்னேன்.

''எப்படி நான் இவற்றை மறப்பது. மறக்கக்கூடிய விஷயங்களா எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்?'' என்று கூறிவிட்டு தனது அனுபவங்களை கூறத் தொடங்கினான். நான் பிடிபட்டது மானிப்பாயில் சித்திரவதைகளில்என்னென்ன ரகம் உண்டோ அத்தனையும் அனுபவித்தேன். என்னைப் போலவே இன்னும் சிலர் நான் பிடிபட்டகாலப் பகுதியில் பிடிபட்டவர்கள். உடலெங்கும் இரத்தம் வழிந்தபடி கால் உடைந்தவர்சள், மண்டை உடைந்தவர்கள் எல்லோரும் வரிசையாகப் பிணைத்தபடி அந்தமுகாமில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தனர் ஒருநாள் மாலை எங்கோ வீதியால் சென்று கொண்டிருந்த மூன்று யுவதிகளை இழுத்துக் கொண்டு வந்தனர். கொண்டு வரும்போதே தெரிந்தது இவர்கள் விசாரிக்கப் படுவதற்காகக் கொண்டு வரப்படவில்லை யென்று. பஸ்ஸிபி பெண்களுக்குப் பக்கத்தில் ஆண்கள் இருப்பது அபச்சாரம் என்று கூறும் நாடு, கண்ணகிபிறந்த நாடு, என்றெல்லாம் பெண்மைக்கும் கற்பு நெறிக்கும் மதிப்புக் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் நாட்டில் இருந்து வந்தவர்கள் எங்கள் இனத்தின் சகோதரிகளை மயிரைப் பிடித்து இழுத்து எங்களுக்குப் பக்கத்தில் விழுத்தினர். ஒவ்வொருவர் முகத்திலும் தெரிந்த வெறியுணர்ச்சி ... அதை விபரிக்கவே முடியாது.கையெடுத்துக் கும்பிட்டபடி அந்தச் சகோதரிகள் கதறினார்கள். அந்தக் கதறல் அவர்களுக்குத் தேவாமிர்தமாக இருந்தது. சகோதரிகளின் கதறல் புன்னகையை வரவழைக்கிறது இவர்களுக்கு கூட்டமாகவந்த பத்துப் பதினைந்து பேர் அந்தச் சகோதரிகளை ஒருவர் மாறி ஒருவராக ......... நாங்கள் எத்தனையோ சித்திரவதைகளை அனுபவித்தோம் அப்போதெல்லாம் இவர்கள் எங்களைக் காக்கவந்தவர்களல்ல. இவர்கள் இப்படித் தான் நடந்துகொள்வார்கள் என்றெல்லாம் எங்களுக்குத் தெரிந்தபடியால் உடல் வேதனையை மட்டுமே இவர்களால் ஏற்படுத்த முடிந்தது ஆனால் இந்தச் சம்பவம், அந்தச் சகோதரிகளின் கதறல்...... மனதை உலுக்கி எடுத்துவிட்டது. அதுமட்டுமல்ல மயங்கிக் கிடந்த அந்தச் சகோதரிகளின் மயக்கத்தைத் தெளிய வைப்பதற்காக நாங்கள் கட்டியகட்டுடன் கிடந்தபடியே முகத்தில் தண்ணீர் தெளித்தோம். அப்படித் தண்ணீர் தெளித்ததிற்காக திரும்பவும் சித்திரவதையை அனுபவித்தோம்.

என்னைப் பார்ப்பதற்கு வர வேண்டாம். விடுதலையாகி வந்ததும் எல்லாம் நேரில் பேசுவோம் என்று வீட்டிற்குத்தகவல் அனுப்பி இருந்தேன், வயிற்றில் குழந்தையுடன் இருந்த என் மனைவியால் எத்தனை நாள் தான் என்னைக் காணாமல் இருக்க முடியும்? மனம் பொறுக்காமல் எனது அம்மாவையும் கூட்டிக் கொண்டு ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தாள்.

> எங்களுக்கு கண்ணகியின் பெருமையையும், இந்திய ராணுவத்தின் பெருமையையும் ஒரே நாக்கால் மாற்றி மாற்றிப் பேசும் ம. பொ. சி-யின் அரசியல் வேண்டாம்- எங்கள் மண்ணுக்குப் பொருத்தமான அரசியல் நடைமுறை மில்லர் வழியும், திலீபன் வழியும் தான், அதையே நாம் தொடர்ந்து செல்ல உறுதி பூணுவோம்.

தூரத்தில் இவர்களைப் பார்த்தவுடனேயே தலையிலடித்துக் கொண்டேன். விபரீதம் நடந்து விடப்போகின்றது என என்மனம் பதைபதைத்தது. பெண் உருவத்தைக் கண்டதுமே சபலப்படும் இவர்கள் எனது மனைவியை நோக்கி விரைந்தனர். ஆமியின் வேகத்தையும்நோக்கத்தையும் தெரிந்து கொண்ட என் மனைவியும் அம்மாவும் கதறிக்கொண்டே ஓடினர். இவர்கள் துரத்திக் கொண்டு போயினர். ஆனால் அவர்கள் ஓடித் தப்பி விட்டனர். இந்தக் காட்சியைக் கண்ட என் மன நிலை எப்படியிருக்கும், கொஞ்சம் நினைத்துப்பாருங்கள். அதன் பின் எனது மனைவியோ, அம்மாவோ என்னைப் பார்க்கவரவில்லை. காங்கேசன் துறைக்கு என்னைக் கொண்டு வந்தபின்னர் சில மாதங்கள் சென்றபின்னரே என்னைப்பார்க்க வந்தனர். கட்டியகணவனான எனது கண்முன் எனது மவைி கதறிக் கொண்டு ஓடுப்போது கட்டப்பட்ட நிலையில் நான் பட்ட வேதனை......... தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனான், கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

என்மனம் ஏனோ சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞான கிராமணியாரை நினைத்துக் கொண்டது ''சிலம்புச்செல்வி. என்ற தலைப்பில் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் கற்பின் பெருமை பற்றி எங்களூரில் அடுக்கு மொழியில் அழகாகப் பேசியது மனதில் நிழலாடியது. அப்போதெல்லாம் கற்பு நெறிக்கு மதிப்பளிக்கும் நாடு பாரதநாடு என்று எமது அயல் நாட்டை பெருமையுடன் நான் நோக்கினேன். இன்று அதே சிலம்புச் செல்வர் இந்தியப்படை எம்மண்ணில் செய்யும் கற்பழிப்புகள் பலாத்காரங்களை தூரதர்ஷனிலும் இந்தியவானொலியிலும் எப்படியெல்லாம் நியாயப்படுத்துகின்றார்? அதுமட்டுமா ஒரு தடவை திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கேலி பண்ணுவதாக நினைத்துக் கொண்டு ''உண்ணாவிரதம் என்றால் தண்ணீர் குடித்து, கோரிக்கைவைத்து ..... இது தான் உண்ணாவிரதம் அது தான் நாங்கள் அறிந்தது இது என்ன உண்ணாவிரதம்?'' என்று கேட்டார். இவர்களைத் தான் இந்திய சுதந்திரப் போராட்டவீரர்கள் என்று தற்போதைய இந்திய அரசு தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது. நன்றாகக் கொண்டாடட்டும் எங்களுக்கு கண்ணகியின் பெருமையையும் இந்திய ராணுவத்தின் பெருமையையும்ஒரேநாக்கால்மாற்றி மாற்றிப் பேசும் ம. பொ. சி. யின் அரசியல் வேண்டாம். எங்கள் மண்ணுக்குப் பொருத்தமான அரசியல் நடைமுறை மில்லர் வழியும் திலீபன் வழியும் தான். அதையே நாம் தொடர்ந்து செல்ல உறுதி பூணுவோம். □

## மனவலயம்

# • தாழ்வு எண்ணங்களைத் தகர்ப்போம்

• வாழ்க்கை அகன்ற பாதையில் – எதுவித எல்லையுமில்லாமல் நீண்ட தூரம் பயணப்பட்டுக்கொண்டிருக்கிறது.

மரணம்தான் வாழ்க்கையின் எல்லை என்று கூறப்பட்டு வந்தாலும், மரித்தபின்புகூட சிலர் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எம்முடன் பேசி, சிரித்து, கைகுலுக்கி, அழுது, நித்தமும் எம்மைவிட்டு ஓர் அங்குல தூரம்கூட விலகிச் செல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் சிலர்.

இவர்கள் அறிஞர்களாக இருக்கலாம்: கவிஞர்களாக இருக்கலாம் மனித வாழ்க்கைசிறப்படைய புரட்சி செய்த போர் வீரர்களாக இருக்கலாம்.

ஆனால்—

இறந்த பின்பும் எமது நேசிப்பிற்குரியவர்கள் அனைவரும் சிறந்த மனிதர்களாக வாழ்ந்தவர்கள். அதனால்தான் எமது இதயங்களுக்குள் அவர்கள் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

நாமும் சிறந்தவர்களாக, மனிதர்களாக, மனிதர்கள் மத்தியில் இடம் பிடிக்க வேண்டுமென்றால் – முதலில் மனிதர்களாக வாழ முயற்சிக்க வேண்டும். எமது இந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றோமானால் - இறந்தபின்னர்கூட நாம் வாழ்ந்து கொண்டேயிருப்போம்.

காலைச் சூரியனின் சிவந்த வதனம், சில்லென்று வீசும் காற்றின் மெல்லிய ஸ்பர்சம், தம் வாழ்க்கைக் காலத்தை வளமுடன் முடித்துக்கொண்டு, நிலம்தான் தமது எதிர்கால சாம்ராஜ்யம் என்ற அர்த்தப்படும் வகையில் மண்ணில் விழுந்து கிடக்கும் இலைகள்...... இவையெல்லாம் எம்முள் சிறப்பாக வாழ்ந்தவர்களின் பெயர்ப்பட்டியலை இறக்குமதி செய்கின்றன.

நாம் தினமும் பலருடன் சம்பாஷணை செய்கின்றோம். பல புதுவிதமான காட்சிகளைக் கண்டு ரசிக்கின்றோம். நூற்றுக் கணக்கான வார்த்தைகளை வாசித்துக்கொள்கின்றோம்.

சம்பந்தப்பட்டவற்றோடு ஒட்டியிருக்கும்போது சஞ்சரிக்க துடிக்கிற நாம் தனித்து இருக்கும் போது இயங்கும்போது சிறைப் படுத்தப்பட்டு விடுகிறோம்.

தேகம் மட்டும் சிறைவைக்கப்பட்டிருப்பது சிறை வாழ்க்கையல்ல; எமது எண்ணங்கள், சிந்தனைகள் உணர்வுகள் கட்டுப்பட்டு இருப்பது கூட ஒருவித சிறை வாழ்க்கைதான்.

இதற்கு அடிப்படைக் காரணம் எமது தாழ்மை மனப்பான்மையே இன்றைய - நிகழ்கால இளைஞன் தலை நரைப்பதற்கு முன்பே – பற்கள் உதிர்வதற்கு முன்பே வலிமையினை இழந்து விடுகிறான்.

## வவுனியா - திலீபன்

தாழ்வு எண்ணங்களினால் – நிகழ்கால இளைஞன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளான்.

அணுகுண்டு விழுந்து வெடித்த இடங்களிலும், மனிதர்கள் நடந்த பாதைகளிலும் புற்களோ – செடிகளோ முளைவிடாது என்று - எனது நண்பர் ஒருவர் சொன்னார். காரணம் அணுகுண்டிற்குள் தேங்கியுள்ளசக்தி மனிதனின் பாதங்களுக்குள்ளும் உண்டாம்,

நியாயம்.

மனிதன் தான் அணுகுண்டினை உற்பத்தி செய்கிறான். அந்த அணு குண்டோடு மனிதனை ஒப்பிட வேண்டிய நிர்ப்மந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அதாவது,



'யாழ்ப்பாணத்தில தண்ணியடிக்கிற சனம் கூடின மாதிரி போதை வஸ்து பாவிக்கிற சனம் கூடின மாதிரி கன

போய் பெரிய பிரச்சினையாப் போச்சு'

'நீ பெரிய சண்டியன் தானே. போற இடமெல்லாம் உனக்குச்

...தது. உளவியல் ரீதியான தாக்கங்கள் ஆஸ்த்மாவின் வேகத்தை அதிகரிக்கின்றது என்று எங்கேயோ நான் படித்த ஞாபகம் எனவே 'ஒன்றைப்பற்றியும் கவலைப்படாதேயும், எல்லாம் சரியாகிவிடும்'' என்று கூறிவிட்டு நான் ஆஸ்த்மாவைப்பற்றிப் படிந்த குறிப்புக்களைச் சொன்னேன்.

''எப்படி நான் இவற்றை மறப்பது. மறக்கக்கூடிய விஷயங்களா எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்?'' என்று கூறிவிட்டு தனது அனுபவங்களை கூறத் தொடங்கினான். நான் பிடி அடுக்கி வைக்கப்பட்டிருந்தனர் ஒருநாள் மாலை எங்கோ வீதியால் சென்று கொண்டிருந்த மூன்று யுவதிகளை இழுத்துக் கொண்டு வந்தனர். கொண்டு வரும்போதே தெரிந்தது இவர்கள் விசாரிக்கப் படுவதற்காகக் கொண்டு வரப்படவில்லை யென்று. பஸ்ஸிபி பெண்களுக்குப் பக்கத்தில் ஆண்கள் இருப்பது அபச்சாரம் என்று கூறும் நாடு, கண்ணகிபிறந்த நாடு, என்றெல்லாம் பெண்மைக்கும் கற்பு நெறிக்கும் மதிப்புக் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் சகோதரிகளின் கதறல் புன்னகையை வரவழைக்கிறது இவர்களுக்கு கூட்டமாகவந்த பத்துப் பதினைந்து பேர் அந்தச் சகோதரிகளை ஒருவர் மாறி ஒருவராக ......... நாங்கள் எத்தனையோ சித்திரவதைகளை அனுபவித்தோம் அப்போதெல்லாம் இவர்கள் எங்களைக் காக்கவந்தவர்களல்ல. இவர்கள் இப்படித்தான் நடந்துகொள்வார்கள் என்றெல்லாம் எங்களுக்குத் தெரிந்தபடியால் உடல் வேதனையை மட்டுமே இவர்களால் ஏற்படுத்த முடிந்தது

...கள் தூரத்திக் கொண்டு போயினர். ஆனால் அவர்கள் ஒடித் தப்பி விட்டனர். இந்தக் காட்சியைக் கண்ட என் மன நிலை எப்படியிருக்கும், கொஞ்சம் நினைத்துப்பாருங்கள். அதன் பின் எனது மனைவியோ, அம்மாவோ என்னைப் பார்க்கவரவில்லை. காங்கேசன் துறைக்கு என்னைக் கொண்டு வந்தபின்னர் சில மாதங்கள் சென்றபின்னரே என்னைப்பார்க்க வந்தனர். கட்டியகணவனான எனது கண்முன் எனது மனைவி கதறிக் கொண்டு ஓடும்போது கட்டப்பட்ட நிலையில் நான் பட்ட

...போராட்டவீரர்கள் என்று தற்போதைய இந்திய அரசு தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது. நன்றாகக் கொண்டாடட்டும் எங்களுக்கு கண்ணகியின் பெருமையையும் இந்திய ராணுவத்தின் பெருமையையும்ஒரேநாக்கால்மாற்றி மாற்றிப் பேசும் ம. பொ. சி. யின் அரசியல் வேண்டாம். எங்கள் மண்ணுக்குப் பொருத்தமான அரசியல் நடைமுறை மில்லர் வழியும் திலீபன் வழியும் தான். அதையே நாம் தொடர்ந்து செல்ல உறுதி பூணுவோம். □




**□ 31-3-90ம் திகதி பகல் 12-30 மணிக்கு பருத்தித் துறை வீதியில் செல்லும் பஸ்சில்**

**□ பண்ணைக் கடற்கரைப் பக்கம்**

**□ தேனீர்க்கடை பலகாரங்களில் கைபோடுபவர்கள்**

'அண்டைக்கு பருத்தித்துறைக்குப் போட்டு வரேக்க சி. ரி. பி. பஸ்சில நடந்த கூத்தைப் பற்றிச் சொல்லேல்லை,' என்று தொடங்கினான் விக்கி.

'என்னடாப்பா என்ன நடந்தது' 'என சவுந்திரம் கேட்டான்.

'எங்களுக்குத் தெரியாமல் எப்படாப்பா நீ பருத்தித்துறைக்கு போனனி' என்று தாடிமாமா கேள்விக்கணை தொடுத்தான்.

'மார்ச் மாதம் 31ஆம் திகதி எங்கடை வீட்டாக்களோடை வல்லிபுரக் கோயிலுக்கு போட்டு வந்தனான் வரேக்கதான் பஸ்சில சிக்கலாப்போச்சு.

'என்ன'

'அந்த பஸ் கண்டக்டர் மனிசத்தன்மை இல்லாத ஆளாய் இருந்தார்.'

'ஏன்'

'கனபேருக்கு மிச்சக் காசு கொடுக்கேல்லை. வயது போன ஆட்களோடை, இளம்பெம்பிளையளோடை மரியாதையில்லாத பேச்சு வார்த்தை எண்டு ஒரே அமளி.'

'கனக்கப் பிரச்சினை போல'

'ஓமோம். கனக்கத்தான். சில விசயங்களைச் சொல்லுறன் கேளுங்கோவன்'

'ஒரு வயது போன ஆள் இறங்கேக்க மிச்சக் காசைக் கொடுக்காமல் கண்டபடி பேசத் தொடங்கியிட்டார்.'

'ம் பிறகு'

'உடுப்பிட்டிச் சந்தியில மூண்டு பிள்ளையளோடை தாயும் தகப்பனும் பஸ்சை மறிச்சினம். பாவம் கஸ்டப்பட்ட ஆட்களாய் இருக்க வேணும். 'இதுகளை ஏனப்பா ஏத்துகிறாய் எண்டு கண்டக்டர் பஸ் றைவரைக் கண்டபடி பேசத் தொடங்கியிட்டார்.

'ம்'

'கோப்பாய் நாவலர் பள்ளிக்கூடத்தடியில ஒரு குழந்தையோடை இறங்கின தகப்பனோடை தர்க்கபபட்டு கடைசியில கண்டக்டருக்கும் அந்த மனிதனுக்கும் கைச் சண்டை வந்திட்டுது.'

'பெரியஅமளி எண்டு சொல்லு''

'ஓமோம் கனபேருக்கு மிச்சக் காசும் கொடுக்காமல் கண்டபடி பேசிக் கொண்டு யாழ்ப்பாணம் வரை உதே பிரச்சினைதான்.'

'பொதுசனங்களோடை ஒழுங்காயும் கண்ணியமாயும் பழக வேண்டிய பஸ் கண்டக்டரைப் போல ஆடகள் கண்ணியம் தவறி நடந்தால், எங்கை போய் முடியும்'

'அதோடை அவரின்டை வேலைக்கு அரசாங்கம் சம்பளமும் கொடுக்குது. பிறகு ஏன் மிச்சக் காசைக் கொடுக்காமல் தட்டிக் கடத்துவான்.' என்று கேட்டான் விக்கி.

□

'யாழ்ப்பாணத்தில தண்ணியடிக்கிற சனம் கூடின மாதிரி போதை வஸ்து பாவிக்கிற சனம் கூடின மாதிரி கன பிழையான அலுவல் எல்லாம் நடக்குதாம்' என்று விக்கி தொடங்க தாடிமாமா விக்கியைப் பார்த்தான்.

'என்ன கூடிட்டுது. 'என சவுந்தரம் கேட்டான்.

'டியூசனுக்கு வாற பெடிபெட்டையளும், வேறை ஆட்களும் பண்ணை கடற்கரைப் பக்கமும் மண்டைதீவுப் பக்கமும் கண்டபடி நடமாடினமாம்.'

'என்ன—காத்து வாங்கவோ'

'காத்து வாங்கவோ-மானத்தை விக்கவோ அவை வரியினம்'

'என்னடாப்பா நீ சொல்லுறாய்.'

'டியூசனுக்கும் வேறை அலுவலாய் ரவுணுக்கு வாற பெடி பெட்டையள் எல்லாம் நேரம் கெட்ட நேரம் எல்லாம் பண்ணை கடழ கரைப் பக்கமும், மண்டைதீவுப் பக்கமும்சுத்தித் திரியினமாம் உவையளை என்ன செய்யலாம் எண்டு சொல்லு. 'என ஆத்திரத்துடன் விக்கி கேட்டான்.

## அயக்கிரீவன்

'ஒழுக்கம், கட்டுப்பாடு எல்லாத்தையும் காத்தோடை விட்டுப் போட்டு இப்பிடியானஇடங்களிலை வெந்து ஒழுக்கக் கேடாய் நடக்கிறதுகளை தொடரவிட்டால் அடுத்த சந்ததிநடுறோட்டில் தான் நிக்க வேண்டிவரும்.

□

'தேர்தண்ணிக்கடைக்குப்போய் தேத்தண்ணி குடிச்சு, ஒரு வடையையோ, வாய்ப்பனையோ, சாப்பிட அருவருப்பாய் இருக்கு.'

'ஏன்'

'அண்டைக்கு எங்கடை சந்திக் கடையில தேத்தண்ணி குடிக்கப் போய் பெரிய பிரச்சினையாப் போச்சு'

'நீ பெரிய சண்டியன் தானே. போற இடமெல்லாம் உனக்குச் சண்டைதான்;' என்றான் சவுந்திரம்.

'இல்லை. கடையில போய் இருந்து தேத்தண்ணி குடிச்சுக் கொண்டு இருக்க, வேர்த்து விறுவிறுக்க ஒரு ஆள் உள்ள வந்தார் வந்தவர் எந்தக் கேட்டுக்கேள்வியும் இல்லாமல் பலகாரம் கிடந்த சோக்கேசைத் திறந்து ஒரு வடையை எடுத்து அமர்த்திப் பார்த்தார்.'

'ம்'

'உது ஒரு புதினமே' - எனக் கேட்டுச் சிரித்தான் தாடிமாமா.

'மாமாவுக்கு எல்லாம் அந்தரம் தான். எதையும் ஒழுங்காய் கேட்காமல் கதைக்கத் தொடங்காதை மாமா' என்றான் விக்கி

'சரி-சரி, கோபப்படாமல் விசியத்தைச் சொல்லு' எனச் சொன்னான் சவுந்திரம்.

'இல்லை. அந்த மனிதன் நாலைஞ்சு வடையை தொட்டுப்பிரட்டி அமர்த்திப் பார்த்திட்டு கடைசியாய் ஒண்டைஎடுத்து கடிக்கத் தொடங்கினார். பார் எவ்வளவு குப்பையான வேலை எண்டு. அவர் நசிச்சுப் பார்த்த வடையை என்ன செய்யலாம். வெளியில இருந்து வந்தவரின்டை கை எந்த நிலைமையில் இருந்திருக்கும்.'

'உப்பிடிக் கனபேர் இருக்கினம். ஏதோ தாங்கள் தான் சாப்பிடறது. மற்றவை மிருகங்கள் எண்ட நினைப்பு அவைக்கு' கண்ட கையளையும் கொண்டு உப்பிடி அளைஞ்சு போட்டு அவை போயிடுவினம். ஆர் ஆருக்கு என்ன வியாதியிருக்கு எண்டு ஆருக்குத் தெரியும்.'

'கடைக்காரர் எல்லாரும் உப்பிடி கண்டபடி கை போடுறஆட்களில் வலு கவனமாய் இருக்கவேணும்.'

'கவனம் என்ன கை-போட விடக்கூடாது'.

□

## வைரவரிகள்

□ இந்த உலகம் கோழைகளுக்கல்ல. ஓட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே?

□ நாட்டின் பொன்னான எதிர்காலமே உங்களைத்தான் சார்ந்திருக்கிறது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களையே எதிர்நோக்கியுள்ளன. எனவே செயலற்று வாழ்க்கையை வீணாகக் கழித்துக்கொண்டிருக்கிற உங்களைப் பார்க்கும் போது என்மனம்சொல்ல முடியாத வேதனைப் படுகிறது. வாழ்வில் உயரிய உழைப்பில் ஈடுபடுவீர்களாக! இதில் தாமதம் சிறிதும் வேண்டாம்.

□ எதுவும் வரட்டும். உலகம் இருந்தாலும் சரி; அழிந்து விட்டாலும் சரி நான் என் கடமையை மறக்கமாட்டேன். இவை பெருவீரனின் வார்த்தைகள்.

□ மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்த அளவு காரியங்களைச் செய்வது மேலானது.

□ உன்னைத் தியாகம்செய்வதனால் மட்டுமே பிறரின் இதயங்களை நீ வெல்ல முடியும்.

□ அடிமைகள் எல்லாருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையேயாகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான்.

... பிறர் நலத்தின்பொருட்டு உழைப்பது மனதின் கோணல்களைத் திருத்துகிறது.

**-சுவாமி விவேகானந்தர்.**

...யல்ல; எமது எண்ணங்கள், சிந்தனைகள் உணர்வுகள் கட்டுப்பட்டு இருப்பது கூட ஒருவித சிறை வாழ்க்கைதான்.

இதற்கு அடிப்படைக் காரணம் எமது தாழ்மை மனப்பான்மையே இன்றைய - நிகழ்கால இளைஞன் தலை நரைப்பதற்கு முன்பே - பற்கள் உதிர்வதற்கு முன்பே வலிமையினை இழந்து விடுகிறான்.

## வவுனியா - திலீபன்

தாழ்வு எண்ணங்களினால் - நிகழ்கால இளைஞன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளான்.

அணுகுண்டு விழுந்து வெடித்த இடங்களிலும், மனிதர்கள் நடந்த பாதைகளிலும் புற்களோ - செடிகளோ முளைவிடாது என்று - எனது நண்பர் ஒருவர் சொன்னார். காரணம் அணுகுண்டிற்குள் தேங்கியுள்ளசக்தி மனிதனின் பாதங்களுக்குள்ளும் உண்டாம்,

நியாயம்.

மனிதன் தான் அணுகுண்டினை உற்பத்தி செய்கிறான். அந்த அணு குண்டோடு மனிதனை ஒப்பிட வேண்டிய நிர்ப்மந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அதாவது,

மனிதனுக்குரிய சக்தியை, அணுகுண்டினை உதாரணப் படுத்திப் புரியவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாகியுள்ளோம்.

மற்றவர்களுடன் ஒப்பிடும்போது, நாம் ஒன்றும் தாழ்ந்தவர்களல்லர்: உடல் ஊனமுற்றவர்கள் பலர் தம்மனோ வலிமையை பயன்படுத்தி சாதனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

போதனை என்னும் போர்வையில் எம்மை புதைக்க நினைப்பவர்களின் முயற்சிகளை முறியடிப்போம்.

நீதியான - நியாயமான போதனைகளை மட்டும் ஏற்றுக் கொள்வோம்.

'நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் - அதைச் சொல்ல உனக்கிருக்கும் உரிமையை என் உயிரைக் கொடுத்தும் காப்பேன். என்று பிரெஞ்சு மேதை வோல்டர் நகைச்சுவையாகச் சொல்லியிருப்பது என்னைச்சந்திக்க வைக்கிறது. உதடுகளில் புன்னகை பூக்கவைக்கிறது.

இங்கே பலர் புத்தி புகட்டும் வடிவத்தில், தமக்கு மட்டுமே சாத்தியப்படக்கூடிய விஷயங்களை எமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் இந்த அற்பதனமான 'அறுவையை' தாங்க முடியாமல் தவித்திருக்கின்றேன். எரிச்சலில் காதுகளைப் பொத்திக்கொண்டு ஓடியிருக்கிறேன்.

இளைஞர்களே! யுவதிகளே!
எதிர்கால ஈழத்தின் இரத்தத் துளிகளே!

ஒரு மாபெரும் சமுதாய மாற்றம் இங்கு நிகழவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று.

எமது கைகள் அனைத்தும் ஒன்றாய் இணைந்தால் புதிய வாழ்க்கை பூக்கும்.

எம்மத்தியில் உள்ள அத்தனை பாகுபாடுகளையும் எம்மால் புதைக்க முடியும்.

இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் கிழட்டு அரசியல் சக்கரவர்த்திகளால் உருப்படியாக எமது சமுதாயத்திற்கு எதுவுமே செய்ய முடியவில்லை.

இங்கு போதனை செய்துகொண்டிருப்பவர்கள் மட்டுந்தான் அதிகம்.

நாம் மனிதர்களாய் வாழும்அறிஞர்களை மட்டுமே நேசிக்கப் பழகுவோம்

வார்த்தைகளில் மட்டும் தேன் பூசிப் பேசுவர்களை ஒதுக்கி வைப்போம்.

'உளுத்துப்போன
எலும்பர்களே!
உயிர்க் காம்பிலிருந்து
உதிரவிருக்கும்
முதுமைச் சருகுகளே!
உதிர்ந்து போங்கள்

குலையாத உறுதியில்
கொதிக்கும் குருதியில்
சரித்திரம் எழுதப்போகும்
சக்தியின் மைந்தர்களே,
வாருங்கள்...... வாருங்கள்

—என்ற தெலுங்குக் கவிஞன் 'ஸ்ரீஸ்ரீ' யின் வரிகளை எமது வேதமாக்கிக் கொள்வோம்.

எமக்குச் சரியெனப்படுவதை சட்டென்று செய்யத்தொடங்குவோம். எமது சிறப்பான சிந்தனைகளை செல்லரிகவைக்கக் கூடாது.

முயற்சியெடுத்தோமானால், எம்மால் பறக்கக்கூட முடியும்.

இன்னும்......

# சிரித்திரன் சுந்தரின் கதைத்தேன் துளிகள்



## பரிசில் கேடு

அவனது லட்சாதிபதி நண்பன் திருமணத்திற்கு தனது மனைவியின் ஒரேயொரு காப்பினை அடைவு வைத்து உயர்தரமான பரிசொன்றினை வழங்கினான் அவன்.-

அவன் தகுதிக்கு அது தாங்க முடியாததொன்று எனினும் கணவனின் கௌரவத்தை அந்தக் காப்பு காத்த நிறைவு மட்டுமே அவளுக்கு.

ஒருநாள்-

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஏழைத் தம்பதிகளினருகே வந்து நின்றது, அப்படகுக்கார். அதிலிருந்து வெளியே பார்த்தது அப்பணக்கார நண்பனே.

''ஏண்டாப்பா நீஎன் கல்யாணத்திற்கு வரவில்லை..... ..'' என்றதும் அசந்துபோன அந்த ஏழை.

''உங்கடை குபேரக் கும்பலுக்கை...... இந்தக் குசேலன் எப்படிப் புலப்படுவான்.... என்று சற்றிக்கிண்டலுடன் அவன் தொடர்ந்து சொன்னான்-

''நான் ஒரு பரிசுகூட தந்தேனே அதனைக்கூட நீ பார்க்க வில்லையோ.......?''

''சீ...... உந்தப் பரிசுகளைப் பார்க்க எனக்கு எங்கே நேரம் எல்லாம் ஒரு அறைக்குள் குப்பையாகக் குவிஞ்சு கிடக்கு... சரி..... .. நான் வாறன் ..... சேரியோ ..... என்றபடி படகுக் காரை நகர்த்தினான் அவன்.

திகைத்துப்போன அவன் பார்வையில் வெறுமையாகிப் போன தன் மனைவியின் கரம் தெரிந்தது........

அடைவு கடைக்கு வட்டிகட்ட வைத்துள்ள பணத்தினை பொக்கட்டுக்குள் தடவிப் பார்த்தது அவன் கரம்,

## சிசுசரிதம்

'டாக்டர் என் அப்பாவை சாக விடாதீர்கள் .. சாக விடாதீர்கள் எப்படியாவது காப்பாற்றுங்கள்...''

அந்தச் சிறுமியின் உயிரீர்க்கும் குரல் தன் தந்தைக்காக உயிர்ப் பிச்சை கேட்டு அழுதபடியே டாக்டரிடம் யாசித்தது.

சூழ நின்றிருந்தவர்களை அக்காட்சி கண்ணீரை பெருக்கி கரையவைத்தது.

கட்டிலில் நோயின் அழுத்தமான ஆளுகையில் அமிழ்ந்து அமுந்திக் கொண்டிருந்த அவரது மனச்சாட்சியை அந்தக் குரல் என்னமோ செய்து வதைத்தது.

அச்சிறுமி தாயின் வயிற்றில் கர்ப்பமுற்றிருந்த போது கருவிலேயே அவளை அழிக்க முயற்சி எடுத்து தோல்வி கண்டது அவர் மனதை உறுத்திக் கொண்டிருந்தது.

## மனிதம்

அந்த வீடு வண்ண மின்விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது.

''நூறாண்டு காலம் வாழ்க...... '' என்ற பாட்டு திரும்பத்திரும்ப ஒலித்த வண்ணமிருந்தது.

ஏராளமானோர் வாழ்த்து ஆசிகளுடன் அன்பளிப்புப் பொருட்களையும் அளித்துச் சென்றனர்.

அன்று அந்த வீட்டுக்காரரின் பிறந்த தினம்.

வாழ்த்த வந்தவர்களில் அவருக்கு முக்கிய மானவர் ஒருவர் வரவேயில்லை.

வீட்டுக்காரருக்கோ கடுங்கோபம்.

சினத்தோடு சீறினார்.

''அவருக்கும் என்னைத் தேவையான காலம் வரும்.''

அப்போது கவனித்துக்கொள்கிறேன்......''

-என்றவரின் பார்வை மேஜையில் விரித்துக்கிடந்த அன்றைய தினசரியில் பதிய .........அதில்

வராத அந்த மனிதரின் புகைப்படம்........ மேலே

உள்ள வரியில்........

'ஓராண்டு நினைவஞ்சலி....'

.........!




## தோஷங்கள்

# பெருங்கரடி தெரிகிறது

இருண்ட வானில் ஏராளமான நட்சத்திரங்கள், கிரகங்கள், துண்டு துணுக்குகள் ஜொலிக்கின்றன. இத்தகையவற்றில் நட்சத்திரங்கள் என்பவை கோடானு கோடி தொலைவில் உள்ளவை. அத்தொலைவில் தெரியும் நட்சத்திரங்களை நம் விஞ்ஞானிகள் கோலங்களாக உருப்படுத்தியுள்ளார்கள். கோலங்கள் எனில் குறித்த வடிவினதாக எனலாம்.

வேட்டைக்காரன், கரடி, தேள், சிங்கம் என்றவகையாக இக்கோலங்கள் அமைந்துள்ளன. இந்த வடிவங்களில் அந்த நட்சத்திரங்கள் அமைவதில்லை. இவ்வடிவை ஒத்த ஸ்தானத்தில் அமைகின்றன.

காலத்திற்குக் காலம் தெரியும் நட்சத்திரங்களை இனம் காண இக்கோலங்கள் உதவுகின்றன.

**தி. தவபாலன்**

இத்தகைய கோலங்களில் இன்று நம் கண்களுக்கு தெளிவாகப் புலப்படுவது பெருங்கரடி என்ற நட்சத்திரக் கூட்டமாகும். பதினொரு நட்சத்திரங்கள் பெருங்கரடியில் உள்ளன இவற்றில் ஏழு நட்சத்திரங்கள் மட்டுமே நம் வெற்றுக்கண்களுக்குதெரிவன

### தோன்றும் காலம்

பெருங்கரடிக் கூட்டம் மேமுதல் யூலை மாதம் வரை மிகத்தெளிவாகத் தெரியும். தற்போது பொழுது சாய்ந்து இருட்ட ஆரம்பிக்கும் வேளையில் வடக்கு வானில் தோன்றும் முதல் நட்சத்திரங்களாக பெருங்கரடி நட்சத்திரங்கள் உள்ளன. சாய்ந்த நீள் சதுர வடிவில் நான்கு நட்சத்திரங்களும் சாய்வின் கிழக்குப் பகுதியில் வாலாக மூன்று நட்சத்திரங்களும் தெரிகின்றன. இக்கூட்டம் தற்போது மிகப் பாரிய பரப்பில் தெரிகின்றது.

வாலுள்ள நட்சத்திரங்களில் இரண்டாவதாக உள்ள நட்சத்திரம், நம் புராணங்கள் கூறும் 'வசிஸ்டர்' ஆகும். இதனை ஒரு கிரகம் சுற்றுவதாக புவியக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர் அந்தக் கிரகம் 'அருந்ததி' இதுவரை அருந்ததியை யாவரும் ஒரு நட்சத்திரம் என்றே நம்பி வந்தனர். ஒரு நட்சத்திரம் மற்றொரு நட்சத்திரத்தை சுற்றி வருவது இல்லை நட்சத்திரங்கள் என்பவை நமது சூரியனைப் போலவே வெப்பம் உமிழும் சூரியன்கள். சூரியனுக்கு ஒன்பது கிரகங்...

...துடன் இதனைச் சுற்றி வளி மண்டலம் இருப்பதற்கான சாத்தியங்களும் இருப்பதாக வான் விஞ்ஞானிகள் அருந்ததி

இது போலவே அருந்ததியும் வான்னோக்கிகள் மூலமாக நோக்குகையில் வசிஷ்டருக்கும், அருந்ததிக்குமிடையே தூரம் பெரிதாக இல்லாததாக இருந்தது. அத்... மேல் அக்கறை காட்டி வருகின்றார்கள்.

பெருங்கரடிக் கூட்டத்தின் சாய்சதுரத்தின் ஒரு மூலையின் இரண்டு நட்சத்திரங்களை ஒரு கற்பனைக் கோட்டால் நீட்டினால் 'துருவன்' நட்சத்திரம் பிரகாசிக்கும். துருவன் நட்சத்திரம் சிறுகரடிக் கூட்டத்தில் பிரகாசமானதாகும். சிறுகரடியும் பெருங்கரடியின் தோற்றத்தையே கொண்டது ஆனால் மிகச் சிறிய கூட்டம் மேமுதல் யூலை மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்களில் கிழக்கு வானில் இது தோன்றுகின்றது. இது தெரிகின்ற காலத்தில் பெருங்கரடி பிரகாசிக்காது.

### தோன்றும் காலம்

பெருங்கரடிக் கூட்டம் மேமுதல் யூலை மாதம் வரை மிகத்தெளிவாகத் தெரியும். தற்போது பொழுது சாய்ந்து இருட்ட ஆரம்பிக்கும் வேளையில் வடக்கு வானில் தோன்றும் முதல் நட்சத்திரங்களாக பெருங்கரடி நட்சத்திரங்கள் உள்ளன. சாய்ந்த நீள் சதுரவடிவில் நான்கு நட்சத்திரங்களும் சாய்வின் கிழக்குப் பகுதியில் வாலாக மூன்று நட்சத்திரங்களும் தெரிகின்றன. இக்கூட்டம் தற்போது மிகப் பாரிய பரப்பில் தெரிகின்றது.



மேலே பெருங்கரடி. பெருங்கரடியின் சதுரத்தின் முனைகளிலுள்ள பிரகாசமான நட்சத்திரங்களை இணைத்து நேர் கோடாக்கினால் கீழேயுள்ள சிறுகரடியின் வாலின் முனைவிலுள்ள நட்சத்திரமான 'துருவனை' இனங்காணலாம்.

பெருங்கரடி சீனரால் இனங்காணப்பட்ட போது அவர்கள் இக்கூட்டத்தை ஒரு கைச்சட்டி வடிவாக (Saucepan) உணர்ந்தனர். அவர்கள் மொழியில 'ப-தேயு' என இக்கூட்டம் அழைக்கப்பட்டது.

ரஷ்யர்கள் குதிரையாகப் பார்த்தனர். பெருங்கரடிக் கூட்டத்தைப்பற்றி சீன, கிரேக்க, ரஷ்ய இந்துப் புராணங்கள் பலவித கதைகளைப் புனைந்துள்ளன. இப்புராணங்களிலிருந்து பெருங்கரடிக் கூட்டம் தொன்மையான காலத்திலேயே இனங்காணப்பட்டது என அறியலாம்.

பண்டைக்காலத்தில் திசைகளை அறிய கடற்பயணிகளுக்கு வழி காட்ட பெருங்கரடி என்ற நட்சத்திரம் மண்டலம் உதவியதாக சான்றுகள் கிடைத்துள்ளன.

இன்றைய புதுயுக விஞ்ஞானத்தில் முக்கிய ஆய்வுக் கூட்டமாகவும் பெருங்கரடிக் கூட்டம் திகழ்கின்றது.

**ஒரு குறிப்பு:**

**விண்ணியல் பெயர்கள்:**

| | |
|---|---|
| பெருங்கரடி: | Ursamajor (தமிழில் சப்தரிஷிமண்டலம்) |
| சிறுகரடி: | Ursaminor |
| வசிஷ்டர்: | Mizar |
| அருந்ததி; | Alcor |
| துருவன்; | Polestar |

பெருங்கரடிக் கூட்டக்



## அகதி

வாழ்வு ?

அந்த வீடு வண்ண மின்விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது.

''நூறாண்டு காலம் வாழ்க...... '' என்ற பாட்டு திரும்பத்திரும்ப ஒலித்த வண்ணமிருந்தது.

ஏராளமானோர் வாழ்த்து ஆசிகளுடன் அன்பளிப்புப் பொருட்களையும் அளித்துச் சென்றனர்.

அன்று அந்த வீட்டுக்காரரின் பிறந்த தினம்.

வாழ்த்த வந்தவர்களில் அவருக்கு முக்கிய மானவர் ஒருவர் வரவேயில்லை.

வீட்டுக்காரருக்கோ கடுங்கோபம்.

சினத்தோடு சீறினார்.

''அவருக்கும் என்னைத் தேவையான காலம் வரும்.''

அப்போது கவனித்துக்கொள்கிறேன்......''

-என்றவரின் பார்வை மேஜையில் விரித்துக்கிடந்த அன்றைய தினசரியில் பதிய .........அதில்

வராத அந்த மனிதரின் புகைப்படம்........ மேலே

உள்ள வரியில்........

'ஓராண்டு நினைவஞ்சலி....'

..........!

# தோஷங்கள்

குமுதினிப் படகில் குறுமதியோர் நிகழ்த்திய கோரக் கொலைகளை அன்றைய தினசரி பரபரப்பாக விபரித்திருந்தது.

இதயமில்லாதோர்க்கும் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் செந்நீர் செய்திகளாய் அந்த நிகழ்வுகள் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அந்த வீட்டுக்காரர்களை அந்த நிகழ்வும், செய்திகளும் மிகவும் பாதித்ததால் அதிர்ந்து போயிருந்தனர்.

அங்கு வந்த அயலவர் ஒருவர் பத்திரிகையில் ஆழ்ந்தார் திடீரென்று உற்சாகமாகச் சொன்னார்.

''இன்று எனக்கு ஒரு சந்தோஷமான நாள்.

இன்றைய தினப்பலன் படி எனது மீன ராசிக்கு அதிர்ஷ்டமான தினமாம்...........''




தியில் வாலாக மூன்று நட்சத்திரங்களும் தெரிகின்றன. இக்கூட்டம் தற்போது மிகப் பாரிய பரப்பில் தெரிகின்றது.

வாலுள்ள நட்சத்திரங்களில் இரண்டாவதாக உள்ள நட்சத்திரம் நம் புராணங்கள் கூறும் 'வசிஸ்டர்' ஆகும். இதனை ஒரு கிரகம் சுற்றுவதாக புவியக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர் அந்தக் கிரகம் 'அருந்ததி' இதுவரை அருந்ததியை யாவரும் ஒரு நட்சத்திரம் என்றே நம்பி வந்தனர். ஒரு நட்சத்திரம் மற்றொரு நட்சத்திரத்தை சுற்றி வருவது இல்லை நட்சத்திரங்கள் என்பவை நமது சூரியனைப் போலவே வெப்பம் உமிழும் சூரியன்கள். சூரியனுக்கு ஒன்பது கிரகங்கள் இருப்பது போலவே அவைக்கும் கிரகங்கள் இருக்கலாம். கிரகங்கள் அத்தனையையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஈர்ப்பு ஆற்றல் சூரியனிற்கு உண்டு. அதனை இன்னொரு நட்சத்திரம் நெருங்குகிறது என வைத்துக் கொள்வோம். நெருங்கும் நட்சத்திரத்திற்கும் ஒரு ஈர்ப்பு இருக்கும். இந்த இரு ஈர்ப்புகளும்ஒன்றை ஒன்று தள்ளும். அதனால் நட்சத்திரம் சூரியனை நெருங்காது.



மேலே பெருங்கரடி, பெருங்கரடியின்சதுரத்தின் முனைகளிலுள்ள பிரகாசமான நட்சத்திரங்களை இணைத்து நேர் கோடாக்கினால் கீழேயுள்ள சிறுகரடியின் வாலின் முனையிலுள்ள நட்சத்திரமான 'துருவனை' இனங்காணலாம்.

னத்திற்கு முக்கிய ஆய்வுக் கூட்டமாகவும் பெருங்கரடிக் கூட்டம் திகழ்கின்றது.

**ஒரு குறிப்பு:**

**விண்ணியல் பெயர்கள்:**

பெருங்கரடி: Ursamajor<br>
(தமிழில் சப்தரிஷிமண்டலம்)<br>
சிறுகரடி: Ursaminor<br>
வசிஷ்டர்: Mizar<br>
அருந்ததி; Alcor<br>
துருவன்; Polestar

துடன் இதனைச் சுற்றி வளி மண்டலம் இருப்பதற்கான சாத்தியங்களும் இருப்பதாக வான் விஞ்ஞானிகள் அருந்ததி

*பெருங்கரடிக் கூட்டத்தின் சாய்சதுரத்தின் ஒருமூலையின் இரண்டு நட்சத்திரங்களை ஒரு கற்பனை கோட்டால் நீட்டினால் 'துருவன்' நட்சத்திரம் பிரகாசிக்கும்துருவன்நட்சத்திரம் சிறுகரடிக் கூட்டத்தில் பிரகாச மானதாகும்.*

# அகதி வாழ்வு....?

கவிதை

**இருபானிசம்**

*அந்நிய நாடு என்றாலும்<br>
அகதி என்று சொல்லாதே;<br>
அல்லல் படவேண்டி வரும்<br>
அனுபவித்தவன் நான் கூறுகிறேன்*

*நாய்க்கிருக்கும் வசதிகூட<br>
நமக்கங்கு கிடையாது<br>
நாயினிலும் கேவலமாய்<br>
நமை மதிப்பார் அங்கே*

*அகதி என்ற சொல்லிற்கு<br>
அடிமை என்ற பொருள் கொடுத்து<br>
ஆட்டிப் படைத்திடுவார்<br>
அதிகாரத்தில் உள்ளவர்கள்*

*விசா என்றும்<br>
விசாரணை என்றும்<br>
விடிய விடியக் காக்கவைத்து<br>
வீணடிப்பார் உன் நேரந்தனை*

*வேலைக்குப் போவதற்கு<br>
வேக் பேமிற் தேவை என்பர்<br>
வேலைக்கு ஏற்ற<br>
வேதனம் தரமறுப்பார்*

*ஆயிரங்கள் உழைத்தாலும்<br>
அமைதி அங்கு கிடையாது<br>
ஆடம்பரம் ஒன்றையன்றி<br>
அங்கெதுவும் கிடையாது*

*அடித்தடித்துக் கூறுகிறேன்<br>
அகதி வாழ்வு வேண்டாம்<br>
அனுபவிக்க வேண்டுமென்றால்<br>
அகதி என்று சென்று பார்!*



**நா**ன் குருநாகலையிலிருந்து பஸ் மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தேன் அப்போது அனுராதபுரத்தில் புத்தபிக்கு ஒருவர் பஸ்சில் ஏறினார். மத குருமாருக்கு என விளம்பரம் போட்ட இடத்தை அவர் ஒரு விரலால் சுட்டிக்காட்டி அங்கிருந்தவரை எழுப்பினார். அதில் சுகமாக இருந்து பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

அந்த பஸ்வண்டி இன்னோர் இடத்துக்கு வந்தபோது குழந்தையுடன் ஒரு பெண்மணி ஏறினார். முதலில் தனது சீட்டை விட்டு எழும்பி இடம் கொடுத்து உதவியவர் வாலிபர் அல்ல; ஒரு பெண்மணியே!

தந்தையான தாதுசேனன் நாலு சுவருக்குள் சட்டி அவனின் மரணத்துக்குக் காரணமானவன் மகன் காசியப்பன் தந்தையை மகன் கொன்ற வரலாற்றுப் பின்னணி கொண்டு ஓர் இனம் 'சீட்' கொடுக்கும் விடயத்தில் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைவளர்த்துள்ளது என்பதைக் காண ஆச்சரியமாக இருந்தது.

நாமும் ஓர் ஆண்ட இனம், ஆளத்துடிக்கும் இனம்! புறாவினைக்காப்பாற்ற தசையைக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் சந்ததியினர், பசுக் கன்றினை மகன் கொன்றதற்காக மகனையேதேர்ச்சில்லில் அரைத்த மன்னனின் சந்ததியினர் என்று பெருமைப்படுகின்றோம். ஆனால் எம்மிடம் இந்தச் சந்ததிப் புத்தி எந்த அளவில் இன்று இருக்கின்றது? இதுவே இன்று தமிழனில் ஆராய்ப்பட வேண்டிய மிக முக்கிய பிரச்சினை.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு டஸ் வண்டி வந்து கொண்டிருந்தது, ஏகப்பட்டசனக்கூட்டம். அக் கூட்டத்தில் தனது சுகவீனமான குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஒரு பெண் பணி ஏறினாள். இந்தப் பரிதாபகரமான நிலையைப் பார்த்துக் கூட எவரும்இடம் கொடுக்கவில்லை. தமது'சீட்' பறிபோய் விடும் என்பதற்காக முன்னுக்குப் போ முன்னுக்குப் போ என்று அறிவுரை வழங்கினர். மடத்திலை கோவணத்தோடு 'படுத்திருந்தவனை இழுத்துப் போர் இழுத்துப்போர் என அறிவுரை கூறுவது போன்றிருந்ததுஇந்த அறிவுரைகள்.

இந்நிலையில்கண்டக்டரைப் பார்த்துக் குழந்தை அழுதது. இந்த அழுகை திருஞானசம் பந்தநாயனார் குளத்தில் முழுகிய தனது தந்தையைக் காணாது அழுதது போல் இருந்தது. பாவம் அந்த நிலையில் கூட எந்தக் கண்ணியவானும் இடம் கொடுக்கவில்லை. நான் எழும்பி இடம் கொடுக்கலாம் என நினைத்தேன். ஆனால் நானோ கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தேன், இந்நிலையில் அந்தத் தாய்க்குச் சீட் பிடிப்பதற்குஓர் உபாயம் சொல்லிக் கொடுத்தேன்.

'எனக்குச் சத்தி எடுக்க வருகின்றது;சற்றுசீற் 'தாருங்கள்' எனச் சொல்லுமாறு கோரினேன். இந்தத் தந்திரம் வென்றது. பெண்மணிக்குச் 'சீற்' கிடைத்தது யாழ்தேவியில் கோணர் சீற், பஸ்ஸில் முன்சீற், காரில் சோடசெற், தையல்மிசினில் சிங்கர், கல்யாணம் என்றால் டொனேஷன்' இதுதான் இந்தச் சாதியின் லட்சணமோ? இளைஞர்கள் தனிநாட்டுக்கும் போராடும் பெரும் இலட்சியத்தைக் கொண்டுள்ளார்கள். இரத்தம் சிந்துகின்றார்கள், நாமோ ஒரு சீட்' பிடிக்கும் போராட்டத்தில் முக்கியமான கதாநாயகர்களாகத் திகழ்கின்றோம்.

ஒரு ஆசிரியர் பஸ்ஸில் தொங்கிக் கொண்டிருந்தார், அப்பால் அவர் படிப்பித்த மாணவன் 'சீட்'டில் நித்திரை தூங்கிக் கொண்டிருந்தான். அவன் காதுக்குள் ரகசியமாக என்ன திடீர் நித்திரை என்று கேட்டேன். அவன் சொன்னான்; 'சத்தம் போடாதீர்; எனக்குப் படிப்பித்த வாத்தி கம்பியிலைதொங்குகின்றார்.' என ஈனசுரத்தில் சொன்னான். எமது சுயநலங்கள் எங்குஎங்கு எல்லாம் மறைந்து இருக்கின்றது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம். பெரியவர்களை மதிக்காத இந்தச் சமுதாயத்திற்கா அன்னை பூபதியும், தியாகி திலீபனும் கப்டன் மில்லரும் பெரும் தியாகம் செய்தார்கள் என வெட்கமடையத் தோன்றுகிறது.

பஸ் ஏறும்போது வயோதிப மூதாட்டிகளையும், பெண்களையும் முந்தி வாலிபர்கள் ஏறிவிடுகின்றார்கள். கம்பியில் தொங்குவதுகிழவர்களும், கிழவிகளுமே. இவர்கள் எம்மைப் படைத்த மூதாதையர்கள் என்ற உணர்வு எமது வாலிபர்கட்கு வர வேண்டும்.

தமிழ் நாட்டில் பெண்களுக்கு பஸ்சின் ஒரு பக்கத்தில் அரைவாசிச் 'சீற்'றுக்கள் உண்டு. அதில் தப்பித் தவறி எந்த வாலிபனாவது உட்காருவானா? உட்கார்ந்தால் பொதுமக்களே அவனை விரட்டிவிடுவார்கள். ஆனால் நாமோ பாரதியின் கவிதைகளைச் சொல்லிப் பெண்களை ஏமாற்றி வருகின்றோம்,

புத்தபிக்குவுக்குச் சமமானவரே எமது இந்துமத குருமார். அவர்கள் காவியுடையில் வந்தாலும் அவர்கட்கு உரிய சீற்றினை நாம் கொடுப்பதில்லை.

எமது பலம் அல்ல பலவீனமே இந்தச் செயல்களில் தங்கியுள்ளது.

ஒழுக்கங்கள் மரபுகளாக வெளி வரும்வரை தமிழீழத்துக்கு உயர்வில்லை.

# தலைவர் பிரபாகரன் ஆக்க இலக்கிய கலைஞர்களோடு ஆக்க பூர்வமான ஓர் சந்திப்பு

இருவாரங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலுள்ள நாடக கலைஞர்கள், கவிஞர்கள் எழுத்தாளர்களை தலைவர் பிரபாகரன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

புதுவைஇரத்தினதுரை அவர்கள் எல்லோரையும் அறிமுகம் செய்துவைக்க, போராட்ட சூழலில் உணர்வோடு செயற்பட்ட கலைஞர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் தலைவர் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டார்

'படைக்கப்படும் கலை, இலக்கிய வடிவங்கள் மக்கள் மனதில் விடுதலையுணர்வை வளர்க்கக் கூடியனவாக இருக்க வேண்டும். என்று உரையாடலை ஆரம்பித்த தலைவர் பிரபாகரன், மனம் திறந்து பேசினார். எவ்வித தடங்கலுமின்றி அவர் பேசிய பல விடயங்களை செவிமடுத்த பல படைப்பாளிகள் மூக்கில் விரல் வைத்த வண்ணம் வியப்போடு காணப்பட்டனர்.

ஒரு போராட்ட வீரன்- கட்டுப்பாடான ஒரு விடுதலை இயக்கத்தலைவன் - துணிச்சல் மிக்க ஓர் விடுதலை இராணுவத்தின் தளபதி....என்ற விதத்தில் அவரை கற்பனை செய்தபடி சந்திக்கச் சென்றபோது ஓர்பயம் கலந்த மரியாதை அவரிடம் எல்லோருக்கும் ஏற்பட்டது.

ஒரு சிறந்த வாசகனாக - இலக்கியவாதியாக - விமர்சகனாக ஆய்வாளனாக எல்லாம் அவரைச் சந்திப்போம் என்று நான் உட்பட பலரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்கவில்லை.

மகாபாரதத்தைப் பற்றி உரையாடல் வந்தது. மகாபாரதத்தில் வரும் சிலபாத்திரங்களை பிரபாகரன் விமர்சனம் செய்தார். கர்ணனே தனக்கு மிகவும் பிடித்த பாத்திரம் என்று குறிப்பிட்ட அவர் மிகவும்கௌரவமிக்க பாத்திரமான பீஷ்மர் தனது தந்தைக்காக தன்னையே தியாகம் செய்ததை தன்னால்ஜீரணிக்க முடியவில்லை என்றார்.

ரஷ்யப் புரட்சி பற்றி குறிப்பிடுகையில் ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தினார்.

''....அப்போது யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. உணவுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியது. யுத்தம் செய்து கொண்டிருக்கும் வீரர்களுக்கும் ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கும் மட்டுமே இருக்கின்ற சொற்ப உணவை கொடுக்க உத்தரவிடப்பட்டிருந்தது. பலபெண்கள், தாய்மார்கள் கூட ஆயுதத்தொழிற்சாலையில்வேலை செய்தனர். தாய்மார்களுக்குக் கொடுக்கப்படும் உணவை அவர்கள் தமது குழந்தைகளுக்குக் கொண்டு போய் கொடுத்து விடுவார்கள் என சந்தேகப்பட்டு அவர்களை கண்காணிப்பாளர்கள் சாப்பிடும் போது கவனித்துக் கொள்வார்கள். அப்போது ஒரு தாய் தனக்குக் கொடுக்கப்பட்ட அன்றைய உணவான உருளைக் கிழங்கு கூழை குடிப்பது போல் பாவனை செய்து கொண்டு, வாயில் அப்படியே வைத்திருந்து தனது குழந்தைக்கு கொண்டு சென்று ஊட்டினாராம். ஒரு பறவை தனது குஞ்சுக்குஇரையூட்டுவதைப் போல, இலக்கியத்தினூடாக இப்படியான சம்பவங்களைப் படிக்கும் போது மனம் சிலிர்த்து விடுகிறது என்று கூறும்போது தலைவர் பிரபாகரன்உணர்ச்சி வசப்பட்டார்.



தலைவர் பிரபாகரன் அவர்கள் எழுத்தாளர்களை சந்தித்து உரையாடும்போது எடுக்கப்பட்ட படம். அருகில் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயாவும் காணப்படுகின்றார்.

'...ரஷ்யாவில் அன்றைய போராட்டம் முடிவடைந்து விட்டாலும், அந்தப் போராட்ட உணர்வு இலக்கியங்களூடாக இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும்போராட்ட காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு அங்குள்ள மக்களுக்கு ஏற்படும் விதமாக இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

எமது போராட்ட சூழ்நிலையிலும் பல உணர்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. பல தியாகங்கள் நடைபெற்றுள்ளன.

அவற்றையெல்லாம் இலக்கியத்தினூடாக மக்களுக்கு புகட்டவேண்டும்.

...யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் மட்டும் போராட்டத்தைப் பற்றிசிந்திக்கும் மக்கள்இப்படியான இடைவேளைகளின் போது, போராட்டம் முடிந்து விட்டது நிரந்தர அமைதி ஏற்பட்டு விட்டது என்ற மாயையானஉணர்வோடு காணப்படுகிறார்கள். கலை, இலக்கிய வடிவங்களூடாக மக்கள் மனதில் தொடர்ச்சியான விடுதலையுணர்வை வளர்க்க முடியும். அதை கலை, இலக்கிய கர்த்தாக்களான உங்களால் மட்டுமே செய்ய முடியும்.

....எழுத்து மூலமாக ஓரளவு படித்தவர்கள் மத்தியில் உணர்வுகளை வளர்க்கலாம் அதேநேரம், படிப்பறிவு குறைந்த கிராமத்து மக்கள் மத்தியில் நாட்டுக்கூத்து, நாடகங்கள் போன்ற அவர்களுக்குரிய கலைவடிவங்களூடாக இதை வளர்க்க முடியும்.

...ஒரு பின்தங்கிய கிராமத்திலுள்ள நபர் ஒருவர் ஒரு விழாவின் போது மேலைத்தேச நடனமான 'பிரேக் டான்ஸ்' ஆடிக்காட்டினார். அப்போது நான் அவரிடம் கேட்டேன். இந்த நடனம் உங்களுக்கு எப்படித் தெரியுமென்று. தொலைக்காட்சிப் பெட்டி மூலம் பார்த்துப் பழகினேன் என்று அவர் சொன்

**விவேக்**

னார். ஒரு தொலைக்காட்சிப்பெட்டி ஒரு பின் தங்கிய கிராமத்துக்குள் சென்று மேலைத்தேச நடனமொன்றைப்பழக்க முடியுமென்றால், இப்படியான தொடர்பு சாதனங்கள் மூலம் நல்ல விடயங்களை ஏன் பரப்ப முடியாது....?

சபையிலிருந்த ஒருவர் குழந்தை இலக்கியம் பற்றி சொன்னார். வளர்ந்தவர்களுக்கு இலக்கியம் படைப்பதைப்போன்று, குழந்தைகளுக்கும் ஆரம்பத்திலிருந்தே நல்ல இலக்கியங்களைப்புகுத்துவதன் மூலம் அவர்கள் நற்பிரஜைகளாக்க முடியும் என்றார்.

அதை ஏற்றுக்கொண்ட தலைவர் தமது கருத்துக்களையும் குறிப்பிட்டார்.

''குழந்தைகளுக்கு நம்பமுடியாத பொய்யான கதைகளை பாடப் புத்தகங்களில் சொல்லப்படுவதைக் கூடியவரை தவிர்க்கவேண்டும். ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு உண்மையை புகட்ட வேண்டும். உதாரணத்திற்குஅரக்கன் ஒருவன்ன் கதையைச் சொல்லும் போது, அரக்கனுச்கு நான்கைந்து தலைகளும் நீண்ட பற்களும் இருக்குமென்று கதை கூறப்படுகிறது. எனது குழந்தையே என்னிடம் கேட்கிறது ''அரக்கன் என்டால் என்னப்பா?'' என்று அதற்கு சரியான பதிலைக்கூறி விளங்கவைப்பதே கடினமாகவுள்ளது.

'அரக்கக்குணம் என்றால் கெட்ட குணம். எனவே, அரக்கன் என்றால் கெட்டவன் என்பது கருத்து, என்று நான் எனது குழந்தைக்கு விளக்குவது உண்டு.

.... எனவே இவ்வாறான பொய்யான கதைகளை குழந்தைகள் மத்தியில் சொல்வதை தவிர்க்க வேண்டும் என்பதே என் கருத்து.''

தென்னிந்திய சஞ்சிகைகள் மூலமாக சில உக்கிரமான கருத்துக்கள் இளைஞர் மத்தியில் பரப்பப்படுவதைப் பற்றியும் வேறு பல விடயங்கள் பற்றியும் தலைவர்பிரபாகரன் கலந்துரையாடினார்.

மனம்விட்டு கலகலப்பாக உரையாடிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.



முதுபெரும் தமிழ் அறிஞரும் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபருமான திரு. கணபதிப்பிள்ளை மாஷ்ரருடன் தலைவர் பிரபாகரன் அந்நியோன்யமாக உரையாடும் காட்சி.

மாலை முடிந்து அந்திப் பொழுதாக பிரபாகரன் அவர்கள் எம்மிடம் விடை பெற்றுக்கொண்டார்.

என் அருகில் அமர்ந்திருந்த ஒரு கலைஞரிடம் மெல்ல பேச்சுக் கொடுத்தேன்.

''என்ன ஐயா யோசித்துக் கொண்டு வாறியல்.''

அவர் என்னைத்திரும்பிப் பார்த்து மிகவும் தெளிவாக, நிதானமாகச் சொன்னார்.

அவர் சொன்ன வார்த்தைகள்

''தலைவன் தலைவன்தான் சந்தேகமே இல்லை.'' □

---

# கெவிலியாமடு தமிழ்க் கிராமத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட எல்லை கிராமமான கெவிலியாமடு கிராமம் தமிழ் கிராமம் ஆகும். பட்டிருப்பு தொகுதியிலுள்ள இக்கிராமத்தில் 25 வருடங்களாக வாழ்ந்த தமிழர்விரட்டியடிக்கப்பட்டு தொடர்ந்து 5 வருடங்களாக மாவடி முன்மாரி கிராமத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

1965ஆம் ஆண்டு காலஞ்சென்ற ...

இச்சம்பவங்களின் எதிரொலியாகவே சகல தமிழ் குடும்பங்களும் வெளியேறிவிட்டனர் இன்று அக்கிராமத்தில் ஒரு தமிழர் கூட இல்லை.

1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இனவாத அரசின் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலியின் பணிப்புரையின் பிரகாரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் ஸ்ரீலங்கா இராணுவமுகாம் அமைக்கப்பட்டது.

களுக்கு வழங்கப்பட்டது' காணி உரிமையாளர்கள் 1985 பின்பு ...

மாவட்டம் என இனவாத அரசு இன்று வரை ...

பட்டது.

களுக்குள் புகுந்து உடமைகளை சேதமாக்கினர். எங்களை அடித்து விரட்டினர். உடுத்த உடையுடன் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் காடுகள் வழியாக தப்பி வந்தோம். 5 இளைஞர்களை அழைத்து சென்றனர் இதுவரை தகவல் இல்லை.

1988 மாசி மாதம் சிங்களவர்கள் ... திருமணம் செய்து ...

வருகை தந்தார். ஆனால் தேசிய விடுதலைப் போராட்டம் காரணமாக அவரது திட்டம் நிறைவுபெறவில்லை.

ஸ்ரீலங்கா அரசு நீண்டகாலமாக இப்பகுதியை ஆக்கிரமிப்புசெய்ய வேண்டும். என்ற ஆர்வத்துடன் செய்யப்பட்டுள்ளது என்றார்.

இடம்பெயர்ந்துள்ள கெவி...

பட்டது.

ஒரு சிறந்த வாசகனாக - இலக்கியவாதியாக - விமர்சகனாக ஆய்வாளனாக

போய் கொடுத்து விடுவார்கள் என சந்தேகப்பட்டு அவர்களை கண்காணிப்பாளர்கள் சாப்பிடும் போது கவனித்துக் கொள்வார்கள். அப்போது ஒரு தாய் தனக்குக்

'...ரஷ்யாவில் அன்றைய போராட்டம் முடிவடைந்து விட்டாலும், அந்தப் போராட்ட உணர்வு இலக்கியங்களூடாக இன்னமும்

அவற்றையெல்லாம் இலக்கியத்தினூடாக மக்களுக்கு புகட்டவேண்டும்.

...யுத்தம் நடைபெற்றுக்

நல்ல இலக்கியங்களைப்புகுத்துவதன் மூலம் அவர்கள் நற்பிரஜைகளாக்க முடியும் என்றார்.

அதை ஏற்றுக்கொண்ட தலைவர் தமது கருத்துக்க

எனது குழந்தைக்கு விளக்குவது உண்டு.

....எனவே இவ்வாறான பொய்யான கதைகளை குழந்தைகள் மத்தியில் சொல்வதை தவிர்க்க வேண்டும் என்பதே

பார்த்து மிகவும் தெளிவாக, நிதானமாகச் சொன்னார்.

அவர் சொன்ன வார்த்தைகள்

''தலைவன் தலைவன் தான் சந்தேகமே இல்லை.'' □

# கெவிலியாமடு தமிழ்க் கிராமத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்




மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட எல்லை கிராமமான கெவிலியாமடு கிராமம் தமிழ் கிராமம் ஆகும். பட்டிருப்பு தொகுதியிலுள்ள இக்கிராமத்தில் 25 வருடங்களாக வாழ்ந்த தமிழர்விரட்டியடிக்கப்பட்டு தொடர்ந்து 5 வருடங்களாக மாவடி முன்மாரி கிராமத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

1965ஆம் ஆண்டு காலஞ்சென்ற பட்டிருப்பு பா. உ. அமரர் சி. மூ. இராசமாணிக்கம் எல்லை பாதுகாப்பு கருதி தேற்றாதீவு, பண்டுர், களுதாவளை ஆகிய கிராமத்திலுள்ளவர்களை குடியேற்றி உருவாக்கிய கிராமம் தான் கெவிலியாமடு.

மகாஓயா– அம்பாறை வீதியில் 17 1/2- 23 ஆம் மைல் கல் வரையிலான இக் கிராமத்தில் 225 தமிழ் குடும்பங்கள் வசித்துவந்தன. 4160 ஏச்கர் விஸ்தீரணம் கொண்டபகுதியில்இக் கிராம வாசிகள் வேளாண் மை செய்கை மூலம் தமது சீவியம் நடாத்திவந்தார்கள்.

எல்லைக்கிராமம் என்பதால் ஒரு சிலர் சிங்களவர்களையும் திருமணம் செய்துள்ளார்கள் 1965 ஆம் ஆண்டு முதல் இக்கிராமத்தில் இன வாதம் இருக்கவில்லை. இரு தரப்பும் புரிந்துணர்வுடன் வாழ்ந்தார்கள்.

1983ஆம்ஆண்டுஜூலைதமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் எழுச்சி காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட இனக்கலவரத்தில் இக் கிராம மக்கள் தாக்கப்பட்டார்கள். உடைமைகள் அழிக்கப்பட்டன.

1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் இக் கிராமத்தை சுற்றி வளைத்து தேடுதல் செய்து விசாரணைக்காக ஐந்து இளைஞர்களை அழைத்து சென்றது. கிராம வாசிகளை விரட்டியடித்தது உடமைகளை அழித்தது. அழைத்துச் செல்லப்பட்ட ஐவர் தொடர்பாக இதுவரை தகவல் இல்லை.

1987 ஆம் ஆண்டு மாசி மாத நடுப் பகுதியில் அக்கிராமத்தில் சிங்களவர்களை கலப்புத் திருமணம் செய்து வாழ்ந்த இரு குடும்பத்தில் ஏழு தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். உயிரிழந்த அன்னையிடம் பச்சிளம் குழந்தை பால்குடித்த செய்திக்குரிய சம்பவம் இதுதான்.

இச்சம்பவங்களின் எதிரொலியாகவே சகல தமிழ் குடும்பங்களும் வெளியேறிவிட்டனர் இன்று அக்கிராமத்தில் ஒரு தமிழர் கூட இல்லை.

1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இனவாத அரசின் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலியின் பணிப்புரையின் பிரகாரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் ஸ்ரீலங்கா இராணுவமுகாம் அமைக்கப்பட்டது.

முகாம் பாதுகாப்புடன் சுற்றாடலில் மட்டக்களப்பு அரச அதிபருக்கோ அல்லது தே. வீ. அ. அ.சபை மாவட்ட முகாமையாளருக்கோ தெரியாமல் 55 வீடுகள் கொண்ட மாதிரி கிராமம் அம்பாறை அரச அதிபரின் நேரடி மேற்பார்வையில் அம்பாறை தே. வீ அ அ. சபையினால் நிர்மாணிக்கப்பட்டது. இ ல் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஊர்காவல் படையினர் குடியேற்றப்பட்டுள்ளனர்.

*மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் ஸ்ரீ லங்கா அரசு கெவிலியாமடு கிராமத்தில் திட்டமிட்ட குடியேற்றம் மேற்கொள்ள முயன்று வருகிறது· அக்கிராமம் தொடர்பான தகவல்கள்தான் இக்கட்டுரை·*

இலங்கை- இந்திய ஒப்பந்தம் அமுலுக்கு வந்த கால கட்டத்தில் இக்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய படை அதிகாரிகள் சகிதம் சென்றனர். இதனை தடுத்து நிறுத்துமாறு கோரினர். ஆனால் அவர்கள் இதனை பெரிதாக நினைக்கவில்லை.

இவ்விடயம் குறித்து 16 செப் யூ1987 ஆம் ஆண்டு மேலதிக அரச அதிபராகரிவிருந்த திரு. பூ. சங்காரவேல் காணி ஆணையாளருக்கு LD/C/FF/S இலக்கமிடப்பட்டு கடிதமொன்று எழுதினார். அதிலுள்ள சில விபரம் வருமாறு

கெவிலியாமடு மட்டக்களப்பு மாவட்டத்திற்குரியது. வெளியாரை குடியமர்த்துவதற்காக நிரந்தரவீடுகள் அமைக்கப்படுகின்றன இதில் ஊர்காவல் படையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் குடியமர்த்தப் படவுள்ளார்கள் ஏற்கனவே இக் காணி மட்டக்களப்பு மாவட்டத்தவர்களுக்கு வழங்கப்பட்டது' காணி உரிமையாளர்கள் 1985 பின்பு வன் செயல்கள் காரணமாக பாதுகாப்பு கருதி இடம் பெயர்ந்துள்ளார்கள். என அவரது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கடிதத்திற்கு காணி ஆணையாளர் திரு. ஏ. ஏ. விஜேயதுங்கா வினால் 25செப் 1987 திகதியுடைய 3/3/22/197 ஆம் இலக்க கடிதத்திலுள்ள பதில் வருமாறு

அம்பாறை- மகாஓயா வீதி பாதுகாப்பு கருதி அரசு எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் இக்குடியேற்றத்தை ஏற்படுத்துமாறு அம்பாறை அரச அதிபரை பணித்தேன்.

இல - இந்திய ஒப்பந்தம் அமுலுக்கு வரமுன்பு இப்பணிப்புரை விடுக்கப்பட்டது. 37 பேருக்கு காணியுடன் நிரந்தர வீடு கட்ட அனுமதி வழங்கினேன் இவர்களை வேறுஇடங்களுக்கு அனுப்ப முடியாத நிலை.

அதே நேரம் மேலும் குடியேற்றங்கள் எதுவும் செய்ய வேண்டாம் என அம்பாறை அரச அதிபரை பணித்துள்ளேன். இது பாதுகாப்பு கருதி செய்யப்பட்டது. என அவரது கடிதம் அமைகிறது.

இலங்கையில் மாவட்ட எல்லைகளை குறிப்பிடும் வரை படத்தில் கெவிலியாமடு கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்திற்குரியது, பட்டிருப்பு தேர்தல் தொகுதி இதற்கான கி. சே. அலுவலர் பிரிவு கச்சேரிக் கொடி ஆறு.

மகாஓயா - அம்பாறை வீதி தான் எல்லை. அப்பக்கம் தான் மட்டக்களப்பு மாவட்டம். இப்பக்கம் அம்பாறை மாவட்டம் என இனவாத அரசு இன்று வரை படத்தையே பொய் என்கின்ற நிலையிலுள்ளது.

வீதியிலிருந்து இப்பக்கம் 2 மைல் வரையிலுள்ள தூரத்திலுள்ள மலையொன்று தான் எல்லையாகும். 2 மைல் தூரத்திற்குள்தான் இக்கெவிலியாமடு அமைந்துள்ளது.

கெவிலியாமடுவிலுள்ள தமிழ் குடும்பங்களை மீளக் குடியமர்த்தல் குறித்து நேரடியாக ஆராய்வதற்காக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதி தலைவர் எஸ். கரிகாலன் வரைபடம் சகிதம் சம்பந்தப்பட்ட சகல திணைக்கள அதிகாரிகளுடன் செய்தியாளர்களையும் அழைத்து சென்றார்.

மாவடிமுன்மாதிரி கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் தங்கியுள்ள இக்கிராம வாசிகளை முதலில் சந்தித்து மீளக்குடியேற்றம், புனர்வாழ்வு குறித்து ஆராயப்பட்டது.

□ 1985-ஆம்ஆண்டு முதல் மாவடி முன்மாரி கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் அகதிகளாக தங்கியுள்ள இவர்களுக்கு கடந்த பல மாதங்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை. (தற்போதுவழங்கப்படுகிறது.)

□ அகதி முகாமில் இட நெருக்கடி மலசலகூட, சுகாதார வசதிகள், வைத்திய வசதிகள் இன்று பல்வேறு கிரமங்களுடன் வாழ்ந்து கொண்டனர்.

கெவிலியாமடுஅகதிகள்புனர் வாழ்வு கழகம் அமைத்து தமது கோரிக்கைகளை அதிகாரிகளுக்குவிளக்கியுள்ளனர். அக்கழக செயலாளர் திரு. எம், சந்திரலிங்கம் (30வயது) ஈழநாதத்திற்கு தகவல் தெரிவிக்கையில்

5·10·1985ஆம் ஆண்டு நள்ளிரவு நேரம் சீருடையினர் சுற்றி வளைத்து எங்கள் வீடுகளுக்குள் புகுந்து உடமைகளை சேதமாக்கினர். எங்களை அடித்து விரட்டினர். உடுத்த உடையுடன் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் காடுகள் வழியாக தப்பி வந்தோம். 5 இளைஞர்களை அழைத்து சென்றனர் இதுவரை தகவல் இல்லை.

1988 மாசி மாதம் சிங்களவர்களை திருமணம் செய்து வாழ்ந்த ஆண்-பெண் உட்பட 7 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

எங்கள் தாயக பூமியை விட்டுக்கொடுக்க நாம் தயார் இல்லை.அரச தனியார் நிவாரணம் பெறுவதற்காகமுகாம் அமைக்கவில்லை, எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு மீளக் குடியேற்றப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு என்றார்.

இப்பிரதேசத்தில் பிரபல சமூக சேவையாளரான கே. இன்பராசா சில தகவல்கள் தெரிவிக்கையில்,

1982ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் காணிகளை விழுங்கிக்கொண்ட தீகவாவி திட்டம் இப்பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் விஸ்தரிக்கப்படவிருந்தது.

1500 ஏக்கர் காணி சுவீகரிக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. 8 அடி புத்தர் சிலையுடன் பௌத்த பிக்கு ஒருவர் வருகை தந்தார். ஆனால் தேசிய விடுதலைப் போராட்டம் காரணமாக அவரது திட்டம் நிறைவுபெறவில்லை.

ஸ்ரீலங்கா அரசு நீண்டகாலமாக இப்பகுதியை ஆக்கிரமிப்புசெய்ய வேண்டும். என்ற ஆர்வத்துடன் செய்யப்பட்டுள்ளது என்றார்.

இடம்பெயர்ந்துள்ள கெவிலியாபடு மக்கள் தமது தாயக பூமியை விட்டு வெளியேற தயார் இல்லை என்ற உறுதியுடன் காணப்படுகிறார்கள்:

□ எம்மக்களுக்கு தகுந்த பாதுகாப்புவழங்கப்படல் வேண்டும்.

□ ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் வாபஸ் பெறப்படல் வேண்டும்.

□ பொலிஸ் காவல் நிலையம் மூடப்பட வேண்டும்.

□ ஊர்காவல் படையினர் கலைக்கப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப் படல் வேண்டும் என்ற கோரிக்கைகளை இன்று முன் வைத்துள்ளார்கள்.

மேலும் இக்கிராம வாசிகள் தமது பொதுவான தேவைகள் குறித்தும் கோரிக்கை விடுத்தனர்.

கெவிலியாமடு கிராமத்தை பொறுத்தவரை இன்று யார் செல்வதென்றாலும் ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் அனுமதி பெற்றுத்தான் செல்லவேண்டும்.

**தமிழினியவன்**

இராணுவ முகாம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கட்டிடத்திலுள்ளது. முகாம் மேலும் விஸ்தரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன எதிரேயுள்ள வன இலாகா கட்டிடமொன்றில் பொலிஸ் நிலையம் உள்ளது. அன்று கெவிலியாமடு எனக்காணப்பட்ட பொலிஸ்நிலையபெயர் இன்று புளுவனாவ என காணப்படுகிறது.

பொலிஸ் நிலைய சுற்றாடலில் 55 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீடமைப்பு மாதிரிகிராமம் ஆகும்.வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊர்காவல் படையினர் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ் பாடசாலையில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் உள்ளது. அதே நேரத்தில் சிங்கள பாடசாலையொன்று துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் கிராம வாசிகளின் இருப்பிடங்கள் அமைந்திருந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

தாதிகளின் விடுதியில் நேற்றிரவும் பெரும் 'சர்ச்சை' நடந்தது. இந்தப் பிரச்சினை முன்பும் அடிக்கடி எழுந்ததுண்டு.

பாதுகாப்பு.... இல்லாமல்.... எப்படி.... சேவை... செய்வது....?'

'பயந்துகொண்டு.... நாங்களே... கடமைக்குப் போக... மறுத்தால்.... குற்றுயிராக... வரும்... நோயாளிகளை... யார்... காப்பாற்றுவது...?'

'எமது... உயிரே... ஊசலாடும்போது... மற்றவர்களின்... உயிர்களை... எப்படி... காப்பாற்றுவ்து...?'

'எம்மை.... நம்பி வருபவர்களை... சாகவிட்டுவிட்டு... பின்பு... யாருக்கு... இந்த சேவை...?'

—இப்படி அடிக்கடி தர்க்கங்கள் நடக்கும் இறுதியில் வடிவுக்கரசி போல் எல்லோரும் கடமைக்குச் செல்வார்கள்.

இந்த பத்து நாட்களாக 'அமைதிப்படை' என்று கூறிக் கொண்டு உள்ளே புகுந்த அந்நிய இராணுவத்தின் அராஜகம் ஆஸ்பத்திரியையும் நோக்கி நெருங்கிக்கொண்டு வந்தது. ஆங்காங்கே ஷெல்களையும் குண்டுகளையும் பொழிந்தவர்கள் ஆஸ்பத்திரியையும் விட்டுவைக்கவில்லை. அதிகாலை ஆறு மணிக்கே அடித்த 'ஷெல்' ஒன்று மெயின்வீதியின் ஒரமாக இருந்த தாதிகள் விடுதியின் கூரையை தரையிறக்கியது. மாணவ தாதிகள் கீழ்மாடியில் இருந்ததால் நல்லவேளையாக உயிர்தப்பினார்கள்.

இந்த பத்துநாட்களாக இந்திய இராணுவத்தின் அட்டகாசத்தால் கைகளை இழந்தவர்களும் கால்களை இழந்தவர்களும் ஏராளம். குழந்தைகள், வயோதிபர்கள், தாய்மார்கள் என்று சைக்கிள்களிலும் நடந்தும், மாட்டு வண்டிகளிலும்வந்தவர்களால் ஆஸ்பத்திரி நிறைந்து வழிந்தது. நோயாளர்களின் உறவினர்கள் பலர்கூட பயத்தினால் வார்டுகளில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

வடிவுக்கரசியும் ஏனைய

'ஷெல்லுடன்' ஆஸ்பத்திரி கொஞ்சம் சலசலத்தது. பீதி கொண்ட உறவினர்களும் நோயாளிகளும் ஆஸ்பத்திரிக் கட்டடத்திற்குள்ளேயே பாதுகாப்பான இடங்கள் தேடி அங்கும் இங்கும் ஓடினர்.

மனஉறுதியுடன் மற்றவர்களுக்கும் தைரியமூட்டி பதட்டத்தைத் தவிர்த்தாள் வடிவுக்கரசி.

ஆனாலும் வடிவுக்கரசியின் நம்பிக்கையும் குலைவது போல், எட்டரை மணிபோல் இன்னுமொரு 'ஷெல்' எட்டாம் வாட்டுக்குள் வீழ்ந்தது, கூரை இடிந்து விழுந்ததில் மூன்று நோயாளிகள் கொல்லப்பட்டனர். உயிர் காக்கப்படுமென்று அரைகுறை உயிருடன் எங்கே நம்பி வந்தார்களோ அங்கேயே அவர்கள் உயிர்கள் பறிக்கப்பட்டது. நாற்பதற்கும் மேற்பட்ட நோயாளிகள் படுகாயமடைந்தனர்.

வடிவுக்கரசி கடமைபுரிகிற இந்த 'ஒன்பதாம் வாட்டுத் தான்' இந்த ஆஸ்பத்திரிக்குள்ளேயே பழையகட்டிடமுரா சீமெந்துக் கூரையில்லாத வெறும் ஓடுகளால் மாத்திரம் வேயப்பட்ட கூரையாகும்.

இனியும் வடிவுக்கரசியின் உறுதியையும் நம்பிக்கையையும் நோயாளிகள் செவிமடுக்கத்




1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தால் யாழ். பெரியாஸ்பத்திரியில் படுகொலை செய்யப்பட்ட 69 பேர்களில் இருவரான தாதிகள் அரசி, லலிதா ஆகியோரின் நினைவாக இக்கதை எழுதப்பட்டுள்ளது.

இதைக் குறிப்பிட்டு லண்டனிலிருந்து வைத்தியக் கலாநிதி **S.P.R.** சீர்மாறன் எழுதி அனுப்பிய சிறுகதை இது.

தயார இல்லை. பீதிகொண்டு உயிர்ப்பாதுகாப்புத் தேடி 'சேலைன் டியூப்புக்களையும், குருதிக் குழாய்களையும் பிடுங்கி எறிந்து விட்டு ஊன்றுகோல்களுடனும், சக்கர வண்டிகளிலும் நோயாளிகள்அவஸ்தைப்படுவதைப் பார்க்க இவ

பான வார்ட்டுகளுக்குப்போக உதவி செய்தாள்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூர்க்கத்தனம் வர வர அதிகமாகியது. சிறிது நேரத்திற்குள் இன்னுமொரு 'ஷெல்' சத்திரசிகிச்சை நிலையத்தையே பதம்பார்த்தது.

தன்னுடைய வார்ட்டிலிருந்தவர்களுக்கும், எட்டாம் வாட்டிலிருந்தவர்களுக்கும் உதவி செய்து அவர்களை 'பாதுகாப்பான' வார்ட்டுகளுக்கு மாற்றவே, மூன்றரை மணியாகிவிட்டது. களைப்புமின்றி, மனச்சோர்வுமின்றி தண்ணீர் கூடக் குடிக்காமல், ஒரு 'தாதிக்கும்' மேலான சேவை செய்கிற, இவளைப் பார்த்து 'தாதி என்றால்

இப்படியல்லவா இருக்க வேண்டும் யார் பெற்றபிள்ளையோ என்ன புண்ணியம் செய்தவர்களோ...?' என்று மனசார வாழ்த்தினர்.

இவளுடைய மனிதாபிமான சேவையை காலையிலிருந்தே

'அமைதி' என்று சொல்லிக் கொண்டு வந்த அந்த 'அக்கிரமக்காரன்கள்' இன்னும் என்னென்ன'அநியாயம் பண்ணப் போறான்களோ....?என்றாள்.

'அதொன்றும்நடக்காதணை நீ....ஒன்றுக்கும் பயப்படாதே ....நீதான்....எங்காவது போய் ....பத்திரமாக....இரு...' என்று கொண்டே அந்த வெறுந் தேநீரைக் குடித்துக் கொண்டாள்.

- மன உறுதியும் நம்பிக்கையும் இன்னும் தளரவில்லை.

ஒன்பதாம் வாட்டையும் அதற்கடுத்த எட்டாம் வார்ட்டையும்ஒருகணம் நிதானமாகப்பார்த்தாள் இந்த ஒன்பது வருட அனுபவத்தில் எந்த நாளும் எந்த நேரமும் முண்டியடித்துக் கொண்டிருக்கிற இந்தவாட்டுகளுக்குள், ஐம்பது அறுபது கட்டில்களும் பாய்களும் தலையணைகளும் 'ஓ' என்று வெறிச்சோடிக் கிடந்தன.

'ஐயோ என்று கதறி அழ வேண்டும் போலிருந்தது. முதன்முறையாக கண்கள் கலங்கின.

### சீர்மாறன்

மனம் சோர்வதுபோலிருக்க பத்தாம் வாட்டிலிருந்து மல்லிகா வந்தாள்.

ஆலமரம்போல் வேரூன்றி விழுதுவிட்டிருந்தது.

ஒருவரையொருவர் கண்டால் வழமையாக கலகலப்பாக இருப்பவர்கள் இன்று என்னமோ, ஆஸ்பத்திரியே 'களை' இழந்திருந்ததால்இவர்கள் மனங்களிலும் 'சோகம்' குடிகொண்டிருந்தது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு 'மௌனமாக' இருந்தார்கள்.

திடீரென்று '' சர்... சர்.... கட...கட என்று இயந்திரத் துப்பாக்கிகளின் தொடர்ச்சியான வேட்டுச்சத்தங்கள் கேட்டு, திடுக்கிட்டெழுந்து தட்டுத்தடுமாறி ஓடிவந்தால்—

சீக்கிய இராணுவத்தினர் நான்கைந்து பேர் வெறிகொண்டு கண்ட கிண்டபடி அப்பாவிகளையும் நோயாளிகளையும் சுட்டுக்கொண்டு ஓடிவர-

''.... ஆமிக்காரன் சுடுகிறாண்டி...'' என்று அலறிக் கொண்டே நோயாளிகள் சிலர் ஓடினார்கள்.

இவர்களும் பீதியுடன் அலறிக்கொண்டு அவர்களைத் தொடர்ந்து ஓடினார்கள். எல்லோரும் பலத்தகுரலில் 'ஓ' என்று கதறினார்கள். வெறிகொண்ட சீக்கியர்கள் ஓடுபவர்களைத் துரத்தி துரத்தி சுட்டார்கள் தென்பட்ட குழந்தைகள், பெண்கள் வயோதிபர்கள் என்று சகல நோயாளர்களையும் தாதிகள் ஊழியர்கள், வைத்தியர்கள் என்று அனைவரையும் கணப்பொழுதில் சுட்டார்கள்.

நெருப்புச்சுட்ட, ஈசல்கள் போல் அனைவரும் நொடிப்பொழுதில் சுருண்டு வீழ்ந்தனர்

வெள்ளைச் சீருடையில் இருப்பது தாதிகள் என்பது கூட அந்த வெறியர்களுக்கு தெரியவில்லை. தங்கள் வெறி தீருமட்டும் அனைவரினதும் 'அவலஒலி' அடங்குமட்டும் சுட்டார்கள்.

சிறிதுநேரத்திற்குள்ளேயே பூரண அமைதி ஏற்பட்டது,

சத்தம்போடுவதற்கு அங்கு யாருமே உயிருடன் இல்லை.

இராணுவ சீருடையில் வந்தவர்களின் உள்ளங்களில் இரத்த வெறி.

வெண்சீருடையிலிருந்தவர்களின் உடல்களில் இரத்தக் கறை.

அன்று இரவு ''எதுவித அசம்பாவிதங்களோ உயிரிழப்

## கல்மனம்

கவிதை

எஸ். குகன்,
தொண்டையூர்,

இரக்கமற்றவனே,
எழுதிக் கொள் இதனை!
நான் ஓர் ஏழை.
என் பெயரோ அநாதை.
என் கண்களிலே
கண்ணீர் மட்டுமல்ல......
இதயத்திலிருந்து இரத்தமும்
கூடத்தான்
வற்றிவிட்டது,
இருந்தாலும்......;
இரக்கத்தை எதிர்பார்த்து
இனியும் உன்னிடம்
நான்,
இரந்திடப் போவதில்லை,
நீ!
விரும்பும் போது
கூடவும்,
வேண்டாத போது
வெட்டி வீசவும்,
நானொன்றும் உன் வீட்டு
முற்றத்து முல்லையல்ல!
ஆம்!
கடினமான கற்பாறைமீது
முளைத்திருக்கும் முட்செடி
என் வாழ்க்கையை வறட்டி,
வறுமை முட்களைச் சுமந்திருக்கும்
என் கிளைகளில்
வாசனைப் பூக்களையோ
வசந்த காலப் பறவைகளையோ
நான் எதிர்பார்க்க வில்லை.
ஏனெனில்
ஒரு துளி நீருக்கே
என் ஜீவன்
இங்கே....
ஜீவ மரணப் போராட்டம்
நடத்திக் கொண்டிருக்கிறது.
என்றாலும்......!
நீ வந்து நீரூற்ற வேண்டியதில்லை.
கற்பாறைகளையே
கசக்கிப் பிழிந்து,

அதிகாலை ஆறு மணிக்கே அடித்த 'ஷெல்' ஒன்று மெயின்வீதியின் ஓரமாக இருந்த தாதிகள் விடுதியின் கூரையை தரையிறக்கியது. மாணவ தாதிகள் கீழ்மாடியில் இருந்ததால் நல்லவேளையாக உயிர்தப்பினார்கள்.

இந்த பத்துநாட்களாக இந்திய இராணுவத்தின் அட்டகாசத்தால் கைகளை இழந்தவர்களும் கால்களை இழந்தவர்களும் ஏராளம். குழந்தைகள், வயோதிபர்கள், தாய்மார்கள் என்று சைக்கிள்களிலும் நடந்தும், மாட்டு வண்டிகளிலும்வந்தவர்களால் ஆஸ்பத்திரி நிறைந்து வழிந்தது. நோயாளர்களின் உறவினர்கள் பலர்கூட பயத்தினால் வார்டுகளில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

வடிவுக்கரசியும், ஏனைய தாதிகளும் பம்பரம்போல் சுழன்று சுழன்று புதுநோயாளிகளையும் ஏற்கனவே இருந்த நோயாளிகளையும் பார்த்துக் கொண்டனர்.

ஆனாலும் இன்று காலை தாதிகள் விடுதியில் விழுந்த

*1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தால் யாழ். பெரியாஸ்பத்திரியில் படுகொலை செய்யப்பட்ட 69 பேர்களில் இருவரான தாதிகள் அரசி, லலிதா ஆகியோரின் நினைவாக இக் கதை எழுதங்பட்டுள்ளது.*

*இதைக் குறிப்பிட்டு லண்டனிலிருந்து வைத்தியக் கலாநிதி **S.P.R.** சீர்மாறன் எழுதி அனுப்பிய சிறுகதை இது.*

தயார இல்லை. பீதிகொண்டு உயிர்ப்பாதுகாப்புத் தேடி 'சேலைன் டியூப்புகளையும், குருதிக் குழாய்களையும் பிடுங்கி எறிந்து விட்டு ஊன்றுகோல்களுடனும், சக்கர வண்டிகளிலும் நோயாளிகள்அவஸ்தைப்படுவதைப் பார்க்க இவளுக்கு மனங்கலங்கியது. உலகில் வேறெங்குமே ஒரு ஆஸ்பத்திரிக்கு இவ்வளவு அவலமும் கேவலமும் நடந்திருக்காது என்று நினைத்துக் கொண்டாள். அவதிப்படுகிற நோயாளிகளுக்கு, பாதுகாப்

இப்படியல்லவா இருக்க வேண்டும் யார் பெற்றபிள்ளையோ என்ன புண்ணியம் செய்தவர்களோ...?' என்று மனசார வாழ்த்தினர்.

இவளுடைய மனிதாபிமான சேவையை காலையிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த வியாளாச்சிக் கிழவி, சுடுநீர் போத்தலில் வைத்திருந்த தேநீரை ஒரு கோப்பையில் ஊற்றிக் கொடுத்து 'பிள்ள... இந்தா இந்தத் தண்ணியைக் குடி....களைப்புத் தீரும்...இனியும் என்னநடக்கப்போவுதோ.

வருட அனுபவத்தில் எந்த நாளும் எந்த நேரமும் முண்டியடித்துக் கொண்டிருக்கிற இந்தவாட்டுகளுக்குள், ஐம்பது அறுபது கட்டில்களும் பாய்களும் தலையணைகளும் 'ஓ' என்று வெறிச்சோடிக் கிடந்தன.

'ஐயோ என்று கதறி அழ வேண்டும் போலிருந்தது. முதன்முறையாக கண்கள் கலங்கின.

## சீர்மாறன்

மனம் சோர்வதுபோலிருக்க பத்தாம் வாட்டிலிருந்து மல்லிகா வந்தாள்.

இருவரும் ஒன்றாக இந்த ஆஸ்பத்திரியில் ஒன்பதுவருடங்களுக்கு முன்பு தாதிகளாக சேவையில் சேர்ந்தவர்கள் வேறு வேறு ஊர்களிலிருந்து வந்தவர்களென்றாலும் இந்த ஒன்பதுவருடகால நட்பு

இருப்பது தாதிகள் என்பது கூட அந்த வெறியர்களுக்கு தெரியவில்லை. தங்கள் வெறி தீருமட்டும் அனைவரினதும் 'அவலஒலி' அடங்குமட்டும் சுட்டார்கள்.

சிறிதுநேரத்திற்குள்ளேயே பூரண அமைதி ஏற்பட்டது,

சத்தம்போடுவதற்கு அங்கு யாருமே உயிருடன் இல்லை.

இராணுவ சீருடையில் வந்தவர்களின் உள்ளங்களில் இரத்த வெறி.

வெண்சீருடையிலிருந்தவர்களின் உடல்களில் இரத்தக் கறை.

அன்று இரவு ''எதுவித அசம்பாவிதங்களோ உயிரிழப்புக்களோ... இன்றி யாழ் பெரியாஸ்பத்திரி இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது ..''– என்று இந்திய வானொலி தனது செய்தியில் உலகுக்கு சொல்லிக் கொண்டிருந்தது. □

*வறுமை முட்களைச் சுமந்திருக்கும்*
*என் கிளைகளில்*
*வாசனைப் பூக்களையோ*
*வசந்த காலப் பறவைகளையோ*
*நான் எதிர்பார்க்க வில்லை.*
*ஏனெனில்*
*ஒரு துளி நீருக்கே*
*என் ஜீவன்*
*இங்கே....*
*ஜீவ மரணப் போராட்டம்*
*நடத்திக் கொண்டிருக்கிறது.*
*என்றாலும்......!*
*நீ வந்து நீருற்ற வேண்டியதில்லை.*
*கற்பாறைகளையே*
*கசக்கிப் பிழிந்து,*
*நீர் பருகும் நெஞ்சுரம்*
*என் வேர்களுக்கு*
*நிறையவே இருக்கிறது.* □

# இருதுறை மேதையின் இழப்பின் வெற்றிடம்

**இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்**

''பகிரங்க கடிதம்'' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தினை எழுதி அதில் ஆஸ்தான வித்துவான்களை அரண்மனைப் பிச்சைக்காரர்கள் என்று குறிப்பிட்டுபெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் **வீணை. எஸ். பாலச்சந்தர்.**

திரு. லாங்கூர் மகாராஜாவாக இருந்த கலாதித் திருநாள் மகாராஜா இயற்றிய கிருதிகளை (கீர்த்தனைகள்) அவர் இயற்றவில்லை. அவற்றை இயற்றியவர்கள் தஞ்சை நால்வர் என வழங்கப்படும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோரே எனவாதிட்டவர் அவர் ஆகும்.

அது காரணமாகவே 'நேஷனல் புக்ட்ரஸ்ட்' புத்தக நிறுவனம் 'கலாதித் திருநாள்' என்ற நூலை வெளியிட்ட போது தனது எதிர்ப்பினைக் காட்டத் தவறவில்லை. சங்கீத கலாநிதிசெம்மங்குடி சீனிவாச அய்யங்கார் எழுதிய மேற்படி நூலினை திரும்பப்பெறுமாறு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கையும் தாக்கல் செய்தவர் பாலச்சந்தர்.

பிரபல கர்நாடக இசை வல்லுனர் பாலமுரளிகிருஷ்ணா சில சொந்த சாகித்தியங்களை உருவாக்கிய தாகக் கூறியபோது அதனை ஏற்காது தர்க்கித்தவர்.

இவ்வாறு இசை உலகில் வித்தியாசமானவராக விளங்கிய எஸ். பாலச்சந்தர் தான் சார்ந்திருந்த துறைகளில் எல்லாம் தனது தனித்துவத்தினை வித்தியாசமாகவே காட்டி வந்தவர்.

வீணை என்ற வாத்தியத்தினை புதிய பரிமாணங்களுக்கு உட்படுத்தி மிக நீண்ட கச்சேரிகளை வெகுவாக அனுபவித்து வாசித்து உச்சங்களைத் தொட்டவர். கர்நாடக சங்கீதத்தின் மகத்துவத்தையும் புனிதத்தையும் பெரிதாக அவர் மதித்ததால் ஜனரஞ்சகமாக தனது பணியைத் தொடர்ந்தார்.

பாலச்சந்தர் என்றால் வீணை என்றும் வீணை என்றால் பாலச்சந்தர் என்றும் ஒரு மதிப்புமிக்க தொடர்பினை ஏற்படுத்தியபடியால் தான் பத்மபூஷண் விருதும், சங்கீத நாடக அக்கடமி விருதும் அவருக்கு கிடைத்தன. சென்ற மாதம் அவர் காலமாகும்வரை மத்திய பிரதேசத்தில் உள்ள பிலாய் நகரில் குனால் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் இருக்க முடிந்தது.

பதினெட்டு வயதிலேயே வீணையை பழகத்தொடங்கினாலும் குருவே இல்லாமல் ஏழுவயதில் மிருதங்கம், கஞ்சிரா, மோர்சிங் என்று பல வாத்தியங்களை வாசிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்.

வீணை கல்வித் தெய்வம் சரஸ்வதியின் கையிலும் உள்ளது. இலங்கை வேந்தனாம்



இராவணன் கையிலும் இருந்தது. வாத்தியக் கருவி ஒன்றாக இருந்தாலும் அவர்கள் வாசிக்கும் தன்மை வேறானது.

உண்மையில் இராவணன் கையில் உள்ள வீணையைப் போலவேபாலச்சந்தர் கையில் வீணை இருக்கும்போது உள்ள கம்பீரமும் வேகமும் இருக்கும் எனச் சொல்லுவார்கள்.

வீணையில் அவர் உயிர் மூச்சாக இருந்தாலும் மிகவும் சக்தி வாய்ந்த சாதனமான சினிமாவிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது.

அதனால் தான் வீணை எனது ஆராதனை சினிமா எனது சாதனை என்றும்,

அவரது வித்துவத் தன்மையை, ஆற்றலை கௌரவித்து உலகம் பூராவிலும் இருந்து கிடைத்த பட்டங்களே நூற்றுக்குமதிகம்.

– ஒரு சுவையான விடயம்: இவரது கையொப்பம் வீணையைப்போலவேயிருக்கும்.

'படத்தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது தப்பித்தவறிக் கூட என் வீணையை அங்கு கொண்டுபோனதில்லை. நான் தெய்வப் பிரசாதமாகத்தான் வீணையைப் போற்றி வருகின்றேன்' எனவும் கூறினார்.

சினிமாத்துறையினை எடுத்துக் கொண்டால் அவர் ஒரு பல்துறை விற்பன்னராகவே செயல்பட்டார். முதலில் அவர் நடிகர். சாதாரண துணை நடிகராக இருந்து (சீத்தாராம கல்யாணம்) கதாநாயகன் (ராணி) வில்லன் (ராஜாம்பாள்) என்று பல்வேறு பாத்திரங்களில் நடித்துள்ளார்.

சினிமாவின் ஏனைய துறைகளான நெறியாளுகை (டைரக்ஷன்)இசை, தயாரிப்பு, என்று அவரது ஆற்றல்கள் ஏராளம்.

## வீணை என் ஆராதனை
## சினிமா என் சாதனை

*- எஸ். பாலச்சந்தர்*

1953ஆம் ஆண்டு 'கைதி' என்ற படத்தினை நெறியாளுகை செய்த அவர் எது நிஜம், அவன் அமரன் அந்த நாள், பொம்மை, அவனா இவன், நடுஇரவில் என்று பல படங்களைத் தந்தார்.

அனேகமாக எல்லாப் படங்களுமே துப்பறியும் கதைக் கருக்களாகக் கொண்டாலும் அவை தற்காலத்து தமிழ்ப் படங்களைப் போல மசாலப் படங்களாக இருக்கவில்லை. துப்பறியும் படங்களைக் கூட அழகாக படமாக்க முடியும் என்பதை அவிர் நிரூபித்தார்.

அவரது ஒவ்வொரு படத்திலும் ஏதாவது புதுமைகள் இருக்கும். 'அந்தநாள்' என்ற படத்தில் பாடல்களே இல்லை. 'பொம்மை' படத்தில் எழுத்துக்களே (டைட்டில்) இல்லை.

தனது லட்சியப் படம் என்று அவரால் கட்டி உரைக்கப்பட்ட நடு இரவில் என்ற படம் பற்றி கூறுகையில்:

'எனக்கு ஏழு வயதிருக்கும் ஓர் ஆங்கிலப்படம் வெளி வந்திருந்தது. அதைப் பார்த்து விட்டு வந்த என் மனத்தின் அடித்தளத்தில் அப்படத்தின் மையக் கருத்து அப்படியே பதிந்து விட்டது.

நாளாகி என் வயதுடன் அந்த மையக்கருத்து வளர்ந்து கொண்டே வந்தது.

ஒரு நாள் அதுவே ஒரு முழுக்கதையாகி வளர்ந்தது. அந்தக் கதைதான் 'நடு இரவில்' கதை என்று குறிப்பிட்டு இருந்தார் அவர்.

இன்று கர்நாடக இசையுலகில் கொடிகட்டிப் பறக்கும் கே. ஜே. ஜேசுதாஸை திரையுலகிற்கு தனது 'பொம்மை' திரைப்படத்தில் அறிமுகப் படுத்தியவரும் இவரே.

இவரது மறைவு இருவேறு துறைகளுக்கு ஏற்பட்ட நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இருக்கும். □

# இலக்கியத்தடம்

## எழுத்துலகில் புதியவர்களின் ஆர்வமும், ஆற்றலும்- வளர்ச்சி பெற வழிகள்....

### ஆர்வமுள்ள புதியவர்கள்

இன்று நம் மத்தியில் புதிது புதிதாக பலர் எழுத ஆர்வமுடன் முனைகின்றார்கள். சிறுகதையோ, கவிதையோ, நாவலோ, கட்டுரையோ என்று எதையாவது எழுத வேண்டும் அவை பத்திரிகைகளில் பிரசுரமாக வேண்டும். தீவிரமான வேட்கை பலருக்கு உள்ளது.

இந்த எழுத்து ஆர்வம் உண்மையில் வரவேற்கப்படவேண்டியது. ஆனால் பத்திரிகைகளில் மட்டும் பிரசுரமானால் போதுமானது என்ற எண்ணம் மாத்திரம் போதுமானதல்ல.

புதியவர்கள் நிறைய எழுதுகின்றார்கள். (கவிதைகள் (?) எழுதுபவர்கள் தான் ஏராளம்), அவர்களுக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கும். காரண காரியங்கள் ஏராளம். ஆனால் அவற்றில் முக்கியமானது, அவர்கள் வாசிக்கும் பத்திரிகை சிறுகதைகள், நாவல்கள்தான். இத்தகையவர்களின் வாசிப்பு மூலங்களாக எவை அமைகின்றன? பெரும்பாலானோர் நம் நாட்டு பத்திரிகை சஞ்சிகைகளை விட தென்னிந்திய வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் மாத நாவல்களைத் தான் வாசிக்கின்றார்கள்.

இலக்கிய தரமான சஞ்சிகைகள், நூல்களின் பரீட்சயம் இவர்களுக்கு இருப்பதில்லை. எனவே அவர்கள் வாசிக்கும் மூன்றாம்தர, நாலாந்தர கதைகளை ஒத்ததாக தமது கதைகளையும் எழுதுகின்றார்கள். பலர் சிறுகதைகள் என்று சொல்லி நாவலின் சுருக்கத்தினைஎழுத முனைகின்றனர்.

இது தான் தற்போதைய உண்மையான நிலை. இவர்களின் ஆர்வத்தினையும் அக்கறையினையும் அநியாயமாக்கி விடக்கூடாது. இவர்களில் எத்தனையோ மிகத் திறமையானவர்கள் இருக்கக் கூடும்.

எழுத ஆர்வமுள்ள அனைவரும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்கள். முறையான வழிகாட்டலின் கீழ் சரியான திசைக்கு திருப்பி விடப்பட வேண்டியவர்கள்.

### புதியவர்களின் படைப்புகள்

இவர்கள் பிழையான தகைமையுள்ள கதைகளை கவிதைகளை எழுதியனுப்பி விட்டு, எமது கதைகள் பிரசுரமாகுமா? இல்லையா? என்று பிரதிவாரமும் பத்திரிகைகளைப்பார்த்துப் பார்த்உசலித்துக் கடைசியில் எழுதுவதையே விட்டுவிடுகின்றார்கள்.

இன்னும் சிலர் நாலைந்து சினிமாப் பாடல்களுடன்இசையும் கதையும் எழுதி வானொலிக்கு அனுப்பி அது ஒலிபரப்பாகி விடவே அதுவே தமது உச்சமென நம்பி தொடர்ந்து இசையும் கதையும் எழுதிக் கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டும் உள்ளனர்.

இவை சில பின்னணி விபரங்களே. இவை பற்றி தனியாக ஆராய்ந்தால் வேறு பல விபரங்களையும் விஸ்தாரமாக ஆராய முடியும்.

எமக்கு முன்னால் உள்ள பிரச்சினை எதுவென்றால் இத்தகைய ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்களை எப்படி சரியான வழிக்கு கொண்டு வருவது.

சினிமா என்றால் பாக்கியராஜ், ராஜேந்தர் போன்ற (அனேகமாக எல்லோரும் தான்) வர்களின் மசாலாப் படங்களே மிகத் திறமையான படங்கள் எனப் பூரித்துப் பார்க்கும் சினிமா இரசிகர்கள் போல இருக்கும் எமது புதிய ஆர்வலர்களை சரியாக வழிநடத்த வேண்டியது எமது இன்றைய முன்னோடிகளின் கட்டாய கடமையாகும்.

### பயிற்சிக்கான அவசியம்

வழிகாட்டல் என்று சொன்னால்! சங்கீதம் படிக்கும் பிள்ளை சங்கீத வித்துவானிடமிருந்து மிருதங்கம் பழக, மிருதங்க வித்துவானிடமும், நடனம் பயில நட்டுவனாரிடமும் போவது போல, கவிதை எழுத, சிறுகதை எழுத, நாவல் எழுத எங்கே போவது?

சங்கீதமோ, மிருதங்கமோ, நடனமோ படிப்பவர்கள் எல்லாம் திறமை மிக்க கலைஞர்களாக உருவாகி விடுவதில்லை. அடிப்படையான சில விடயங்களைத் தமது குருவிடம் இருந்து படித்து, தமது விடாமுயற்சி, சாதகம் கற்பனை என்று பல இன்னோரன்ன காரணங்களால் ஒவ்வொருவரும் தத்தமது தனித்துவங்களைப் பேணி சிறந்த கலைஞர்களாகவருகின்றனர்.

ஒரே குருவிடம் பயின்ற இரண்டு கலைஞர்கள் வெவ்வேறு வகையான திறமையான கலைஞர்களாக (ஒருவர் மற்றவரின் நகலாக இல்லாமல்) இருப்பதைக் கூடக் காணலாம்.

இதே போலத்தான் எழுத்தாளர்களும். எனவே எமது புதியவர்களைதத்தமது துறைகளில் (தமக்கு ஈடுபாடான) போதிய அனுபவம், பயிற்சியும் பெற வைக்க வேண்டியது அவசியமாகின்றது.

சிறுகதையினை எடுத்துக் கொண்டால், அதன் வடிவம் பற்றிய தெளிவு இருந்தால் தான் எழுதுபவர்களின் புதிய பரிமாணங்களை சிறுகதை என்னும் வடிவத்தின் ஊடாக வெளிக் கொண்டு வரமுடியும்.

அவ்வாறே ஆழமான வாசிப்பும், அதன் ஊடாக வேகம் பெறும் தேடலும், பொறுக்கி எடுக்கும் மணிகளைப் போல - ஒவ்வொரு சிறு சிறு மணிகளாகக் கோர்த்து மாலை செய்வது போல சொற்களைப் பொறுக்கி மிகமிக நுட்பமாக எழுத்தாக்க முடியும்.

பல வருடங்களாக எழுதிக் கொண்டு இருக்கும் அனேகம் பேரின் கதைகளில் அல்லது கவிதைகளில் இன்னமும் கூட வடிவம் பற்றி பிரக்ஞையும், ஏனைய குறைபாடுகள் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு தமது துறைசார்ந்த போதிய பயிற்சியும், அனுபவமும், இல்லை என்றே கூறலாம்.

எனவே இத்தகைய இடர்பாடுகள் தமதுஇளைய தலைமுறையினருக்கும் வராமல் பார்க்கஅவர்களுக்குப்போதிய பயிற்சியும், ஏனைய வசதிகளும் செய்து கொடுத்தல் அவசியமாகின்றது.

''எழுத்துப் பரீட்சையினை - எழுத்துப்பட்டறைகள்மூலம் பெறுவதன் வாயிலாகவும், சிறந்த சிறுகதைகளை உரிய வாசிப்புத் திறனுடன் வாசிப்பதன் வாயிலாகவும் நல்ல காத்திரமான விமர்சனங்கள் மூலமாகவும் இப்பிழைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்' என கலாநிதி எஸ். மௌனகுரு ஒரு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டது உண்மையே.

'எழுத்தாளர் (கவிஞர்கள் கதாசிரியர் உட்பட) தாம் கையாளும்இலக்கிய வகையின் பயிலலில் (அத்திறமை கண்டு பிடிக்கப் பெற்றதன் முன்னரோ, பின்னரோ) நியாயமான பயிற்சி பெறுவதில்லை. எழுத்துப்பட்டறைகள் Writers Work Shops) இதற்கு பெரிதும் உதவும். அத்தகைய பயிற்சி இல்லாதவிடத்து அல்லது வேண்டப்படாதவிடத்து, குறித்த எழுத்தாளர் தனது கூரிய வாசிப்புத்திறனால் தனது எழுத்து வன்மையை வளர்த்துக் கொள்வார். அதுவும் இல்லாதவிடத்து சகோதர விமர்சனங்கள்மூலம்,பயில் திறனை வளர்த்துக் கொள்ளலாம்'.

கலைகளின்தோற்றம் அந்த அந்தக் கலைகளின்அடிப்படை சாஸ்திரீயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். ஆரோகணம்-அவரோகணம் தெரியாதவனால் ராக ஆலாபனை செய்ய முடியாது. உளிகளின் தன்மை பிரயோகம் ஆதியனவும், கல், மரம், உலோகங்களின் தன்மை ஆதியனவும் தெரியாதவன் சிற்பி ஆகிவிடமுடியாது. வர்ணங்களின் தனித்துவம் அவற்றின் கலவைச் சீர் தெரியாதவன் ஓவியனாகிவிட முடியாது. தூரிகை வேறுபாடு பற்றிய பரிச்சயம் அவனுக்கு அத்தியாவசியம். நடிப்புக்கான பயிற்சிகள் தேவை; அவை இல்லாது நடிகனாதல் முடியாதென்பது இப்பொழுது படிப்படியாக உணரப்படுகின்றது. ஆனால் எழுத்துத்துறையில் பயிற்சியின் கவனம் செலுத்தப்படுவதில்லை. சோஷலிச நாடுகளில் எழுத்தாளர் சங்கங்களின் முக்கிய பணி இளங் கலைஞர்களை எழுத்தாளர்களாக்குவதிலும், எழுத்தாளர்களை முதிர்ந்த கலைஞர்களாக்குவதிலுமே காணப்படும். இந்த உண்மையை நாங்கள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்'.

'இவ்வாறு கூறுவதன் மூலம் குறிப்பிட்டஒரு வழிவகையிலேயே படைப்புத் திறன் வளர்க்கப்பட வேண்டுமென்று நான் கூறவில்லை. எழுத்தாளன் எனத் தன்னைக் கூறிக் கொள்பவன் பிரக்ஞைபூர்வமான சிரத்தையுடன் அத்துறையில் தனது பரிச்சயத்தையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். வளர்த்தெடுப்பின் வளமான சிறுகதை அறுவடைக்கு இன்னும் இடமுண்டு என்பது நிச்சயமாகத் தெரிகிறது.' எனப்பேராசிரியர் கா. சிவத்தம்பி நூல் ஒன்றின் பின்னுரையில் குறிப்பிட்டு உள்ளதும் கவனத்திற்குரியன.

**அழலாடிக்குட்டன்**

பேராசிரியர் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டது போல கதை கட்டவோ, அல்லது கதை தயாரிக்கவோ, மட்டும் இந்த எழுத்துப்பட்டறைகள் பயிற்சிகள் உதவும் என்று கூறவில்லை.

தையல் கலை பயிலுவோர் ஒரே மாதிரியாகத் தான் வெட்டி, தைத்துப் பழகுன்றனர். ஆனால் தத்தமது திறமைக்கும் கற்பனை வளத்துக்கும் ஏற்றது போல தம்மை நிலைநிறுத்திக் கொள்கின்றார்கள். அவ்வாறே ஏனைய துறைகளை எடுத்துக் கொள்ளலாம்.

### எழுத்தாளர் பயிற்சிப் பட்டறைகள்

சென்ற வருடம் பங்குனி மாதத்தில் 'நான்' சஞ்சிகை எழுத்துப்பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. அதில் பல ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் பங்கு கொண்டு பயிற்சி பெற்றனர்.

இந்த வருடம் கடந்த மாதம் 20, 21, 22,ஆம் திகதிகளில் கைதடி நவில்ட் பாடசாலையில்சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினால் எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

'புதிய உலகம்' சஞ்சிகையினரும் இவ்வாறான ஒரு எழுத்தாளர் பயிற்சிப் பட்டறையினை நடாத்துவதற்கு சில முயற்சிகளை சென்ற வருடம் மேற் கொண்டு இருந்தனர். சிலவேளை இனிமேலும் அது நடக்கலாம்.

இவ்வாறான பயிற்சிப் பட்டறைகளில் இலக்கிய வடிவங்கள் பற்றிய வரலாறு, அதன் அமைப்பு, பற்றிய விரிவுரைகளோடு பல்வேறு எழுத்தாளர்களின் நேரடியான சந்திப்புக்கள், உரையாடல்கள் மூலம் அவர்களது அனுபவங்களை, அவர்கள் தமது கருக்களை எவ்விதம் படைப்புக்கள் ஆக்குகின்றனர்என்பதையும் புதியவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் பங்கு கொள்ளும் புதியவர்கள் தமது சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதன் மூலம் பயிற்சியின் பின்னர் தமது சொந்த படைப்புக்களை பயிற்சியாளர்களுக்குக் காட்டி திருத்தங்களும் விளக்கங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படியான எழுத்தாளர் பயிற்சிப் பட்டறைகள்இரண்டு மூன்று நாட்கள் மட்டும் நடத்தினால் மட்டும் போதுமானதாகஇருக்க மாட்டாது. தொடர்ச்சியான பயிற்சியும் தொடர்புகளும் இருப்பது மிக உபயோகமாக அமையக் கூடிய நிகழ்ச்சியாகும்.

அது மட்டுமல்ல இவ்வகையான செயற்பாடுகள் ஒவ்வொரு கிராமம் தோறும் நடாத்தப்பட வேண்டும் அவ்வாறு செய்யப்பட்டால் கிராமங்கள் தோறும் உள்ள ஆர்வமுள்ள இளைய தலை முறையினருக்கும் பிரயோசனமாக இருக்கும்.

---

## [illegible] கவிதைகள்

தொடர்பு உண்டு. ஜென்னின் மையம் வெறுமனே எண்ணமல்ல. அனுபவம், நுண்ணறிவைவிட அனுபவமும் உணர்வுமே ஜென்னின் அடிப்படை என்பதால் அதன் வெளிப்பாடாக ஹைக்கூ அமைவது சாலப்பொருந்துமே.

ஜென் பௌத்தம் பற்றி அறிந்து கொள்வதற்காக

றோம், உட்காந்திருக்கின்றோம், பேசுகின்றோம், வேலை செய்கின்றோம் ஆனால் ஜென் மதக் கோட்பாட்டில் உண்மையில் ஒன்றும் நடைபெறுவதில்லை எனக் கூறப்படுகிறது.

ஜென் கவிஞர்கள் சூன்யம், மாயை போன்ற ஆன்மீகக்

## கலாரதம்



ஒரு தேசிய இனத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளாக பாரம்பரிய பிரதேசம் மொழி, கலைகலாசாரம் என்பவை சுட்டிக்காட்டப்படுகின்றன. ஈழத்தமிழர் உலகத் தமிழரோடு பொதுவான கலாசாரத் தொடர்புகொண்டிருப்பினும் தமக்கென சில விசேட குணாம்சங்களை வாழ்வியலில், பேச்சில், பண்பாட்

நாவலின் சுருக்கத்தினைஎழுத முனைகின்றனர்.

இது தான் தற்போதைய உண்மையான நிலை. இவர்களின் ஆர்வத்தினையும் அக்கறையினையும் அநியாயமாக்கி விடக்கூடாது. இவர்களில் எத்தனையோ மிகத் திறமையானவர்கள் இருக்கக் கூடும்.

தகைய ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்களை எப்படி சரியான வழிக்கு கொண்டு வருவது.

சினிமா என்றால் பாக்கியராஜ், ராஜேந்தர் போன்ற (அனேகமாக எல்லோரும் தான்) வர்களின் மசாலாப் படங்களே மிகத் திறமையான படங்கள் எனப் பூரித்துப்

வொருவரும் தத்தமது தனித்துவங்களைப் பேணி சிறந்த கலைஞர்களாகவருகின்றனர்.

ஒரே குருவிடம் பயின்ற இரண்டு கலைஞர்கள் வெவ்வேறு வகையான திறமையான கலைஞர்களாக (ஒருவர் மற்றவரின் நகலாக இல்லாமல்) இருப்பதைக் கூடக் காணலாம்.

முறையினருக்கும் வராமல் பார்க்கஅவர்களுக்குப்போதிய பயிற்சியும், ஏனைய வசதிகளும் செய்து கொடுத்தல் அவசியமாகின்றது.

''எழுத்துப் பரீட்சையினை – எழுத்துப்பட்டறைகள்மூலம் பெறுவதன் வாயிலாகவும், சிறந்த சிறுகதைகளை உரிய வாசிப்புத் திறனுடன் வாசிப்

அவை இல்லாது நடிகனாதல் முடியாதென்பது இப்பொழுது படிப்படியாக உணரப்படுகின்றது. ஆனால் எழுத்துத்துறையில் பயிற்சியின் கவனம் செலுத்தப்படுவதில்லை. சோஷலிச நாடுகளில் எழுத்தாளர் சங்கங்களின் முக்கிய பணி இளங் கலைஞர்களை எழுத்தாளர்களாக்குவதிலும், எழுத்தாளர்களை முதிர்ந்த கலைஞர்களாக்குவதிலுமே

☐ எழுத்தாளர் பயிற்சிப் பட்டறைகள்

சென்ற வருடம் பங்குனி மாதத்தில் 'நான்' சஞ்சிகை எழுத்துப்பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. அதில் பல ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் பங்கு கொண்டு பயிற்சி பெற்றனர்.

இந்த வருடம் கடந்த மாதம் 20, 21, 22, ஆம் திகதிக

தொடர்புகளும் இருப்பது மிக உபயோகமாக அமையக் கூடிய நிகழ்ச்சியாகும்.

அது மட்டுமல்ல இவ்வகையான செயற்பாடுகள் ஒவ்வொரு கிராமம் தோறும் நடாத்தப்பட வேண்டும் அவ்வாறு செய்யப்பட்டால் கிராமங்கள் தோறும் உள்ள ஆர்வமுள்ள இளைய தலை முறையினருக்கும் பிரயோசனமாக இருக்கும். ☐

# "ஹைக்கூ கவிதைகள் — ஒரு நோக்கு"

சார்லீஸ்

பகுதி (2)

தற்போதுதமிழ்க்கவிதையுலகில் விசேடமாக பேசப்பட்டு வரும் ஹைக்கூ கவிதைகள் தமிழ் இலக்கியப் பரப்பிற்கு புதியதா? அல்லது கவிதைகளின் நவீன இறுக்கமான வடிவமா? என்பதே வினாவாகும்.

ஜப்பானிய 'ஹைக்கூ' என அழைக்கப்பட்ட போதிலும் நவீன இலக்கியப் பரப்பில் கவிதைத் துறையில் இறுக்கமான தளர்ச்சிபெற்ற புதுமை மிக்க வடிவமே ஹைக்கூவாக இனங்காணப்பட்டு வருகின்றது.

இந்த ஜப்பானிய ஹைக்கூ ஜென் (ZEN) மதத்தின் ஆரம்பத்திலிருந்தே எழுந்ததாகக் கூறப்பட்டு வருகின்றது. ஜென் மதம் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் நெருங்கிய தொடர்புகளைக் காட்டி வந்துள்ளது.

காஞ்சிபுரத்திலிருந்து வந்த 'போதிதர்மர்' என்ற பௌத்த குருதான் சீனாவில் ஜென் மதப் பிரிவைத் தொடக்கி வைத்தாரென அறியப்படுகிறது. இப் போதி தர்மர் சீனாவிற்கு வந்த போது பெரும்பாலான மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். ஆனால் சீனாவில் அக்காலத்தில் நடைமுறையிலிருந்த பௌத்தமதத்தில் தத்துவச் சிக்கல்களும், நுணுக்கங்களும் நிறைந்தாகக் காணப்பட்டன.

போதிதர்மர் சாதாரண மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே தியானம் செய்து விழிப்புணர்ச்சி பெறவேண்டும் என்பது இவரின் நோக்கமாகும். போதி தர்மர் போதித்த ஜென் மதத்தில் நான்கு முக்கிய அம்சங்கள்-

★ சமய நூல்களை தவிர்த்து அவற்றிற்கு அப்பால் ஞானம் பெறுதல்.

★ வார்த்தைகளை நம்பியிருக்கும் நிலையை மாற்றுதல்,

★ மனிதனில் மனதை நேரடியாகத் தொட முயலுதல்.

★ தன் சுபாவத்தை-இயல்பை உணர்ந்து முற்றும் உணர்ந்தோர் நிலையை அடைதல்.

ஜென் மதத்தின்அடிப்படை வரையறைகளாகக் கூறப்பட்டவை மனிதனிலிருந்து மனிதனுக்காக 'மனிதாபிமானம்' வளர்ந்த நெறியாகவே கருத வேண்டும். ஏனெனில் ஒருவனைத் தாழ்த்துவதன்மூலம் மற்றவன் உயர்வடைவான் என்ற நம்பிக்கை ஜென்மதத்தில் காணப்படவில்லை, அனைவரும் பாடுபட வேண்டும் என்பது பொதுக் கருத்தாகக் ஜென்மதத்தில் காணப்பட்டது.

ஜென்னுக்கும் கவிதைக்குக் குறிப்பாக ஹைக்கூ வடிவக கவிதைதக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஜென்னின் மையம் வெறுமனே எண்ணமல்ல. அனுபவம், நுண்ணறிவைவிட அனுபவமும் உணர்வுமே ஜென்னின் அடிப்படை என்பதால் அதன் வெளிப்பாடாக ஹைக்கூ அமைவது சாலப்பொருந்துமே.

ஜென் பௌத்தம் பற்றி அறிந்து கொள்வதற்காக சீனா சென்ற ஜப்பானிய பௌத்த குருமார்கள் அளவில் சிறியதான சீனக் கவிதைகளை ஜப்பானிய மொழியில் மொழி பெயர்த்து விட்டார்கள். இதுதான் ஹைரகூவின் தொடக்கமாக அறியப்படுகின்றது.

ஹைக்கூ கவிதைகள் உண்மையில் பௌத்த மதத்தின் ஜென் பிரிவினரின் தியானத்துக்காக மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகள் இலக்கிய அந்தஸ்தைப்பெற்றமை குறிப்பிடத்தக்கதே.

ஜென் மாணவர்கள் தியானத்தைத் தொடங்கும்போது ''சூன்யமே உருவம் உருவமே சூன்யம்'' என ஜெபிப்பார்கள்.

உருவத்தின் மூலமே சூன்யத்தை உணரமுடியும். அமைதியான நீர்நிலை நிசப்தத்தை உருவாக்குகிறது. ஒலி - ஒலியின்மைக்கு அழுத்தம் தருகிறது. ஓவியத்தில் வெற்றிடங்கள் - கவிதையில் இடைவெளி -நடனத்தில் அசைவற்று நிற்பது இவையெல்லாம் சிருஷ்டிக்கு அழகையும் தெளிவையும் ஜென்னின் மூலம் தருகிறது.

ஒலி - ஒலியற்ற நிலைக்கு அழுத்தம் தருவது போல, தனிமைக்கும் அர்த்தம் உண்டாகிறது. நீர்நிலையில் தெரியும் நட்சத்திரத்தின் பிம்பம் மழைத்துளி விழுந்தவுடன் கலைகிறது. அதனை ஹைக்கூவின் ஜப்பானியக் கவிஞன் தருகின்றான்.

குட்டையில் -
நட்சத்திரங்களின் பிம்பம்.
மாரிக்கால மழை
தண்ணீர் சலசலக்கிறது

சூன்ய நிலையிலே பொருளின் அசைவு அல்லது நகர்ச்சி நிகழ்வதில்லை. தினசரிவாழ்க்கையில் நாம் நடக்கின்றோம், உட்கார்ந்திருக்கின்றோம், பேசுகின்றோம், வேலை செய்கின்றோம் ஆனால் ஜென் மதக் கோட்பாட்டில் உண்மையில் ஒன்றும் நடைபெறுவதில்லை எனக் கூறப்படுகிறது.

ஜென் கவிஞர்கள் சூன்யம், மாயை போன்ற ஆன்மீகக் கோட்பாடுகளைவிடபௌதீக விடயங்களைப் பற்றியே அதிகம் பாடிபிருக்கின்றனர்,

அர்த்தமற்ற தத்துவ விசாரணைகளில் ஜென்புறம் போக்கானது. இவற்றைத் தவிர்த்துக்கொள்வதிலேயே பெரிதும் விரும்புகின்றது.

ஜென் பிரிவினர் ஜப்பானுக்கு அளித்த நளினமான அழகுமிளிரும் கலை ஒன்று. அதுவே தேநீர் அருந்தும் சடங்காகும். தினசரி வாழ்க்கையில் சிக்கல்களில் மனம் அலைமோதிப்பரபரப்பு அடைகின்றது. சந்தடியற்ற அமைதியான சூழ் நிலையில் தேநீர் அருந்தும் சடங்கு மனதை சமநிலைப்படுத்துகின்றது. இந்நிகழ்வு ஜப்பானுக்குக் கிடைத்த கலைச்சிறப்பாகவே கருதப்படுகிறது.

இலக்கிய வடிவங்களில் ஹைக்கூ எளிய, ஆனால் நுண்ணிய உணர்வுகள்கொண்டது. கபடமற்ற எளியதன்மை ஹைக்கூவின் சிறப்பம்சம், கலைப்படைப்பாஅல்லதுஇயற்கையினூடு எழுந்துவரும்சமூக யதார்த்தப் படைப்பா என வாசகனையும் கவிஞரையும் மயங்க வைக்கும். அதிசயம் தரத்தக்க இந்த வாமனவடிவம் ஜென் பௌத்தம் தந்த சிறப்புப் பொக்கிசமாகும்.

தமிழில் ஹைக்கூ ஆழமான சுவடுகளைப் பதிந்து வருகின்றது. தமிழ்க் கவிதைகளில் நவீனமானதாகவும், இறுக்கமிக்கதாகவும் ஹைக்க எழுச்சி பெற்று வருகின்றது, ☐

(தொடரும்)

# கலாரதம்

# ஈழத் தமிழருக்கென்று ஒரு தேசியநடனக்கலை

கந்தையா ஸ்ரீகணேசன்

ஒரு தேசிய இனத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளாக பாரம்பரிய பிரதேசம் மொழி, கலைகலாசாரம் என்பவை சுட்டிக்காட்டப்படுகின்றன. ஈழத்தமிழர் உலகத் தமிழரோடு பொதுவான கலாசாரத் தொடர்புகொண்டிருப்பினும் தமக்கென சில விசேட குணாம்சங்களை வாழ்வியலில், பேச்சில், பண்பாட்டில் கொண்டுள்ளார்கள். அந்த வகையில் கலை, இலக்கியம் ஆகியவற்றிலும் தமக்கென ஒரு முத்திரையைப் பதிப்பது அவர்களது தனித்துவத்தை விளம்பி நிற்கும்.

கடந்த மார்ச் 30,31, ஏப்ரல் 1 ஆம் திகதிகளில் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் விவேகானந்த சபையும் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சும் இணைந்து நடாத்திய 'பண்ணும் பரதமும் - இசைநடன விழாவின் ஒரு பகுதியாக 'இலங்கைத் தமிழரின் இசை நடனப்பாரம்பரியம்' பற்றிய கருத்தரங்கு ஒன்று பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் இடம்பெற்றது. இக்கட்டுரையில் மரபுவழி இசை நடனம் பற்றிய கருத்துக்கள் கணிப்புக்கு எடுக்கப்படுகின்றன. ஏனெனில் செந்நெறிப் பாரம் பரியம் எம் மத்தியில் சிறப்புறக் காணப்படினும் அவை எம் மக்களது என்று சொந்தம் கொண்டாடமுடியாது. அது இந்திய மக்களுக்குரியது என்ற உண்மையை நாம் மனங் கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழரின் தனித்துவமான இசை, நடனம் ஆகியவற்றை வகுத்துக் கொள்ள வேண்டிய அரசியல் சூழ்நிலை கனிந்துள்ள இவ் வேளையில் இது பற்றிய காத்திரமான கருத்துக்களும், பணிகளும் மக்கள் முன்னே வைக்கப்படுகின்றன. பேராசிரியர் கா. சிவத்தம்பி தமது உரையின் போது, ஈழத்தமிழரின் தமிழ்க் கலைகள் பற்றிய ஒரு ஆராய்ச்சி இன்னும் செய்யப்படவில்லை, இதனைச் செய்ய வேண்டிய கால கட்டம் வந்து விட்டது, இதற்கு அரசும் உதவவேண்டும்; பிரதேச ரீதியில் வெவ்வேறு தமிழ்க் கலைகள் காணப்படினும் அவற்றுக்கெல்லாம் அடிப்படையான ஈழத்துப் பாரம் பரியம்ஒன்று உண்டு இப்பாரம் பரியத்தை நாம் வளர்த்தெடுப்பது எமது குழுமத்தியின் சமூகப் பிரக்ஞையைப் பேண உதவும் என்றார்.

இக்கருத்தரங்கில் வட இலங்கைக் கூத்துமரபு பற்றி காரை செ. சுந்தரம்பிள்ளை கிழக்கிலங்கைக் கூத்துமரபு பற்றி கலாநிதி சி. மௌனகுரு வன்னிக்கூத்து மரபுபற்றி திரு. செ. மதராஸ் மெயில், மலையகமக்களின் பாரம்பரிய இசை நடனம் பற்றி திரு. வி தேவராஜ், கிராமிய நடனப் பாரம்பரியம் பற்றி திரு. சில்லையூர் செல்வராஜன் மதச் சடங்கு இசைபற்றி கலாநிதி இ. பாலசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர்.

ஈழத்தமிழரின் கலைகள் என்று கூறும் போது பரதம், கர்நாடக சங்கீதம் ஆகியவற்றை எடுத்துக் கூறுவர். நாம் ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் சிங்களவர் தமக்கு என தனியான ஒரு நடனம், இசை ஆகியவற்றை வகுத்துள்ளனர். இதேபோல் மலையாளத்தவர் கதகளியையும்' கன்னடத்தவர் யக்ஷகானமும் ஆந்திரர் குச்சுப்புடியும், மணிப்பூர் மக்கள் மணிப்புரியும் தமது கலைகளாகப் பேணுகின்றார்கள். தமிழகத்துப் பரதம், தெருக்கூத்து, ஈழத்து வடமோடி தென்மோடி ஆட்டங்கள் மற்றும் மேற் சொல்லப்பட்டவர்கள் எல்லாவற்றிலும் தென்கிழக்கு ஆசியக்கலைகள் என்ற காரணத்தினால் ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. அதேவேளையில் தனித்துவத்தையும் பேணுகின்றன. இவை தமக்குள் 'கொண்டும். கொத்தும்' வளர்ந்துள்ளன இவை பற்றிய கலை ஆய்வுகளை பத்மா சுப்பிரமணியம், பாலசரஸ்வதி கார்த்திகா கணேசர், துளசி, நா. முத்துசாமி, அறிவுடை நம்பி, கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு ஆகியோர் மேற் கொண்டுள்ளனர்.

அன்றைய கருத்தரங்கில் எதிரொலித்த கருத்துக்களின் அடியாக ஒரு விடயம் தெற்றெனப் புலப்பட்டது. ஈழத்தின் பல பாகங்களிலும் காணப்படும் மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி கூத்து, மகிடிக்கூத்து யாழ்ப் பாணக்கூத்து, வன்னிக்கூத்து, முல்லைத்தீவு கோவலன்கூத்து மன்னார்க்கூத்து காத்தான் கூத்து, மலையக காமன்கூத்து அருச்சுனன்தபசு, பொன்னர், சங்கர் ஆகியவற்றில் இழையோடும் பொதுத்தன்மைகளைக் கண்டறிந்து, செந்நெறிக் கலையாகக்கூடிய ஆட்ட மரபுகளை உள்வாங்கி ஈழத்து தேசிய நடனவடிவம் ஒன்றை அதற்குரிய கலாசார உடை ஒப்பனையோடு,'இசையோடும் வடிவமைக்கப்பட முடியும் என்பதே.

அன்று கிழக்கிலங்கைக் கூத்து மரபு பற்றியப் பேசிய கலாநிதி சி. மௌனகுருவின் செயலமர்வில் பங்குபற்றிய குழுவினர் பாடிய பாடல்கள்,

(8ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் கேள்விகளும் மாத்தயா பதில்களும்

**1 கேள்வி:**

இன்று விடுதலைப் புலிகள் வரி வசூலிக்கின்றார்கள் அல்லவா? ஒரு ஆசிரியர் தனது உழைப்பில் இருந்து நிதி வழங்குகின்றார். ஆனால் ஒரு கடைக்காரரிடமோ, முடி திருத்துபவரிடமோ நிதி பெறும் போது அந்நிதியை அவர்கள் விலையை அதிகரிப்பதன் மூலம் பெறுகின்றார்கள். குறைந்த வருமானத்தில் மட்டுமட்டாக வாழும் மக்கள் விலை அதிகரிப்புக்களால் பாதிக்கப்படுகின்றார்கள். இதற்கு நீங்கள் கூறும் விளக்கம் என்ன?

**பதில்:**

நாங்கள் வரி பெறும் போது குறைந்த வருமானத்தில் வாழும் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றோம். மக்களின் அத்தியாவசிய பொருட்களான மா, அரிசி, சீனி போன்றவற்றிற்கு நாம் வரி விதிப்பதில்லை.

நாம் வெளிநாட்டுக் குடிவகைகளுக்கும், ஆடம்பரப் பொருட்களுக்குமே வரி விதிக்கின்றோம். மக்களை சுரண்டி இலாபம் பெறுபவர்களிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைப் பெறுகின்றோம். இங்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் வெளிநாடு சென்றோர் அனுப்பும் பணத்தாலும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். வெளியில் இருந்து பணம் பெறுபவர்கள் இங்குள்ள பொருட்களின் உண்மையான பெறுமதியிலும் அதிகமான விலை கொடுத்து பொருட்களை வாங்கத்தவறுவதில்லை அவர்களுக்கு உழைப்பின் பெறுமதி தெரிவதில்லை. இவர்களின் செயலால் சாதாரண மக்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்கள்கிடைப்பதில்லை. இப்படியானவர்களிடம் இருந்து ஓர் குறிப்பிட்ட தொகைப் பணத்தைப் பெறுகின்றோம்.

அரசானது தனது அரச படைக்காக மக்களிடமிருந்து பெரும்வரியில் பெரும்பகுதியை செலவிடுகின்றது. நாம் இனவாத சிங்கள அரச படைகளிடம் இருந்து எம் மக்களைமண்ணைக்காக்க



ஓர்படை வைத்திருப்பது அவசியம் அல்லவா?

நீங்கள் குறிப்பிடுவது போல மக்களைச் சுரண்டி இலாபம் பெறுவோர் நாம் பெறும் வரியையும் மக்களிடம் எடுத்து எமக்குத் தரமுயல்வதாக பலர் எமக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், இது குறித்து நாம் விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

இவர்களை மக்கள் எமக்கு அடையாளம் காட்ட வேண்டும்.

**2 கேள்வி:**

மனிதனை மனிதன் வருத்தி சிலரை மட்டும் சொகுசாக வாழவைக்கும் வரதட்சணைப் பிரச்சினையில் மக்கள் முன்னணியின் நிலைப்பாடு என்ன?

சி. இளங்கோ
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

**பதில்:**

வரதட்சணை வாங்குவதையோ அல்லது கொடுப்பதையோ நாம் எதிர்ப்பவர்கள் இச் செயலை பிற்போக்கான கலாச்சார அம்சம் என்றே கருதுகின்றோம். இச் செயலானது இயக்கக் கொள்கையில் கூறப்பட்டுள்ள பெண் விடுதலை என்ற கருத்துக்கு எதிரானது. எனவே பிற்போக்கான நடைமுறைகளையும், கருத்துக்களையும் பெண் விடுதலைக்கு எதிரான அம்சங்களையும் அகற்றி புரட்சிகரமான புதுமையான சமுதாயத்தை அமைக்க நாம் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பும் கருத்து ரீதியான ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்கின்றோம்.

*மக்களின் கேள்விகளுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தயா) அளித்துள்ள பதில்கள் வாரந்தோறும் வெள்ளி மஞ்சரியில் வெளியாக உள்ளன.*

*இவ்வாரம் முதல் ஆரம்பமாகும் இப்பகுதிக்கு மக்கள் தங்கள் ஆக்கபூர்வமான கேள்விகளை ஈழநாதத்திற்கு அனுப்பி வைக்கலாம்.*

**3 கேள்வி:**

பல துயரங்களுக்கும் மத்தியில் போராடி மரணித்த விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை 1300க்கும் அதிகம். இவர்கள் விலைமதிப்பற்ற தமிழீழம் ஒன்றிற்காகவே மரணித்தார்கள். இது இவ்வாறு இருக்க உங்கள்அமைப்பு இன்றைய சூழலில் மாகாணத் தேர்தலையும் மாகாணசபையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது தேவைதானா? அவசியம் தானா?

ராஜன்
மானிப்பாய்.

**பதில்:**

ஒரு போராட்டமானது இராணுவம், அரசியல், இராஜதந்திரம் என்ற முப்பரிமாணங்களைக் கொண்டது. இன்றைய புதிய சூழலில் இடைக்காலத் தீர்வாக மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட எண்ணுகின்றோம். இத் தேர்தலில் மக்கள் எமக்கு அளிக்கும் ஆதரவு சர்வதேச ரீதியாக எமது சுயநிர்ணயப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்ட பெரிதும் பயன்படும் நீங்கள் கூறியது போல் வீர மரணமடைந்த போராளிகளினதும், போராட்டத்தில் உயிர்நீத்த மக்களினதும் இலட்சியங்களை நாம் மறந்து விடவும் இல்லை கைவிடவும் இல்லை. ஏனெனில் அதுதான் எமது போராட்டத்தின் ஜீவநாடி.

**4 கேள்வி:**

தற்போது இந்தியாவில் முகாமிட்டிருக்கும் 3.000 தேசிய இராணுவத்தினரின் இடையூற்றால் தமிழீழத்தில் பெரும் இரத்தக்களரி சூழ்நிலை ஏற்படுமா? ஏற்பட்டால் அந்நிலையை எவ்வாறு சமாளிப்பீர்கள்? அதாவது அரசியல் ரீதியிலா? இராணுவ ரீதியிலா?

மானிப்பாய். ராஜன்.

**பதில்:**

எமது இலட்சியத்திற்கு எதிராக எமது உரிமைப் போராட்டத்திற்கு இடையூறாக எத்தகைய சக்தி வந்தாலும் அதை எதிர்த்து முறியடிப்பது எமது கடமை. அன்னிய சக்திகளுக்கு ஆதரவாக செயற்பட்ட இத்துரோகிகள் அகற்றப்பட வேண்டியவர்கள் வெற்றி கொள்ளப்பட வேண்டியது என்பதில் நீங்களும் எமது கருத்தையே கொண்டிருப்பீர்கள். இதில் அவசியம் ஏற்படின் இரண்டு நடவடிக்கைகளும் பிரயோகிக்கப்படும். தமிழீழ மக்களின் சுபீட்சமான எதிர்காலந்தான் எமது நோக்கமாக இருக்கும்.

**5. கேள்வி:**

கடமை, வீரம், பாசம் இவை மூன்றில் விடுதலைப் புலிகள் சார்பில் எதை இழக்கத் துணிவீர்கள்?

குமரபுரம். S. S. வதனி

**பதில்:**

நீங்கள் கூறிய மூன்றும் ஒரு போராளியினால், ஒரு இலட்சிய வாதியினால் இழக்க முடியாதவை. ஒரு போராளி தன்னில் தன் குடும்பத்தில், தனது ஊரில், தனது நகரத்தில் பாசம் வைத்திருக்கின்றபடியால் தான் அவன் போராளியாகின்றான். அவன் போராளியாகும் போது இயல்பாகவே வீரம் உள்ளவனாகவும் கடமை உணர்வு உள்ளவனாகவும் இருக்க வேண்டும். ஆகவே இவை மூன்றிலும் எதையுமே ஒரு போராளி இழக்க முடியாது. (அதே வேளை எமது போராளிகள் தமது தனிப்பட்ட ஆசைகளுக்கு ஒரு வித கட்டுப்பாடு விதித்து நின்றே போராட்டத்தை நடத்துகின்றனர்.)

**6 கேள்வி**

எதிரியும் நண்பனாகலாம் நண்பனும்எதிரியாகலாம் பதற்கு சிறந்ததோர் உதாரணம் நீங்களே என்று நான் கருதுகின்றேன் உங்கள் கருத்தென்ன? அப்படியாயின் நாட்டில் இடமின்றி ஒரிசா காட்டில் தங்கியிருக்கும் கும்பலுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:**

முரண்பாடுகள் எமக்குச் சாதகமாக பயன்படுத்துவது புத்திசாலித்தனமான செயலாகும். ஒரிசாவில் இருப்பவர்கள் தங்களது உண்மையான நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இது தான் நாம் அவர்களுக்கு வழங்கும் அறிவுரை.

**7 கேள்வி**

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு பிரதேசப் பொறுப்பாளர்களாக ஆண்கள் இருப்பது போல் ஏன் பெண்கள் இருப்பது இல்லை?

**பதில்**

எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்குபற்றத் தொடங்கி படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்து இன்று ஓர் பெரிய படையணியாக வளர்ந்துள்ளார்கள். ஆணுக்கு பெண் குறைந்தவள் அல்ல என்பதை எமது போராட்டத்தில் பெண்கள் நிலைநிறுத்தி வருகின்றார்கள்

இன்று யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புக்கு ஒரு பெண் போராளியே பொறுப்பாக இருக்கிறார். படிப்படியாக நீங்கள் எதிர்பார்ப்பது நிகழும்.

**8. கேள்வி:**

தமிழீழப் பிரதேசத்தில் தற்போது பூரண அமைதி சமாதானம் நிலவுகின்ற ஓர் நிலையில் நீங்களும் சனநாயக தேர்தற் களத்தில் குதிக்க ஆயத்தமாக உள்ள நிலையில் பாரம்பரிய கட்சிகள் (தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ்) வடகிழக்கில் செயற்பட ஏன் தடை விதிக்கின்றீர்கள்?

**பதில்:**

எந்தக் கட்சி மீதும் நாம் தடை விதிக்கவில்லை. சனநாயக தேர்தலில் யாரும் போட்டியிடலாம் இதை நாம் பல முறை கூறியுள்ளோம்.

---

**களநிகழ்வுகளும்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக் கொள்ள வேண்டும். என்றும் விடுதலைப் போராளிகள் ஏற்றுக் கொள்ளமறுக்குமிடத்து அவர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் நியாயமானவை என்பதை பிரஜைகள் குழுக்கள் ஏற்றுக் கொண்டு அதனை எழுத்து மூலம் தரவேண்டும் என்றும் யாழ். மாவட்ட பிரஜைகள் குழுக்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் இருந்த இராணுவ கொமாண்டர்கள் அறிவித்து இருந்தனர். இந்தத்திட்டத்தை றோவின் ஏற்பாட்

வத்தினர் வைத்தியர்கள், தாதிகள் பெண் நோயாளர்கள், குழந்தைகள் என மொத்தம் எழுபத்து ஒன்பது பேரைச் சுட்டுக் கொன்றனர் என யாழ். வைத்தியசாலை அதிகாரியும் பின்னர் வட-கீழ் மாகாணசபையின் சுகாதார அமைச்சு செயலாளருமான டாக்டர். நச்சினார்க்கினியன் ஜீவசக்தி என்ற சஞ்சிகைக்கு கொடுத்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இதேபோல 1988 ஆம் ஆண்டு தீபாவளி தினமும் நேருவின் வாழ்வின் முக்கியமானதாகும். அன்றைய தினம் தான் இந்தியத் துருப்புக்கள் அவனது நண்

போர்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அந்நிய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அடாவடித்தனங்கள் கெடுபிடிகள் சுற்றி வளைப்புக்கள் மிக மோசமாகவிருந்த வேளையிலும் இந்த மண்ணில் நின்று அவற்றை எதிர்த்துப் போராடி மரணித்த சுக்ளாவின் தியாக வாழ்வு முன்னுதாரணமானதாகும்.

**அச்சுவேலியில் தாக்குதல்**

அச்சுவேலி நகருக்கு அருகமையில் உள்ள வீதி ஒன்றில் விடுதலைப் புலிகளுக்கும் ரோந்து சுற்றிக்கொண்டு

அன்றைய தினம்தான் கப்டன் நேருவும் லெப். குட்டியும் வீரமரணமடைந்தனர்.

இந்த விடுதலை வேங்கைகளுக்கும் - இந்தியஇராணுவத்திற்குமிடையிலான போர் எப்படி ஆரம்பமானது? 16-5-89 அனறு கப்டன் என். கே. சிங் மரணமடைந்ததைத் தொடர்ந்து சுன்னாகம் முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த இராணுவ கொமாண்டர் மேஜர் சுந்தர்சிங் புத்தூர்ப் பகுதிக்குப் பொறுப்பதிகாரியாக அனுப்பப்பட்டான். மேஜர் சுந்தர்சிங் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடுதல்

சுட்டுக் கொல்லப்பட்டான். எதிர்பாராமல் எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக்குண்டு பட்டு கப்டன் நேரு வீரமரணமடைந்தான். நேருவுடன் குட்டியும் தியாக மரணமடைந்தான்.

கப்டன் நேருவும் லெப். குட்டியும் இந்த மண்ணில் விடுதலைப் பயிர்வளர தம்மையே அர்ப்பணித்தனர். போராளிகள் சிந்துவது குருதியல்ல அது ஈழமாதாவின் நெற்றியில் இடும் குங்குமம் என சிரித்திரன் சிவா ஒரு முறை எழுதினார். மரணப்படுக்கையை முதுகில் சுமந்த வண்ணம் மாணக்குள் வாழும்


## விற்பனையாகிறது



இப்படியானவர்களிடம் இருந்து ஓர் குறிப்பிட்ட

எமக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், இது குறித்து நாம்

கள் இச் செயலை பிற்போக்கான கலாச்சார அம்சம்

ஜதந்திரம் என்ற முப்பரிமாணங்களைக் கொண்டது. இன்

எமது இலட்சியத்திற்கு எதிராக எமது உரிமைப்போராட்

ரணம் நீங்களே என்று நான் கருதுகின்றேன் உங்கள் கருத்தென்ன? அப்படியாயின்

நாயக தேர்தலில் யாரும் போட்டியிடலாம் இதை நாம் பல முறை கூறியுள்ளோம்.

---

## களநிகழ்வுகளும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக் கொள்ள வேண்டும். என்றும் விடுதலைப் போராளிகள் ஏற்றுக் கொள்ளமறுக்குமிடத்து அவர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் நியாயமானவை என்பதை பிரஜைகள் குழுக்கள் ஏற்றுக் கொண்டு அதனை எழுத்து மூலம் தரவேண்டும் என்றும் யாழ். மாவட்ட பிரஜைகள் குழுக்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் இருந்த இராணுவ கொமாண்டர்கள் அறிவித்து இருந்தனர். இந்தத்திட்டத்தை றோவின் ஏற்பாட்டின் படி இலங்கையில் இந்திய இராணுவத்திற்குப் பொறுப்பாக லெப். ஜெனரல் கல்கத்தும் யாழ்ப்பாண நகர கொமாண்டராகவிருந்த பிரிகேடியர் காலோனும் செயல்படுத்த முனைந்தனர். இந்த சதித்திட்டத்தின் உள்நோக்கம் விடுதலைப்புலிகள் மீதான இராணுவ நடவடிக்கைகளை நியாயப் படுத்தலும் மக்கள் ஆதரவு தமக்கு இருப்பதாக வெளி உலகிற்குக் காட்டலுமேயாகும்.

இதைக் கேள்வியுற்ற நேரு, குட்டி, கோட்டை சுக்ளா போன்ற போராளிகள் ஒவ்வொரு பிரஜைகள் குழு உறுப்பினர்களையும் சந்தித்து விடுத்த வேண்டு கோளையடுத்து அத்திட்டமே முறியடிக்கப்பட்டது.

### மேஜர் ஒப்றோய் வேண்டுகோள்

கப்டன் நேறாவின் செயல்பாடுகள், போராட்டத்தில் அவன் வகித்த பங்கு என்பவற்றால் மக்கள் ஆதரவு அவன் பக்கமே என்றும் இருந்தது. அச்சுவேலி இந்திய முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த மேஜர் ஒப்றோய் அச்சுவேலி நகரில் ஒலிபெருக்கி மூலம் போராட்டத்தைக் கைவிட்டு நேரு போன்ற போராளிகள் தம்மிடம் சரண் அடைந்தால் தாம் புனர்வாழ்வு அளிப்பதாகவும் அதற்கு மக்கள் நேருவைத் தூண்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அச்சுவேலிப் பகுதியில் முகாமிட்டிருந்த அந்நிய ஜவான்களுக்கு கப்டன் நேரு சிம்ம சொப்பனமாகவே இருந்து வந்தான்.

### 1988 தீபாவளி தினம்

1987 ஆம் ஆண்டு தீபாவளி தினம் தமிழ்மக்கள் வாழ்வில் ஒரு இருண்ட தினமாகும். அன்றுதான் யாழ்ப்பாண வைத்திய சாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினர் வைத்தியர்கள், தாதிகள் பெண் நோயாளர்கள், குழந்தைகள் என மொத்தம் எழுபத்து ஒன்பது பேரைச் சுட்டுக் கொன்றனர் என யாழ். வைத்தியசாலை அதிகாரியும் பின்னர் வட-கீழ் மாகாணசபையின் சுகாதார அமைச்சு செயலாளருமான டாக்டர். நச்சினார்க்கினியன் ஜீவசக்தி என்ற சஞ்சிகைக்கு கொடுத்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இதேபோல 1988 ஆம் ஆண்டு தீபாவளி தினமும் நேருவின் வாழ்வின் முக்கியமானதாகும். அன்றைய தினம் தான் இந்தியத் துருப்புக்கள் அவனது நண்பனான கோட்டை சுக்ளாவை சுட்டுக்கொன்று தமது குருதிப்பசிக்குப் பரிகாரம் தேடிக்கொண்டனர்.

அன்றைய தினம் காலை ஒரு துவிச் சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு நீர்வேலிப் பகுதியில் ஒரு வீதிவழியாக நேருவும் கோட்டை சுக்களாவும் (கதிரிப்பிள்ளை ஸ்ரீ நந்தகுமாரன் -சிறுப்பிட்டி) வந்து கொண்டிருந்தனர். அவ்வழியால் சென்று கொண்டிருந்த மக்களை வழிமறித்து வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவம் நேருவையும் சுக்ளாவையும் வழிமறித்து சோதிக்க முயன்றது. தந்திரோபாயமாக இருவரும் தப்பிக்கொள்ள முயன்ற போது இவர்களை போராளிகள் என அடையாளம் கண்டு கொண்ட இந்தியத் துருப்புகள் இவர்கள்மீது மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எதிர்பாராமல் கோட்டை சுக்ளா மரணமடைந்தான். கோட்டை சுக்ளாவை பற்றி இக்கட்டத்தில் சில குறிப்புகளைக் கூறுதல் பொருத்தமானதாகும்.

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த சென்றியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படியால் இவனை கோட்டை சுக்ளா என்று அழைப்பர். இவன் இயல்பாகவே சுறுசுறுப்பானவன். கண்ணி வெடித்தாக்குதலில் சுக்ளா கைதேர்ந்தவன். பல வெற்றிகரமான கண்ணிவெடித்தாக்குதல்கள். சுக்ளாவின் மதிநுட்பத்தில் நிறைவு பெற்றவையாகும். எல்லோருடனும் அன்பாக பழகும் இவன் கலகலப்பாகப் பேசி பல ஜோக்குகளை சொல்லி எல்லோரையும். சிரிக்க வைப்பான்.

அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் எம் மண்ணில் காலடி வைத்தபோது அவர்களுக்கு எதிராக இவன் நடாத்திய போர்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அந்நிய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அடாவடித்தனங்கள் கெடுபிடிகள் சுற்றி வளைப்புக்கள் மிக மோசமாகவிருந்த வேளையிலும் இந்த மண்ணில் நின்று அவற்றை எதிர்த்துப் போராடி மரணித்த சுக்ளாவின் தியாக வாழ்வு முன்னுதாரணமானதாகும்.

### அச்சுவேலியில் தாக்குதல்

அச்சுவேலி நகருக்கு அருகமையில் உள்ள வீதி ஒன்றில் விடுதலைப் புலிகளுக்கும் ரோந்து சுற்றிக்கொண்டு வந்த இந்திய இராணுவத்திற்குமிடையில் 16-5-1989 அன்று ஒரு மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவுக்கு கப்டன் நேரு தலைமை தாங்கினான். இந்திய இராணுவத் துருப்புகளுக்கு கப்டன் என். கே. சிங் தலைமை தாங்கி வந்தான். மோதலின் முடிவில் என். கே. சிங் சுட்டுக்கொல்லப்பட்டான். இதைத் தொடர்ந்து இந்தியத்துருப்புகள் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியதோடு சில பொதுமக்களைச் சுட்டும் கொன்றனர்.

### இறுதிப்போர்

தமிழ்மக்களது வரலாற்றை எடுத்துப்பார்த்தால் ஜூன் மாதம் 5ஆம் திகதி ஏதோ ஒருவகையில் அரசியல் முக்கியத்துவம் பெற்ற சம்பவங்கள் இடம்பெற்ற தினமாக இருப்பதைக் காணலாம்.

1915ஆம் ஆண்டு இடம் பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரம் அந்த ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி முடிவுற்றது. 1948ஆம்ஆண்டு தொழிற்சங்க போராட்டம் ஒன்றின் போது கந்தசாமி என்ற தமிழர் ஜூன்மாதம் 5ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். 1956ஆம் ஆண்டு ஜூன்மாதம் 5ஆம் திகதிதான் தமிழ் மக்களமீது மொழி ரீதியான ஒடுக்குமுறை திணிக்கப்பட்டது. அன்றுதான் 33 ஆம் இலக்க சிங்கள மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அன்று காலிமுகத்திடலில் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் சிங்களக்காடையரால் தாக்கப்பட்டனர். 1974ஆம் ஆண்டு ஜூன்மாதம் ஐந்தாம் திகதி தீவிரவாதியான தியாகி சிவகுமாரன் தியாக மரணமடைந்தான். இந்தவகையில் பார்க்கும் போது 1989ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் திகதியும் முக்கியத்துவம் பெற்ற நாளாகும்.

அன்றைய தினம்தான் கப்டன் நேருவும் லெப். குட்டியும் வீரமரணமடைந்தனர்.

இந்த விடுதலை வேங்கைகளுக்கும் - இந்தியஇராணுவத்திற்குமிடையிலான போர் எப்படி ஆரம்பமானது? 16-5-89 அனறு கப்டன் என். கே. சிங் மரணமடைந்ததைத் தொடர்ந்து சுன்னாகம் முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த இராணுவ கொமாண்டர் மேஜர் சுந்தர்சிங் புத்தூர்ப் பகுதிக்குப் பொறுப்பதிகாரியாக அனுப்பப்பட்டான். மேஜர் சுந்தர்சிங் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் அவசியமாகும். இந்த மேஜர் சுன்னாகம் பொறுப்பதிகாரியாக இருந்தபோது அப்பகுதியில் பல அப்பாவி இளைஞர்களை கைதுசெய்து முகாமில் அடைத்துவைத்து சித்திரவதை செய்தார். இவ்வாறான சித்திரவதைகளின்போது பல இளைஞர்கள் முகாமிலேயே இறந்தார்கள். இவ்வாறாக முகாமிற்குள் இறந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவனை அம்மியோடு கட்டி சுண்ணாகம் புத்தூர் வீதியில் உள்ள கொத்தியாலடி என்ற ஊரில் ஒரு பாழ்கிணற்றுள் தள்ளிய கொடுங்கோலன் இந்த மேஜர் சுந்தர்சிங்.

புத்தூர்ப்பகுதிக்கு மாற்றலாகி வந்த மேஜர் சுந்தர்சிங் தனது சகாவான என். கே. சிங்கை சுட்டுக்கொன்ற போராளிக்குழுவின் தலைவன் கப்டன் நேருவை தேடி வலை விரித்தான். இந்திய இராணுவத்தால் மிக மோசமாகத் தேடப்பட்ட போராளிகளின் பட்டியலில் நேருவின் பெயரும் நீண்டகாலமாகவே இருந்தது. யாரோ ஒரு தமிழ்த் துரோகியின் இரகசியத்தகவலைப் பெற்றுக் கொண்டே சுந்தர்சிங், நேரு தனது தோழர்களோடு இரவில் புகலிடமாகப் பாவித்த புத்தூரிலுள்ள கண்டிக்காடு என்ற கிராமத்தின் கோயில் ஒன்றை ஒரு நாள் அதிகாலை தனது படைகளுடன் சுற்றி வளைத்தான். அங்கே நேரு, குட்டி ஆகியோருடன் இன்னுமொரு வீரமறவனும் தங்கியிருந்தான் இரு பகுதியினருக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. கப்டன் நேருவும் லெப். குட்டியும் மற்றுமொரு போராளியும் நடாத்திய கடும் தாக்குதலில் ஐந்து இந்திய இராணுவ சிப்பாய்கள் வீழ்ந்து மடிந்தனர். நேருவின் துப்பாக்கி குறிதப்பாது மேஜர் சுந்தர்சிங்கை இலக்கு வைத்துப்பாய்ந்தது. சுந்தர்சிங்கும் சுட்டுக் கொல்லப்பட்டான். எதிர்பாராமல் எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக்குண்டு பட்டு கப்டன் நேரு வீரமரணமடைந்தான். நேருவுடன் குட்டியும் தியாக மரணமடைந்தான்.

கப்டன் நேருவும் லெப். குட்டியும் இந்த மண்ணில் விடுதலைப் பயிர்வளர தம்மையே அர்ப்பணித்தனர். போராளிகள் சிந்துவது குருதியல்ல அது "ஈழமாதாவின் நெற்றியில் இடும் குங்குமம் என சிரித்திரன் சிவா ஒரு முறை எழுதினார். மரணப்படுக்கையை முதுகில் சுமந்த வண்ணம் மரணத்துள் வாழும் போராளிகள் தம்மை அர்ப்பணிப்பதால் தான் இனம் வாழ்கின்றது. அவர்களது மரணம் ஒரு முடிவல்ல. இதனால் தான் போராளிகளை மரணிக்கும் தெய்வங்கள் என சிரித்திரன் சிவா மேலும் குறிப்பிடுகின்றார். கப்டன் நேருவும் லெப். குட்டியும் இன்னும் 1355 விடுதலைப் புலிகளும் தியாகத்தில் ஆகுதியானமையால் தான் அவர்களது நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் பதிவாகியுள்ளன. □

## கெவிலியாமடு

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகள் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன. குடிமனைகள் இருக்கவில்லை என கருதும் நிலைக்கு அழிக்கப்பட்டுள்ளன. பயன் தருமரங்கள் எதுவும் இல்லை. ஒரேயொரு தென்னை மரம் மட்டும் காணப்படுகிறது.

கெவிலியாமடு குடியேற்ற விவகாரத்திற்கு ஸ்ரீ லங்கா அரசுடனான பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கியத்துவம் கொடுப்பார்கள்,

கிராம வாசிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தக் கூடியவர்கள் என்ற உறுதியுடன் தைரியத்துடன் இருக்கிறார்கள்.

கடந்த இரு வருடங்கள் முன்பு மேற்படி கிராமவாசிகளிடம் காணப்பட்ட வாட்டம் இன்று இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இக் கிராம வாசிகளை மீளக் குடியமர்த்தலுக்கும் ஏனைய கிராமவாசிகளை மீள குடியமர்த்துதலுக்குமிடையில் ரொம்ப வித்தியாசங்கள் உண்டு.

மீளகுடியமர்வு அலவன்ஸ் மூலம் வீடமைப்பு நிவாரணம் வரை வழங்கிவிடுவதன் மூலம் மீளக்குடியமர்வு பிரச்சினை தீர்ந்து விட்டதாக கருத முடியாது.

இவர்கள் எல்லைக் காவலர்கள். இனவாத சக்திகளின் சில நடவடிக்கைகளினால் எதிர்பாராத அசம்பாவிதங்கள் இடம் பெறலாம். இதனால் பாதுகாப்பு கருதிஇடம் பெயரலாம்.

இந்நிலையில் நேரடியாக தமிழ் பகுதிகளுக்கு வருகை தருவதற்கான பாதைகள் அமைக்கப்படல் வேண்டும்.

மருந்தகம், கூட்டுறவு, உபதபால் நிலையம் போன்ற அடிப்படைவசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படல் வேண்டும்.

இக்கிராம மக்களுக்கான பாதுகாப்பு சூழல் உருவாக்க ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் வாபஸ், பொலிஸ் நிலையம் முடுதல், குடியேற்றத்திட்டம் அகற்றப்படல் தவிர வேறு வழி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இல்லையேல் இன்று 55 குடும்பங்கள் நாளை 550 ஆக பெருகிவிடும் என்பதை கடந்த கால நிகழ்வுகள் எமக்கு சான்றுகளாக அமைந்துள்ளதல்லவா?

## வெண்தோல்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

(Acupuncture) வைத்தியமும் பயனளிக்கிறது.

இது ஆபத்தற்ற நோயானாலும் பாதிக்கப்பட்ட நபருடைய மனோநிலையையும், தனித்தன்மையையும் பிறர் நடுவே பாதிக்கவே செய்கிறது. எனவே அவரை நோயாளி என ஒதுக்கவும் வேண்டாம். பாதிப்புக்கு ஆளானவர் என பரிதாபம் காட்டவும் வேண்டாம் ஏனைய சாதாரண மனிதர்களுடன் பழகுவது போல அவர்களுடனும் பழகி அவர்களையும் சமூகத்தில் இணைந்து வரச் செய்யுங்கள். □

## ஈழத்தமிழருக்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடிய ஆட்ட முறைமைகள் என்பன அவற்றை ஒரு செந்நெறிக்கலையாக வளர்த்தெடுக்கக் கூடியவை என உணர்த்திநின்றன.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கலைமீட்புப் பயணத்தின்போது அவர் மட்டக்களப்பில் காணப்படும் வடமோடி, தென்மோடி கூத்துவகைகளிலே நுணுக்கமான ஆட்டமுறைகளை கண்டார். அதனாலே அதனை நவீன மேடைக்கு கொண்டு வந்தார். எமது அடுத்த கட்ட வளர்ச்சியாக நாம் அதனை எமது தேசிய நடனவடிவமாக ஆக்குவதே நம்முன் உள்ள பணியாகும். இப்பாரம்பரியத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் எமது குழுமத்தின் சமூகப்பிரக்ஞையை பேண முடியும். □


## விற்பனையாகிறது




இதுவரை நிதர்சனம் வெளியீடாக வந்த பாடல்களில் மிகச் சிறந்தவற்றின் தொகுப்பாக வெளிவந்துள்ள 'கஸெற்' இப்போது விற்பனைக்கு வந்துள்ளது.